# GITODAYAM

3345

A TAMIL DRAMA

V. V. Srinivasa Aiyangar

PRINTED AT
EVERYMANS PRESS, MADRAS
AND PUBLISHED BY
P VARADACHARY & CO., MADRAS

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE,
MADRAS.

TO

RAO BAHADUR

P. SAMBANDA MUDALIAR

My dear Sambandam,

It is now nearly fifty years since that bright forenoon, when, as little boys, meeting for the first time, we accosted each other with a smile. I recollect even now not only that sweet smile but also your long plaited hair and the suit of pink English chintz you were then wearing. Since that memorable day, we have passed through life, more or less together and as good friends The last forty out of these fifty years, you have devoted to render services and sacrifices for the cause of the Tamil Drama and the Tamil Stage You have cherished them, in truth and in fact, as the main purpose of your life. The heroic single-heartedness and devotion with which you have pursued that purpose will be your lasting memorial, long after you and I shall have passed away. To your leading or misleading me, I have owed and owned such interest as I have evinced in the written drama and the enacted play, and also in the principles and philosophy of both those supreme arts. For the first time, so late in life, I have dared to write a Drama

in Tamil. It is the latest ripe fruit of all I have read and thought and lived. To whom else can I offer it? Please therefore accept it from me as the sincere, if not an altogether worthy, offering of affection and admiration. I have attempted in this Drama to present Sri Krishna, the great Gitacharya, not as traditionally rendered, a divine child given to pranks and mischiefs and to common lying and stealing, but as the child, the father of the man as the poet says, who was destined in the maturity of time to preach the immortal Gita. To such an ambitious task I have been impelled, not by any complacent consideration of my qualifications but only by an impatient and earnest desire, at least, to reveal to the public, the propriety and the possibility of such a rendering. I have endeavoured, I hope, without marring and with what measure of success it will be for the public to judge, so to render the talk and play of Sri Krishna as to suggest and reveal in the dawn of his life those little rays of the sun of Vedantic thought which was to attain its meridian in the Bhagavad Gita. Even in pictorial art, which, with reference to Sri Krishna, is prolific in this country, the childhood of

the Gitacharya has not received any adequate treatment.

If in the supreme and famous pictorial art of Raphael's "Sistine Madonna," the child Christ can be presented, so as to retain the child and show the future Christ, why should not the Gitacharya be similarly represented in the great sister art of the Drama?

May He sanctify and grace, this poor attempt of mine which I have put forth in all sincere humility.

With sincere and affectionate regards

"Vani Vilas"<br>
13th April '32.

Yours, as ever,<br>
V. V. SRINIVASAN.

# முகவுரை

ஸ்ரீ க்ருஷ்ணனுடைய குழந்தைப் பருவத்தையும், அதி பால்ய தசையையும் விஷயமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது இந்நாடகம். நான் சிறுவனாயிருந்த காலம் முதல், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய சரித்திரத்தைச் சிறிய நாடகமாக எழுதவேண்டுமென்னும் எண்ணம் என் மனதில் குடிகொண்டுள்ளது. ஆயினும் நாற்பது வருஷங்களாக அவ்வெண்ணம் ஈடேறும் காலம் ப்ராப்தமாகவில்லை. அதுவுமன்றி எனக்கு ஆங்கிலேய பாஷையிலேயே அதிக அபிருசியும் பரிசயமும் அநேக வருஷங்களாய் நேர்ந்திருந்தமையால், தமிழில் இவ்வித நாடகமொன்றை எழுத மனம் துணியவில்லை. அப்படியிருப்பினும் அவ்விஷயமாக என் மனதில் அவ்வப்பொழுது உண்டானவையும் சேர்ந்து வந்தனவுமான எண்ணங்களை வீணாக்கக்கூடாதென்ற தீவிரமான ஓர் ஆவல் உண்டானதால், அதுவே இந்நாடகம் எழுதி முடிக்கப் போதுமான காரணமாய் ஏற்பட்டுவிட்டது.

எனக்குத் தெரிந்த வரையில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பால சரித்திரமானது புராணங்களிலும், காவ்யங்களிலும், மற்ற க்ரந்தங்களிலும், அமானுஷமானவும் தெய்வீகமுமான ஓர் சிறு பிள்ளையின் சேஷ்டைகளாகவும், சேஷ்டிதங்களாகவுமே சொல்லப்பட்டும் வர்ணிக்கப்பட்டும் இருக்கின்றது. துஷ்டச்செயல், பொய் சொல்லல், களவாடல் முதலிய அக்ருத்யங்களை, அவ்வவதார மூர்த்தியின்மேல் ஆரோபித்து அவைகளில் ஓர் பக்தி அதிசயத்தை உண்டாக்கிக்கொண்டு நம்மவர்கள் ஆனந்தப்பட்டு வந்திருக்கின்றனர். இவ்வித

மான காரணங்களைப் பற்றியே தற்கால நீதியை அனுசரித்து வரும் சரித்திர பரிசோதகர்கள் பாகவத க்ருஷ்ணன் வேறென்றும் கீதாசார்ய க்ருஷ்ணன் வேறென்றும் கூட சில (தங்களுடைய) அபிப்ராயங்களை வெளியிட்டுள்ளார்.

'விளையும் பயிர் முளையிலே' தெரியுமென்கிற பழமொழி தான் பொய்யோ, அல்லது ஸ்ரீ க்ருஷ்ணனுடைய சரித்திரத்தில் மாத்திரம் அந்த தத்வம் வேறாகுமோ என்பதை யெல்லாம் யோசிக்கப் புகுந்தபொழுது முதிர்ந்த வயதில் கீதாசார்யனாக வேதாந்தாம்ருதத்தை வர்ஷித்த மூர்த்தி தனது பால்ய தசையில் அப்பருவத்திற்கேற்ற வார்த்தைகளிலும் வேதாந்தார்த்தங்களை த்வனிக்கப்பெற்றனவும், அர்த்த கர்ப்பமாயுள்ள வார்த்தைகளையே பேசியிருக்கவேண்டுமென்றும், அவர் செய்த லீலைகளும் சேஷ்டைகளுங் கூட தத்வங்களையும், தர்மங்களையும், சூசிப்பிக்கிறவைகளாய் இருக்கவேண்டுமென்றும் நிச்சயித்து அவ்விதமே ஸ்ரீ கிருஷ்ணனை இந்நாடகத்தில் பிரதாசிப்பிக்க முயலலானேன்.

பாலன் ஒருவன் வேதாந்தம் பேசுவது இயற்கைக்கு விரோதமாகும். சொல்லும் வார்த்தைகள் அப்பருவத்திற்கு ஏற்றனவாகவே யிருக்கவேண்டும். ஆயினும் காலாவட்டத்தில் கீதாசார்யனாகப் போகிற வ்யக்தி பால்ய தசையில் எவ்விதமாய் நடந்தும் பேசியும் இருக்கவேண்டும் என்று ந்யாய ரீதியில் யோசித்தறிந்து ப்ரதாசிப்பிக்கப்படலாம் அல்லவா? மேலும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகளாக விவரிக்கப்பட்டும் வர்ணிக்கப்பட்டுமுள்ள சேஷ்டைகள் சேஷ்டிதங்கள் யாவும் ஓர் தர்ம ஸூக்ஷ்மத்தை வெளிக்காட்டக் கூடியதாகவே நான் கண்டறிந்த விஷயத்தையும் இந்நாடகத்தில் ஒருவாறு சூசிப்பிக்க முயன்றிருக்கின்றேன். இது விஷயங்களிலெல்லாம் என்னுடைய முயற்சியானது எவ்வள

விலாவது பயன்பட்டதோ இல்லையோ என்கிற விஷயத்தில் இதைப்படிக்கிறவரும், நடித்துப்பார்க்கிறவருமான ஸஹ்ருதயர்களே கண்டறிந்து கூறவல்லார்.

இந்நாடகம் எழுதிவருங்கால் ஸங்கல்பித்த முடிவிற்கு சமீபமான ஓரிடத்தில், மொத்தம் எத்தனை காட்சிகளாயின, இன்னும் எத்தனை காட்சிகள் எழுதவேண்டுவன என்று கணக்குப் பார்த்தபொழுது, அகஸ்மாத்தாய் பதினெட்டென்று ஏற்பட்டதால், அது விஷயத்தில் என் மனம் குதூஹலித்து, அதையே நான் ஓர் தெய்வீக சூசகமாக பாவித்து இந்நாடகத்தில் அமைந்துள்ள பதினெட்டு காட்சிகளையும், ஜயசப்தாங்கிதமான பதினெட்டென்னும் எண்ணால் நிரம்பிய மஹா பாரதத்தின் நடுவில் கௌஸ்துப ரத்னம் போல் விளங்கும் கீதையின் அத்யாயங்களை ஞாபகப்படுத்தக்கூடிய பெயர்களும் இட்டு நாடகத்திற்கே "கீதோதயம்" என்கிற ஸங்கல்பார்த்த சூசகமான நாமகரணமும் செய்திருக்கிறேன். அதைப் பெரியோர்கள் என்பால் அதிக ப்ரசங்கமாகவாவது காவ்யப் ப்ரகாரமாகவாவது கொள்ளாமல் கேவலம் ரஸ சூசகமாக மாத்திரம் கருதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

நாடக பாத்திரங்களைக்கொண்டு கதையைச் சொல்வது மாத்திரம் நாடகமாகாது என்று கருதி, நாடகத்திற்கு கருவிஸ்தானமாயும் ஜீவஸ்தானமாயுமுள்ள பாத்ராநுகுணமான சம்பாஷணையையே அவலம்பித்து இந்நாடகத்தை ஒருவாறு எழுதியிருக்கிறேன். ஆகையால் ஒவ்வோர் இடத்திலும் சம்பாஷணையின் ரஸங்களும் அமைந்திருக்கலாம் என்று நம்புகிறேன். அவைகளையும் ரஸிகர்கள் கண்டு அறிந்து ஆனந்திக்கக்கூடும். கீதாசார்யனுக்கு ஆஸேது ஹிமாசலம் நம்மவர்களால் கொண்டாடப்படும் அவதார மூர்த்திக்கு

“சீதோதயம்” எனும் இந்நாடகத்தை கிஞ்சித் கைங்கர்ய ரூபமாக எழுதி முடித்தேனேயொழிய, அந்த அவதாரத்தின் அதிசயத்தையும், ஞானானந்த சக்திகளையும் அளவிட முயன்றவனாக நான் எழுதினவன் அல்லன். இதைப் படித்துப்பார்ப்போரும், நடித்துப்பார்ப்போருங்கூட அவ்விதமே இதை மதித்து குற்றங் குறைகளை மன்னிக்கக்கடவர்.

இம்முகவுரையை முடிக்குமுன் இந்த விஷயத்தில் எனக்கு உபகரித்துள்ள அநேகருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்

இந்நாடகத்தை எழுதும் விஷயத்தில் என்னுடைய குமாரன் சிரஞ்சீவி ராமதுரையும், என்னுடைய மாப்பிள்ளை சிரஞ்சீவி கே. சுந்தர ராகவனும் இங்கிதமறிந்தவர்களாய் எனக்கு உபகாரம் பெரிதும் செய்துள்ளார். ஸ்ரீமான் பண்டித மு. ராகவய்யங்கார் அவர்கள் இந்நாடகத்தை அச்சிடுமுன் படித்துப்பார்த்ததற்காக வந்தனம் செலுத்துகிறேன். அதுவுமன்றி எனது நண்பன் அட்வகேட் சிரஞ்சீவி தி. கோ. ஆராவமுதனுக்கு இந்நாடகம் அச்சிடுவதில் பிழை திருத்தி உபகரித்ததற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். மேலும் இந்நாடகத்தை அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்த வரதாச்சாரி கம்பெனியார் முதலாளியான ஸ்ரீமான் கோவிந்தாச்சாரியர் அவர்களுக்கும் அச்சிடும் விஷயத்தில் என்னுடைய கவலைகளையும் கார்யங்களையும் ஏற்றுக்கொண்டு உபகரித்த என் நண்பன் தே. சுந்தரவரதனுக்கும் நான் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வாணி விலாஸ்,
ஆங்கீரஸ ௵ சித்திரை ௴ 1௳

வ. வே. ஸ்ரீனிவாஸன்.

# நாடக பாத்திரங்கள்.

நந்தகோபர் ... கோகுலத்து இடையர்களுக்கு

... கோகுலத்தில் நந்தகோபர் குமாரனாய் வளர்ந்து வருகிற வசுதேவ புத்திரன்.

கம்ஸன் ... மதுராபுரி அரசன்.

பலராமன் ... ரோஹிணியின் மைந்தன்.

உபநந்தர் ... ஓர் வயது முதிர்ந்த கோபர்.

பட்டணத்தான், பசுபதி இன்னும் இதரர்களும் } கோபர்கள்.

ராமன், லக்ஷ்மணன், குள்ளன், கருப்பன், இந்திரன், இன்னும் இதரர்களும் } கிருஷ்ணனுடைய தோழர்களான கோபால பாலர்கள்.

ஜகந்நாத வாசஸ்பதி } ஓர் ஜோஸ்யர்.

நாரதர், வியாஸர் } மஹர்ஷிகள்

யசோதை ... நந்தகோபர் மனைவி.

| | | |
|---|---|---|
| ரோஹிணி | . | பலராமன் தாயார். |
| லக்ஷ்மி<br>பத்மா<br>நளினி<br>ஸரஸ்வதி<br>கமலா<br>தங்கம்<br>குமுதா<br>நீலா<br>ராதை<br>கோமளம்<br>சந்திரா<br>இன்னும் இதரர்களும் | } | கோபாலஸ்திரீகள். |
| பூதனை | ... | ஓர் ராக்ஷஸி |
| தாதி | .. | கிருஷ்ணனை எடுத்து வளர்ப்பவள். |
| மற்றும் | .. | இடைச்சிகள், சேவகர்கள், காவற்காரர்கள், வாசற்காப்போர் முதலானவர்கள். |

# அட்டவணை


| | | | பக்கம். |
|---|---|---|---|
| உதய யோகம் | ... | ... | 1 |
| கோபிகா மனோபாவ யோகம் | | ... | 10 |
| புருஷோத்தம யோகம் | . | ... | 17 |
| அஸுராஸ்தமன யோகம் | ... | ... | 23 |
| தைவாஸுர யோகம் | ... | ... | 31 |
| கோபால மனோபாவ யோகம் | | ... | 41 |
| நவநீத ரகஸ்ய யோகம் | ... | ... | 49 |
| விபூதி யோகம் | ... | . | 64 |
| ஸ்வகர்ம யோகம் | ... | ... | 72 |
| நவநீத சௌர்ய ரகஸ்ய யோகம் | | . | 89 |
| பந்தன மோக்ஷ யோகம் | . . | .. | 128 |
| ஆஸ்ரித சமரக்ஷண யோகம் .. | | ... | 156 |
| விஷபோக மர்த்தன யோகம் | | ... | 165 |
| துஷ்ட நிக்கிரஹ யோகம் . . | | ... | 167 |
| தத்வ நிர்ணய யோகம் | ... | ... | 173 |
| சிஷ்ட பரிபாலன யோகம் | ... | ... | 181 |
| ஸமாராதன யோகம் | ... | ... | 186 |
| ஆனந்த ஐக்கிய யோகம் | ... | ... | 204 |

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE.
MADRAS.

# கீதோதயம்

## முதல் காட்சி.

### உதய யோகம்.

கோகுலத்தில் ஓர் இடம்.

சூர்யோதய காலம்.

நாரதர்

(ப்ரவேசித்து)

ஆஹா! என்ன ஆஸ்சர்யமான சூர்யோதயம்! சூர்யபகவான் உதயமானவுடன் பூலோகத்தைக் கவிழ்ந்து மூடிக்கொண்டிருக்கிற இருட்டெல்லாம் த்வம்ஸமாய் எங்கேயோ ஓடி ஒளித்துக்கொள்கிறது. அது மாத்திரமோ! ஜீவகோடிகளும் தங்களையே மறந்து ம்ருத ப்ராயமான ஸ்வப்நாவஸ்தையினின்றும் புநர்ஜனமம் பெற்றவர்கள்போல் தங்கள் தங்கள் கருமங்களை உத்ஸாஹத்துடன் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அழகான பக்ஷங்களுடைய பக்ஷிகள் சூர்யோதயத்தைக் கண்டதும் களிகூர்ந்து தங்கள் இரண்டு பக்ஷங்களைக்கொண்டு யதேச்சையாய் ஆகாசத்தில் பறந்து ஆடிப்பாடி ஆநந்தம் அடைகின்றன. சூர்யோதயம் இல்லாவிட்டால் எப்பொழுதும் ஒரே காள ராத்ரியாய் இருக்குமல்லவா? இப்போர்க்கொத்த சூரியோதயத்தின் ஆஸ்சர்யத்தையும் அத்பு

த்தத்தையும் கண்டு ஆநந்திக்கிறதற்காகவே ராத்ரியும் இருட்டும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன போலும். இப்படிப் பட்ட ஸூர்யோதயமானது லோகத்திற்கே ஓர் விபவமாய் இருந்தபோதிலும் எவ்வளவு நிசப்தமாயும் ஒருவித மான ஆடம்பரமுமின்றி நடந்தேறுகிறது. மஹான்க ளுடைய எல்லாக் கார்யங்களும் இவ்விதமே போலும். இந்த ஸூர்யோதயம் என்பதின் எட்டுதற்கரிய கலைகளின் மஹிமையை நாம் ஒவ்வொரு தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறோமானாலும் ஒவ்வொரு நாளும் நமக்கு அழகாயும் அத்புதமாயும் புதிது புதிதாயுமுள்ள பதார்த்தங்கள் தோன்றுகின்றனவன்றோ! அதிருக் கட்டும்: அதைவிட மற்றொரு மஹதாஸ்சர்யம் ஏற் பட்டதே இன்றைக்கு. வைகுண்ட லோகமான பரம பதத்தைக் குறித்துச் சென்றுகொண்டிருந்த நான் யாது காரணத்தினாலோ ஆகர்ஷிக்கப்பட்டவன் போல் இந்த நந்தகோபருடைய கோகுலம் வந்து சேர்ந்தேன். இதில் ஏதோ பரம ரஹஸ்யமிருக்க வேண்டும் (சிறிது யோசித்து) ஆமாம்! அப்படித்தான் இருக்க வேண்டும். பகவானுடைய அவதாரம் ஏற்கனவே ஆய்விட்டிருக்கக்கூடுமா? அல்லது அவதரணத்திற்குப் பூர்வமே இவ்வித ஆகர்ஷணசக்தி பூலோகத்திற்கு ஏற்பட்டுவிட்டதா? ஆஹா! இன்றைய தினமல்லவா சங்கல்பித்த தினம்; மதுரையல்லவா குறிக்கப்பெற்ற ஸ்தலம்? நம்மையே பிரமிக்கச் செய்கிறது போலும், பகவானுடைய மாயை. அதோ வருகிறவர், மஹர்ஷி, யார் — ஓ — வேதவியாஸரோ? — நல்லது: அவரைக் கேட்டுத் தெரிந்து தெளியலாம்.

[வேதவியாஸர் பிரவேசிக்கிறார்.]

வேதவியாஸர்.

*அத்புதமான சூர்யோதயகாலம். அதைக் கண்டு களிக்கத்தான் முந்தி வந்துவிட்டார் போலிருக்கிறது நாரத பகவான், வழக்கம் போல!*

நாரதர்

*முந்தினவன் பிந்தினவன் என்கிற தத்வம் தெரியாமலே தான் திகைத்திருந்தேன். அவ்விதம் சம்சயத்தை வகுத்துக் கூறிப்போக்க வல்லவர் தம்மைத் தவிர இவ்வீரேழு புவனங்களிலும் வேறு யார்தா-முளார்? தேவரீர், இந்த நற்சமயத்தில் விஜயஞ்செய்தது சுபசூசகம்.*

வேதவியாஸர்.

*முதல்வன்தான் முந்தினவன் எனும் கொள்கையே சத்தியமல்லவா? ராத்திரி பூலோகத்தை மூடின மையிருட்டு வெறும் இருட்டல்ல!*

நாரதர்.

*ஆமாம், ஸம்ஸார ஸாகரத்தினின்றும் வெளிவந்து வருங்கூட மாயா சக்கரத்தை மீறுவதெப்படி!*

வேதவியாஸர்

*மீறுவானேன்? நிவர்த்திக்க முடியாததில் நித்திய ருசியை உண்டாக்கிக் கொள்வதுதானே!*

நாரதர்.

*(தூரத்தில் ஆநந்தக்களி கேட்கிறது)* *நல்லது.— இதென்ன ஆநந்தக்களி கேட்கிறது?*

### வேதவியாஸர்

*அபிநவ பரிபூர்ண பகவதவதாரமான ஸ்ரீ கிருஷ்ண ஜனனமானதால் ஜீவகோடிகளே ஆநந்திக்க வேண்டுமல்லவா!*

*[கோபர்கள் சர்க்கரை வழங்கியும் ஆடியும் பாடியும் வருகிறார்கள். அவர்களைக்கண்டு மஹரிஷிகள் இருவரும் மறைகிறார்கள். பட்டணத்தான் எனும் ஓர் கோபன் சர்க்கரைக்கூடையை எடுத்துக்கொண்டு வருகிறான். அநேக இடையர்கள், ஸ்திரீகள், புருஷர்கள், கூட வருகிறார்கள்.]*

### பட்டணத்தான்.

*நம்ம ராஜாவுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தது!*

*சர்க்கரை! சர்க்கரை!*
*தித்திப்புச் சர்க்கரை!*
*திவ்யமான சர்க்கரை!*
*விலைவாசி இல்லை*
*திருட்டுப் புரட்டில்லை.*
*எல்லாரும் வாருங்கள்!*
*வேண்டியவர் கேளுங்கள்*
*வயிறுநிறையத் தின்னுங்கள்*
*ஆடிப்பாடிக் களியுங்கள்.*

### ஓரிடையன்.

*என்னய்யா, விசேஷம்?*

பட்டணத்தான்.

(ஒருகை சாககரை கொடுததது)—இதோ, இநதா,—சாபபிடு சாககரை,—பிளளை பிறநதது நமம ராஜா-வுக்கு.

ஓரிடைசசி

அது என்று அணணே, நீஙகளே சாப்பிடுகிறீங்கோ, எனககிலலேயா?

பட்டணததான்.

இநதா, பிடி சாககரை: ஆண பெண் அடஙகலாக குநதான, சாபபிடு.

இடைசசி.

(ருசி பாாதது) அமமா—தித்திபபாயிருக்குதே.!

பட்டணததான்.

இனனும வேணுமா? இநதா சாபபிடு வேண்டுமளவு.

இடைச்சி.

அநதக் கூடையோடே கொடுத்துடு, அண்ணே.

பட்டணத்தான்.

பாாத்தையா ஆசையை? கொஞ்சம் கிடைத்தால் கோவர்ததனம் வேணுமாம. (இன்னு மொரு பிடிகொடுதது) இனிமேல் கேடகாதே.

இடைச்சி.

இதற்கு என்ன பேரு? நல்ல பேரா ?' வாய் வழியெல்லாம் தித்திக்கிறதே ! இதெப்படி சுடுகிறதண்ணே?

பட்டணத்தான்.

*நாட்டுப்புறத்தாருக்கு என்ன தெரியும் நகரத்துச் சர்க்கரை. சொல்லுகிறேன் கேள். கரும்புத் தடிகளை எடுத்து துண்டு துண்டாய் வெட்டி ஆலையிலே போட்டுக் கசக்கிப் பிழிந்தால் ஒரு ரசம் வெளியே வரும். அதை யெடுத்து நெருப்பிலே காய்ச்சிக் காய்ச்சிப் பக்குவமாய்ப் பதம்பார்த்து இறக்கினால் தித்திப்புச் சர்க்கரை உண்டாகும்.*

இடைச்சி.

*அம்மம்மா! அத்தனை கஷ்டமா! சும்மா கிடைச்சா சும்மா திங்கலாம்.*

பட்டணத்தான்.

*எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேணும்.*

[*நாரதரும் வியாஸரும் வெளிவந்து*]

நாரதர்.

*பாராசர்யரே! நாமும் இவ்விடையர்களோடு சம்பாஷித்துப் பார்ப்போம். காலோசிதபாவனை சௌலப்ய மல்லவா.*

வியாஸர்.

*பகவத் குணானுபவத்தில் அக்ரேசரர்களாயிருக்கப் போகிற இந்த மஹாதிருஷ்டவான்களான கோபாலர்களிடத்தில் நமக்கெல்லாம் சௌலப்ய அப்பியாஸத்திற்குக் கூட ப்ரமேயமேது?*

நாரதர்.

*பரத்வ சௌலப்யங்களான பரமாத்ம குணங்கள் வர்ஷாகால மழையைப்போல வர்ஷிக்கப் போகிற*

அவதார தசையில் மஹாரஷிகளான நாம உபய ப்ரஷ்டர்களானாலும அந்த மழையில நனையாமலிருக்க முடியுமோ? [பட்டணத்தானைக குறித்து] என்ன ஐயா, விசேஷம கோகுலத்தில, சாக்கரை வழங்க?

பட்டணத்தான்.

அடே டே டே டே!—ரிஷிங்க கூட வந்தூட்டாங்கடா நமம சாக்கரையை தின்ன. ஆனா நீங்கள்ளாம் பெரியவங்களாச்சே, நாங்கள்ளாம இடையாராச்சே. நாங்க வழங்கும சாக்கரை உங்களுக்குதவுமா?

வியாஸர்.

நீங்கள் வழங்கும சாக்கரை எங்களுக்கும், எல்லாருக்கும உதவும.

பட்டணத்தான.

ஆனா இந்தாங்கோ கூடையோடே எடுத்திண்டு பூடுங்கோ.

நாரதா.

கூடை சாக்கரையை தூக்கவாவது தின்னவாவது ப்ராப்தம எங்களுக்கில்லை. நல்லது, சர்க்கரை வழங்கக் காரணமென்ன?

பட்டணத்தான்.

உங்களுக்குத் தெரியாது? கூச்சல போட்டது கேட்கவில்லையா? எங்க ராஜாவுக்கு பிள்ளையாய் பிறந்தது.

நாரதர்.

(புன்னகை கொண்டு) எது?

பட்டணத்தான்.

என்ன,—எதுவா? புருஷப்பிள்ளை, ஐயா!

வியாஸர்.

புருஷோத்தமன் பிறந்தானோ?

பட்டணத்தான்.

என்ன, சொல்றீங்கோ? அது யாருக்குத் தெரியும்? நீங்களெல்லாம் சொன்னா சரிதான். இந்தாங்கோ சாக்கரை.

[மஹரிஷிகள் மரியாதையாய் வாங்கிக் கொள்ளுகிறார்கள். சிறிது சாப்பிடு-கிறார்கள்.]

நாரதர்

அதி மதுரமாயிருக்கிறது.

வியாஸர்.

பிரசவம் மதுரம், பிரவேசம் அதி மதுரம்.

பட்டணத்தான்.

அடே என்னென்னமோ பேசராங்கடா சும்மா. கஞ்சி காச்சுக்கொண்டிருக்கும், சாப்பிடப் போகலாம் வாருங்கோடா.

[மஹரிஷிகள் தவிர மற்றவர்கள் போகிறார்கள்.]

நாரதர்.

அதிமதுரமென்று ஔஷத வகையில் மூலிகா விசேஷம் ஒன்றுண்டல்லவா?

வியாஸா.

ஆமாம, ஆனால இநத அதிமதுரம கோபர்களுக் கெனறே மோக்ஷததை உடனே கொடுகக சஙகல் பிககபபட்டது போலும.

நாரதர்.

எலலா வைத்தியரும யாதோ ஒருவிதமான மோக்ஷத்தைத்தான கொடுக்க வலலார. இநத மஹா வைததியரைப் பறறிக கேடபாயோன. அஹோ பாக கியம! அஹோ பாககியம! இநத நநதகோபன, கோகுலததார செய்த பாககியம!

[போகிறார்கள.]

## இரண்டாம் காட்சி.

---

## கோபிகா மனோபாவ யோகம்.

நந்தகோபர் கிருஹம்.

மாலை.

[அலங்கரிக்கப்பட்ட ஒரு தொட்டிலில் குழந்தை விடப்பட்டிருக்கிறது. யசோதையும் ரோஹிணியும் தாதிகளும் இருக்கிறார்கள். யசோதை தாலாட்டுகிறாள்.]

யசோதை.

"மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே,
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ"

(குழந்தையைப் பார்த்து) ரோஹிணி தேவி, குழந்தையைப் பார்த்தையா? நான் பாடுவதைக் கேட்டு என்னை உற்றுப் பார்க்கிறது பெரியவனைப்போலே, ரொம்பநாள் தெரிஞ்சவனைப்போலே.

ரோஹிணி

கண்ணையே பார்த்துக்கொண்டிருக்கலாம் போலிருக்கிறது.

யசோதை

(திரும்பவும் தாலாட்டுகிறாள்.)

"திண்டிறலாள் தாடகை தன் உரமுருவச் சிலை
வளைத்தாய்
எண்டிசையும் ஆளுடையாய் இராகவனே தாலேலோ."

ரோஹிணீ, ரோஹிணீ, குழந்தை கையை உயர்த்தி தூக்குகிறதைப் பாரம்மா. (குழந்தையைப் பார்த்து) நீகூடச் சண்டை போடப்போகிறாயா?

ரோஹிணி

என் ராஜாவனனு! போடத்தான் போகிறான்.

யசோதை

"தயரதன்றன் மாமதலாய மைதிலிதன் மணவாளா,
வயமருவெரு சிலைவலவா இராகவனே தாலேலோ"

இதோ எல்லாரும் வாருங்கள்! வாருங்கள்! கலியாணம் என்றால் குழந்தைகூடச் சிரிக்கிறதே!

"சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல் கானம்
அடைந்தவனே,
சிற்றவைதன் சொற்கொண்ட ஸ்ரீராமா தாலேலோ."

ரோஹிணி

ஐயோ! முஞ்சி சுளிக்கிற அழகைப் பார்! நிஜமாகத்தான் நீ பாடுகிறதெல்லாம் அதுக்கு அர்த்தமாகிறதோ, என்னமோ?

தாதி

"சிசு வேத்தி" என்று சொல்லுகிறார்களே. குழந்தைகளுக்குக் கூடத்தான் பாட்டு தெரியும்.

யசோதை

"மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே,
சிலைவலவா, சேவகனே, ஸ்ரீராமா தாலேலோ."

தாதிகளில் மற்ருெருத்தி

அப்பப்பா, காலை உதைத்துக்கொள்வதைப் பார். சமுத்திரத்தைத் தாண்டவேண்டுமோ இப்பவே, நீ கூட?

யசோதை

"வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை
யழித்தவனே,
இளையவர்கட் கருளுடையாய் இராகவனே
தாலேலோ."

ரோஹிணி

அட, அட, வாயை அசைத்துக்கொண்டு என்னமோ வப்பளக்க வேண்டுமாம், ஊர் வம்பெல்லாம் இப்போ பிடித்து

யசோதை

"தேவரையும் அசுரரையும் திசைகளையும்
படைத்தவனே,
ஏவரி வெஞ்சிலைவலவா இராகவனே தாலேலோ."

என்னமோ மேலே பார்க்கிறதே. எங்கேயோ பார்க்கிறதே. ஒருவேளை தூக்கமோ என்னமோ.

ரோஹிணி

ஆமாம், தூக்கந்தான். கண்ணை மூடிக்கொண்டு விட்டது. பார், பார், யசோதை. தூங்கும்போது கூட ஏதோ யோசனை பண்ணுகிறமாதிரி யிருக்கிறது. தூங்கும்போதும் சிரிக்கிறது.

[இதற்குள் கோபிகைகள் ஒவ்வொருவராக வந்துகொண்டிருக்க யசோதை சொல்கிருள்.]

யசோதை

இன்னுமேன எல்லோரும் வரவில்லை. எதிர்வீட்டு நீலா எங்கே? கோடி வீட்டு கோமளமும் வரவில்லை. தங்கம எங்கே போனாள்? செங்கமல மெங்கே? தாதி, நீ போய் எல்லோரையும வரச்சொல். கூப்பிட்டுக்கொண்டுவா. சோபனையடிக்க நாழியாகிறது.

[அதற்குள் எலலாரும வந்து சேருகிறாகள.]

யசோதை

[தாதியைக கூப்பிட்டு]

பெரிய திருவிளக்கை நடுவிலே வை. எல்லோரும் சோபனை யடிக்கட்டும.

[எலலோரும் சோபனையடிகக ஆரமபிககிறாகள்.]

கமலா

என்ன பாடுகிறது? யார பாடப்போகிறா?

லக்ஷ்மி

நீதான் பாடேன்.

கமலா

எனக்கொன்றும் தெரியாதம்மா.

நீலா

நீதான் பாடு, என்னடி லக்ஷ்மீ.

[லக்ஷ்மி பாட எல்லாரும் சோபனை யடிக்கிறார்கள்]

"பெருமையான அஷ்டமியில் பிறந்தவாக்கு மங்களம்,
உசிதமான ரோஹிணியில உதித்தவாக்கு மங்களம,
சிரேஷ்டமான ஜயந்திதனில ஜனித்தவாக்கு மங்களம்,
நந்தகோபன் மைந்தனாக வந்தவாக்கு மங்களம,
எங்க ளசோதையினிளஞ் சிங்கத்திற்கு மங்களம,
ஆயர்குலம விளங்கவந்த தீபத்திற்கு மங்களம,
கோகுலத்தை உத்தரிக்கும கோவிந்தனுக்கு மங்களம்,
கோபால பாலனுக்கு மங்களம சுபமங்களம"

[சோபனம கிருத்தியானதும]

### கோபிகளிலொருத்தி

இதுதானு பாட்டு, முடிந்து போச்சா? இன்னும் யாராவது எதுவானுலும பாடுங்களேண்டி.

### மற்றொருத்தி

ஏண்டி சரஸ்வதி, நீ என்னமோ உனக்கு இன்னைக்கு பாட்டு வந்தது என்றாயே, அதைப பாடேன்.

### ஸரஸ்வதி

நான் மாட்டேனம்மா. எனக்கு வெட்கமாயிருக்குது.

### யசோதை

அதென்ன பாட்டு அது, ஸரஸ்வதி? நான் அதைக் கேட்க வேண்டாமோ, பாடு பார்ப்போம்.

(ஸரஸ்வதி பாட எல்லாரும் சோபனமடிக்கிறார்கள்.)

ஸரஸ்வதி

திருமகள் தன்னோடுத் திருமாலுஞ் சேர்ந்து
திருப்பாற்கடலது பள்ளி விட்டு
நிலமகள் துயரம் நீக்க வருவதாய்க் கனவுமது
கண்டேனடி தோழீ.

நீங்காத செல்வமும் நிறைந்த குடங்களும் நித்தமு
மித்தலம் பொருந்திருக்க
பாங்கான பசுக்கள் பண்புடன் நிறையவும்
கனவுமது கண்டேனடி தோழீ.

திண்ணமதாகவே தீய அசுரர் தம திக்குணம
போகக்கவு மெண்ணங் கொண்டு
வண்ணமதானதோர் வாமனன தானவரக்
கனவுமது கணடேனடி தோழீ.

கள்ளமில்லாத நம கன்னியர் கோவலர் உளளங்-
களையே தான் திருடி
கொள்ளைகொள்ள ஒரு கள்ளபிள்ளை வரக்
கனவுமது கணடேனடி தோழீ.

குன்று ஒன்றைத் தூக்கிக் குடையாய்ப் பிடித்து
கோகுல ரக்ஷகனாக நின்று
கன்று மாடுகளைக் காத்து அளிக்கவுங் கனவுமது
கண்டேனடி தோழீ.

நாதத்திற்கே நடு நாயகமானதோர் நற்குழலோன்
றெடுத்தூத
வேதத்திற கெட்டாத கீதத்தைக் கேட்டதாய்க்
கனவுமது கண்டேனடி தோழீ.

காலகோடி விஷங் கக்கி சீறிவருங் காளிங்கன
முடிமேல் கால்வைத்துக்
கோல கோலமாகக் கூத்தாடி நிற்கவுங்
கனவுமது கண்டேனடி தோழீ.

மாமனென வரும மதகஜந தன்னையும் மாநிலத்தினில்
கீழ் தள்ளி

வாமனன் மாமனின வல்லுயிர் கவரவுங்
கனவுமது கண்டேனடி தோழி.

[சோபனம முடிநததும எலலாரும் நிறகிறார்கள.]

நீளா

(குழநதையைப பாாதது)

யசோதா, குழநதையைப் பார்ததால், பெறுகிறது கஷ்டமில்லை. பேரிடுகிறது கஷ்டமாயிருககும் போல இருக்கிறது. என்ன பேர வைததாய்?

யசோதை

ஸாஸதிரத்தைப் பார்தது கிருஷ்ணன என்று நாம காணம் செய்தாாகள். அதனாலென்ன, அவரவர் இஷ்டப்படி அப்பப்பேர, மனசுக்குத தோன்றியபடி யெல்லாம் பேர வைத்தழைப்பார்கள.

கோமளம்

ஆமாண்டீ, அதுதான் அழகு. ஆயிரம் பேர் போராது என் கண்ணனுக்கு.

யசோதை

எல்லாரும் இருந்து குங்குமம் வெற்றிலை பாக்கு பழம் வாங்கிக் கொண்டு போகவேண்டும். உட்காருங் கள்.

## மூன்றாம் காட்சி.

---

### புருஷோத்தம யோகம்.

நந்தகோபன் கிருஹத்து வாசல்

காலை

[ நந்தகோபரும் ஜகந்நாத வாசஸ்பதி என்கிற ஜோஸ்யரும் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஜகந்நாத வாசஸ்பதி ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார். யசோதை பிரவேசிக்கிறாள் ]

யசோதை.

குழந்தை பிறந்த வேளை எப்படி யிருக்கிறது, பார்த்தீர்களா?

நந்தகோபர்.

அதைத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறார் நம்ம ஜோஸ்யர்.

வாசஸ்பதி.

அடாடா, என்ன ஜாதகம்! என்ன ஜாதகம்!!

நந்தகோபர்.

எப்படி யிருக்கிறது? நன்றாயிருக்கிறதா?

யசோதை

நல்லது, பொல்லாதது, இருக்கட்டும். எங்கேயானாலும் ஆயுளை போட்டுக்கொண்டு இருக்குமா, சொல்லுங்கள்?

வாசஸ்பதி

நல்லது பொல்லாதென்று சொல்ல முடியாது தான். ஆயுளைப் பற்றியா கேட்டீர்கள்? ஆயுஸ் யதேச்சையா யிருக்கும் ஏனென்றால் ஆயுஸ்தானாதி பதியான குரு இச்சா ஸ்தானத்தில் உச்சனாயிருக் கிறான்.

யசோதை.

சம்பத்தெப்படியோ?

வாசஸ்பதி

இந்த ஜாதகத்திற்கு லக்ஷ்மீ நர்த்தனம் பண் ணுவாள்

நந்தகோபர்.

யோகவானா யிருப்பானா?

வாசஸ்பதி

யோகத்தைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை. யோகங்களுக்குள் உத்க்ருஷ்டமானது மஹா புருஷ யோகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உச்ச தசையான சந்திர தசையில் உச்ச புக்தியான புதன் புக்தியில் ஜனனம். நான்கு கிரஹம் உச்சம். மற்ற மூன்று கிரஹம் ஸ்வக்ஷேத்ரம். புருஷோத்தம யோக மென்று தெய்வஜ்ஞரால் கொண்டாடப்பட்டிருக்கிறது.

நந்தகோபர்.

யோக மிருக்கட்டும். யோக்கியனாயிருப்பானா பிள்ளை?

வாசஸ்பதி.

நந்தகோபரே, அதைப்பற்றி மாத்திரம் என்னைக் கேட்க வேண்டாம். நான் லக்ஷக்கணக்கான ஜாதகங்களை பார்த்திருக்கிறேன். இப்பேர்ப்பட்ட ஜாதகத்தை பார்த்ததே இல்லை. இது என்னமோ என்னை பிரமிக்கச் செய்கிறது. ஜாதக ரீதியாய்ப் பார்த்தால் இந்த ஜாதகன் ஜார சோர சிகாமணி யென்றே சொல்வார்களேகள். யோகமோ, புருஷோத்தம யோகம் அமைந்திருக்கிறது. நான் என்ன வென்று சொல்கிறது?

நந்தகோபர்

அதெப்படி யாகும்?

வாசஸ்பதி.

பாருங்கள், ஆறில் சனி உச்சன். சொல்வதெல்லாம் பொய், செய்கிறதெல்லாம் திருட்டுத்தனம். தாம கர்மாதிபதியான சனி சோரஸ்தானத்தில் உச்சனானால் பகவான் தான் சொல்லவேண்டும்.

யசோதை.

கல்யாணம் எப்போ ஆகும்? பெண்டாட்டி அழகாயிருப்பாளா?

வாசஸ்பதி.

களத்திர போகமா? அதற்கும் கேட்கவேண்டுமா? களத்திரஸ்தானாதிபதி அங்காரகனேயாய் பாக்யத்தில உச்சம் பெற்றிருக்கிறான். களத்திரகாரகனுக்கோ சனி சம்பந்தம். ஊரெல்லாம் களத்திரந்தான். ராஜ்யத்துக்கோ கேட்க வேண்டியதில்லை.

நந்தகோபர்.

பாலாரிஷ்டம் ஏதாவதுண்டோ?

வாசஸ்பதி.

அதற்கும் கேட்க வேண்டியதில்லை. நித்திய கண்டம் பூர்ணாயுளென்றே சொல்ல வேண்டும்.

யசோதை.

அப்படியென்றால் ஆயுஸுக்குப் பயமில்லையே?

வாசஸ்பதி.

அவனுடைய ஆயுஸுக்கு யாதொரு பயமுமில்லை.

யசோதை.

அவ்வளவு எனக்குப் போதும். நான் போகிறேன்.

[போகிறாள்.]

நந்தகோபர்.

இந்த ஜாதகனுக்கு ராஜ்யம் ஏதாவது கிடைக்குமா?

வாசஸ்பதி.

கைக்கெட்டினது தலைக்கெட்டாது. ஆனாலும் ராஜாதி ராஜ யோகம் அமைந்திருக்கிறது.

நந்தகோபர்.

நீர் சொல்வதெல்லாம் எனக்கு ஏதோ புதிர் போல இருக்கிறது. அர்த்தமாகவில்லை. கடைசியாய் ஒன்று சொல்லுங்கள். தாயார் தகப்பனான எங்களைக் கூடவிருந்து ரக்ஷிப்பனா?

வாசஸ்பதி.

ரக்ஷகன் தான் என்பதற்கு ஐயமே இல்லை. ஆனால் கூடவே இருப்பானென்று சொல்ல முடியாது.

நந்தகோபர்.

விருத்தி என்ன? எங்கள் விருத்தியிலேயே இருப்பானா?

வாசஸ்பதி.

உங்கள் விருத்திக்கு ஒரு பங்கமும் வராது. அவனுக்கு கோபாலன் என்கிற நாமம் அஸாதாரணமாய் அவனிடத்தில் அநுபவிக்கும்படியாய் இருக்கும். பசுப்ராயமான யாவற்றினுடைய ரக்ஷண விஷயத்திலும் நிபுணனாயிருப்பன். ஆனாலும் ஒரு வேடிக்கை பாருங்கள் அனுஷ்டிக்காத விருத்தி லோகத்திலிராது. மாடு மேய்ப்பான், அடிமை வேலை செய்வன், பாடுவன், ஆடுவன், ஆயுதமெடுத்துச் சண்டை செய்வன், ஜெயிப்பன், தோற்பன், தௌத்தியம் செய்வன். ஸாரதியாயிருப்பன். செய்வது மாயம், சொல்வது வேதாந்தம். எவ்வளவு சொன்னாலும் முடியாது.

[ஒரு வேலைக்காரன் நந்தகோபரிடம் வந்து]

வேலைக்காரன்.

குழந்தைக்கு மங்களாகாரம் செய்வதைப்பற்றி ராணி கூப்பிடுகிறாங்கோ.

நந்தகோபர்.

இதோ வந்து விட்டேன். தங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்தேன். கொஞ்சமிருந்து சம்பாவனையைப் பெற்றுக்கொண்டு போகவேண்டும்.

வாசஸ்பதி.

எனக்கு வேறென்ன சம்பாவனை வேண்டும். தெய்வீக சாஸ்திரமான ஜோதிஷ சாஸ்திரத்தில் உத்ஸாஹிகளான எங்களைப்போலொத்தவர்களுக்கு இப் போகொத்த அபூர்வமான ஜாதகத்தைப் பார்க்கப் பெற்றதே பரம பாக்கியம். அப்படியே ஆகட்டும்.

[நந்தகோபர் உள்ளே செல்கிறார்]

## நான்காம் காட்சி

### அஸ்தாஸ்தமன யோகம்.

மதுரை, கம்ஸன் அரண்மனை.

காலம்—ஸூர்யாஸ்தமனம்.

[கம்ஸன் துக்கமும் கிலேசமும் பிடித்தவனாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.]

கம்ஸன்

(ஸ்வகதம்)

இதென்ன விபரீதம்! தேவகி வசுதேவர்களைச் சிறையிட்டது முதல் ஒரு நாளாவது கவலையின்றி சந்தோஷமாயிருந்தேனில்லை. அந்த பாபந்தானோ!—பாபம்! பாபமாவது? பாபமென்றால் என்ன—ஐயோ பாபமெனப்படுவதே பாபமாகும். நல்லது: ராஜ்யத்தையும் பிதாவைத்தள்ளி அபகரித்தோம்—அந்தரங்கமான சிநேகிதரையும் பெற்றோம். எல்லா விதமான ஐஸ்வர்யமும் பலமும் இருந்தும் ஒரு நிமிஷமாவது மனஸ் சந்துஷ்டியாயிராத காரணம் தான் என்னமோ? சிறையிலிடப்பட்டது தேவகி வசுதேவர்கள் அல்லவோ—நானே தானோ மனச்சிறையில் கட்டுப்பட்டுக் கொண்டது? கம்ஸனென்றால் கதறுமே லோகம். அப்போகக்கொத்த எனக்கு அருகிலுமிராத ஓர் பயத்தினால் இக்கதியும் வாய்க்குமோ! அதைப் பற்றி நினைக்காமல் மறக்கலாமென்றால் முடியவில்லை.

காட்டிலும் வீட்டிலும், அகத்திலும் புறத்திலும், தேரிலும் சமயத்திலும், கண்டவிடத்திலெல்லாம், குழந்தை யொன்று என்னைப்பார்த்து நகைப்பது போலவும், பயமுறுத்துவது போலவும் தென்படுகிறது. இதென்ன பிரமை பயத்தின் காரியமென்று நினைக்கக் கூட இடமில்லை. சமஸ்த பயந்தானென்றால் யார் தான் நம்பக்கூடும். ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு. வந்தபோது ஒரு கை பார்த்துக் கொள்ளலாமென றெண்ணிச் சும்மாயிருக்கவும் சாத்தியமில்லை ஜன்ம வைரி பிறந்திருக்கிறானென்று கேள்வியுற்று சும்மா எப்படியிருப்பது? ஆனால் இது வரையில் நானிட்ட ஆக்ஞையால் மதுரையிலும் சுற்றுப் பிராந்தியங் களிலும் இருக்கிற குழந்தைகளெல்லாம் கொல்லப்பட் டிருக்க வேணுமே; இன்னும் பிழைத்திருக்கக்கூடுமா என் வைரி?

[ஓர் சேவகன் உள்ளே வந்து]

சேவகன்

மஹாராஜா, நாரத முனிவர் மஹாராஜாவைப் பார்க்க வேண்டுமென்று கொலுமண்டப வாயிலில் காத்துக் கொண்டிருக்கிறார்

கம்ஸன்

அவரைத் தடுத்தது யார்? இந்த பிராமணர் களிலும் ரிஷிகளிலும் அவர் ஒருவர் தான் யோக்கியர். அவரெப்பொழுது வந்தாலும் உள்ளேவர அனுமதி கொடுத்திருக்க அவரை யார் தடுத்தது?

சேவகன்

ஒருவரும் தடுக்கவில்லை, மஹாராஜா மஹாரிஷியை மஹாராஜா சந்தாபம் எப்படியிருக்குமோ வென்று பார்த்து வரச் சொன்னார்.

கம்ஸன்

சந்தாபமென்ன, சூர்யாஸ்தமான காலம். அழைத்துவா போ!

[சேவகன் போகிறான்.]

கம்ஸன்

(ஸ்வகதம்)

மஹாரிஷியென்றால் நாரதரொருவரே மஹரிஷி, சத்தியசந்தர், நிஷ்கபடர், நிஷ்பக்ஷபாதி, ஸ்நேகத்திற்கு அசாத்யமான பாத்திரம், மஹானென்றே சொல்ல வேண்டும்.

[நாரதரை உள்ளே பிரவேசிப்பித்து சேவகன் போகிறான்]

நாரதர்

மஹாராஜாவுக்கு ஜயமுண்டாக வேண்டும்.

கம்ஸன்

மஹதாசீர்வாதம் இதுவரையில் ஆனால் ஜயமில்லையோ?

நாரதர்

ஜன்ம விரோதி யொருவன் உயிருடன் இருக்கும் வரையில் பூர்ண ஜயம் எப்படியாகும்?

கம்ஸன்

ஆனால் இன்னும் உயிரோடு இருக்கின்றானா என்னுடைய சத்ரு?

நாரதா

என்னைக் கேட்பானேன் எல்லாம் அறிய வல்ல உன்னுடைய மனதையே கேட்கிறது தானே.

கம்ஸன்

ஆமாம், ஆமாம்! இப்பொழுதுகூட என் மனம் கிலேசப்பட்டுக்கொண்டுதானிருந்தது. சுகம் வந்தாலல்லவா நோய் அற்றதென்று சொல்லக்கூடும்.

நாரதர்

மஹாராஜா! உனக்குக் கூடிய சீக்கிரத்திலேயே மஹத்தான க்ஷேமம் உண்டாகப் போகிறது. அதற்காகவே வந்தேன் இப்பொழுது.

கம்ஸன்

ஆஹா! நிஜந்தானா? எவ்வளவு சீக்கிரத்தில்?

நாரதா

நல்ல கெட்ட காலங்கள் கிட்டி வருகின்றன என்று மாத்திரம் ஊகித்தறியலாமே யொழியக் கணக்காகக் காலத்தை நிர்ணயித்துக் குறிக்க இயலாது. ஆனால் சீக்கிரம் வருவதும் விளம்பிப்பதும் மனுஷ்ய பிரயத்தனத்தைப் பொறுத்ததாகும்.

கம்ஸன்

நாரத மஹர்ஷே! பிரயத்தனத்தைப் பற்றி என்னிடம் விசேஷமாக உரைக்க அவசியமில்லை. நானே பிரயத்தின பரன், பிரயத்தினமே சக்தி, பிரயத்தினமே சாதனம், பிரயத்தினமே கதி, பிரயத்தினமே விதி, பிரயத்தினமே பௌருஷம், பிரயத்தினமே தெய்வம், பிரயத்தினம் இல்லாமலா இருக்கிறேன் நான்? தேவகி வசுதேவர்களைச் சிறை வைத்தது எதற்காக? அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளையெல்லாம் த்வம்சம் பண்ணினது எதற்காக? இப்பொழுது ஊரிலிருக்கும் சிசுக்களையெல்லாம் ஒன்று விடாமல் கொன்றுவிடக் கட்டளையிட்டது எதற்காக? எல்லாம்—எல்லாம்—அந்நாள் அசரீரி விதியெனச் சொன்ன வார்த்தையைப் பொய்யெனச் செய்யவே! விதியை மதியால் வெல்லலாம், பராக்கிரமத்தால் ஜயிக்கலாம். நாரதரே பாரும் என்னுடைய பிரபாவத்தை சில நாட்களில்!

நாரதர்

அதற்கென்ன சந்தேகம். ஆனால் முக்கியமான தோர் விஷயம் தெரிவிக்க வேண்டுமென்று வந்தேன். வீணாக எல்லா சிசுக்களையும் கழுத்தை முறித்துக் கொல்வதில் என்ன பயன்? மாயையால் அப்புறப் படுத்தப்பட்ட உன் வைரி எங்கிருக்கிறானென்று கண்டு பிடித்து விட்டேன்.

கம்ஸன்

நாரதரே—பேஷ்—ரொம்ப சந்தோஷம். இப்பொழுதே சொல்லும் நானே போய் அரைக்ஷணத்தில் த்வம்சம்பண்ணி வருகிறேன். எங்கே ஒளிந்திருக்கிறான்?

நாரதர்

மஹாராஜா, நீரே நேரில் செல்வது சரியல்ல, உசிதமுமல்ல. ஒரு மனுஷ்யனுக்கு காரியம் செய்யக் கை கால்கள் எப்படி ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்விதமே ராஜாவுக்கும் பிரதானிகளும் படைகளும் ஏற்பட்டிருக்கிறார்கள். சதுரங்க ஆட்டத்தின் நீதியும் அதேயல்லவா? அவர்களால் முடியாமற் போகுமானால் அப்புறம் யோசிக்கலாம். அற்பமான விஷயத்தில் அரசன் நேரில் பிரவாதிப்பது ராஜாங்க மரியாதைக்கு விரோதம் அனுமாத்திரமேயல்ல புது பிரவாகத்தில், ஆழம் பார்த்தே அப்புறம் இறங்க வேண்டும்.

கம்ஸன்

அதெல்லாமிருக்கட்டும். அவனெங்கேயிருக்கிறான்? சீக்கிரம் சொல்லும், சத்தியமாய்ச் சொல்லும்.

நாரதர்

கம்சா, இதென்ன இப்படிப் பேசுகிறாய்? உன்னையும் என்னையும் மறந்து! நாரதன் ஒரு பொய் சொன்னானென்று எப்பொழுதாவது கேட்டதாவதுண்டா? அன்றையதினம் கேள்விப் பட்டேன்.

பூலோகத்திலும் தேவலோகத்திலும் கூடச் சிலர் நாரதன் கலஹப்பிரியனென்று சொல்லுகிறார்களாம். உள்ளதைச் சொன்னால் கலஹமாம், சொல்லாவிட்டால் பொய்யாம். என்னைக்கேட்டால் இந்தக் கஷ்டமும் அபகீர்த்தியும்! நான் போய் வருகிறேன் நீ மஹாராஜனாயிரு.

கம்சன்

(பயபக்தியுடன் எழுந்திருந்து) க்ஷமிக்கவேண்டும் ஏதோ அவசரமாய் எனது ஆத்திரத்தில் சொன்னதைப் பொறுத்தருளவேண்டும் இனிமேல் நாரத வாக்கியமே எனக்கு வேதவாக்கியம் கிருபைசெய்து சொல்லவேண்டும். அந்த சத்ரு—என் காதகன்—எங்கே ஒளிந்திருக்கிறான்—என் பரமவிரோதி?

நாரதர்.

(புன்சிரிப்புடன்)

கம்சா, உனக்குக் கொஞ்சம் முன்கோபமுண்டென்று சொல்வார்கள். ஆனால் எந்த காரணத்தினாலேயோ உன் விஷயத்தில் கோபமே வரமாட்டேனென்கிறது

கம்சன்

எல்லாம் தமது கருணை!

நாரதர்.

நான் சொல்வதைக்கேள். உன் சத்ருவாகப்பிறந்தவன் மாயையால் அப்புறப்படுத்தப்பட்டு நந்தகோபனுடைய கோகுலத்தில் அவன் குழந்தையாகவே வளர்ந்து வருகிறான். அவன் மாயா மூர்த்தி, மாயையி

ஞலேயே அவனை மாய்க்க முயல்வது உத்தமம். அவன சிறு குழநதையாயிருக்கும்போது உன்னைக கொல்வ தெபபடி வயது வநதுதானே ஆகவேண்டும அதற்கு முன நீ உனவேலையைச செய்து முடித்துக்கொளளலா மலலவா? நான சொனனதெலலாம ஞாபகமிருககட்டும. நான போய வருகிறேன.

கம்சன்.

தஙகளை நான திருமபவும எபபொழுது தாசிப்பது?

நாரதர்.

வேணடி வாரான வேண்டாதே வருவன: வேண் டும்போது வருவன.

[நாரதா போகிறார.]

கம்சன்.

ஆஹா! இப்போகொத்த மஹானுன மஹர்ஷியை சததியசாநதனை, நியாயமூாததியை, கிருபாநிதியை, கலஹப்பிரியன எனகிறதாம லோகம! என்ன லோகம, என்ன லோகம, சேவகா!

## ஐந்தாம் காட்சி

---

## தைவாவஸர யோகம்.

காலம் — சாயங்காலம்.

[நந்தகோபர் வீடு தொட்டிலில் குழந்தை கிருஷ்ணன் விடப்பட்டிருக்கிறது. தாதி நிற்கிறாள்]

யசோதை (பிரவேசித்து.)

என்னமோ இன்றையதினம் நிஷ்காரணமாக என் மனதில் சந்தோஷம் ஒருபக்கமும் சங்கடம் ஒரு பக்கமுமாய் இருக்கிறது இன்னதென்று சொல்லமுடியவில்லை. தாதி, பாபா எங்கே?

தாதி

அதோ தான் தொட்டிலில் படுத்துக்கொண்டு சிரித்துக்கொண்டிருக்கிறான். தேவி, கொஞ்ச நாழிகைக்கு முன்பு குழந்தை திடுக்கிட்டதுபோல அலறி ஓர் விதமாகப் பயந்ததுபோல சுற்றிப்பார்த்தது. தங்களைக் கூப்பிடலாமென்று நினைத்தேன். அப்புறமொன்றுமில்லை. ஆதலால் வந்த பிறகு சொல்லலாமென்று இருந்துவிட்டேன்.

யசோதை.

என்ன காரணமாய் இருக்கக்கூடும்? ஒருவேளை பயந்து இருக்கலாம். அதற்கேதாவது பரிகாரம் பண்ணச்சொல்லி வருகிறேன். நீ இங்கேயே இரு.

[போகிறாள்.]

### தாதி

(குழந்தையைத் திரும்பவும் பார்த்து)

ஹாஹா! என் கண்ணே பட்டிருக்கலாம். குழந்தையாயிருந்தாலும் பார்க்கப்பார்க்கத் தெவிட்டவில்லையே! என்ன தெய்வப்பிறப்போ.

[பூதனை பிரவேசித்து]

### பூதனை

அதற்கென்ன சந்தேகம். தெய்வப்பிறப்பாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் — எல்லோரும் சொல்லுகிறார்களே! இதுதானோ அம்மா, கோகுலத்தில் மஹா தேஜஸ்வியாய் சில நாளைக்குமுன் குழந்தையொன்று பிறந்ததென்றார்களே?

### தாதி.

ஆமாம்மா, தாங்கள் யாரோ தெரியவில்லையே!

### பூதனை.

நானோ? என்னை உங்களுக்குத் தெரியாது. நான் அசல் ஊர்.

### தாதி

எந்த ஊர்?

### பூதனை.

மதுரைக்குக் கிட்ட.

### தாதி

ஆனால் உங்களைப்பார்த்தால் ராஜ ஸ்திரீயைப்போலிருக்கிறதே. மதுரை ராஜாக்களுக்கு ஏதாவது பாத்தியமா?

வேண்டியவர்கள் தான.

தாதி.

தேவகீ ராணி இருக்கிறாகளே அவாகள என்ன வேணடும?

பூதனை

அகசா தஙகை முறையாக வேண்டும்.

தாதி

இபபொழுது இஙகே கோகுலததிறகு வநத காரணமெனனமோ?

பூதனை

நீ யாா? இநத ஆயுஷயமானன குழநதைககு தாதியோ?

தாதி

ஆமமமா.

பூதனை

எனககு நாலைநது குழநதைகள பிறநது அடுத தடுததுப் போயவிடவும, எஙகள் ஸ்வாமி யொருவர் ஒரு மணடலததிறகுள ஆயிரம குழநதைகளுக்கு பால் கொடுததால எனனுடைய பிராரபதம தீரு மென்று சொனனார். அது முதல அதையே விரத மாகக்கொண்டு சிசுககளுக்குப் பால கொடுத்துக் கொண்டு விரததைதை நிறைவேற்ற ஊா ஊராய்ப் போய்க்கொண்டிருக்கிறேன். இவ்வூர் வநததும் உஙகளுடைய குழநதையினுடைய அழகையும

தேஜஸ்ஸையும் குறித்துக் கேள்விப்பட்டு இங்கே வநதேன். குழநதையை யெடுத்து பால் கொடுக்க-லாமா ?

தாதி (யோசிதது)

எங்கள் தேவியின் உத்திரவில்லாமல் நான் எபபடி அனுமதி கொடுபபது ?

பூதனை (தொட்டிலருகிற் சென்று)

ஆஹா ! இப்படியும் ஒரு குழநதை இருக்குமா ? என் மனதை அபகரிக்கிறது ! இப்பேர்க்கொதத ஒரு குழநதைக்குப் பால கொடுத்தாலே பண்ணின பாப மெல்லாம் தீர்நதுவிடும்.

தாதி

ஆனல் இங்கேயே இருங்களா. குழந்தையை யெடுக்க வேண்டாம். நான் போய் எங்களா தேவியைக் கேட்டுககொணடு வருகிறேன்.

[தாதி போகிருள். பூதனை தொட்டிலி லிருககும குழந்தையைக கையில் எடுககிருள்.]

பூதனை

ஆஹா ! இதென்ன அதிசயம் ? மற்ற சிசுக்களை யெல்லாம எடுத்தவுடன் கழுத்தை முறித்துக் கொன்று விட ஆவேசம் உண்டான் எனக்கு இநதக் குழநதை-யைத தொடடதும் தேஹத்தில் ஒரு மயிர்க் கூச்சலும் மனதிலானந்தமும் உண்டாகி அதனிடம் அன்பும்

பரீதியும் அதிகரித்து கொளுசிக் குலாவவே உணடா-கிறது விருபபம. நான இவ்வளவழகிய குழநதையை விஷப் பால் கொடுத்து எப்படிக் கொல்வது? வநதது வரட்டும் என்று விட்டு விட்டு ஓடிப போகலாமா? அப்படியானுல் என் கதி எனனவாகும? கமஸாக் கினையை மீறி எப்படிப பிழைப்பது? ஆனுலும மனசும வரவிலலை. சீ! கொலலேன நான.. (குழநதை-யைத திருமபவும தொட்டிலில விட்டுவிட ஆரமபிககு, குழநதை இரணடு கைகளையும தூககி அவள் கழுததைக கட்டிக கொளளுகிறது கணடு) சரி—நீ போகமாட்டாயா? உன விதிபபடி யாகிறது! நான என்ன செய்யலாம்!

[அதற்குள தாதியும யசோதையும வருகிருரகள.]

### தாதி

என்னம்மா? நான் திருமபி வரும் வரையில குழநதையைத் தொடவேணடா மென்றேனே?

### பூதனை

அம்மா தவறு செய்ததற்கு மன்னிக்கவேண்டும. நான் தொட்டில கிடடப் போய்ப் பார்த்த பொழுது, பாபா, என கண்மணி, கை தூக்கி என்னிடம் வர வேண்டுமென்பது போலிருநதது. அதறகுப் பிறகு இப்போக்கொத்த குழநதையை எடுக்காதவள் கிராதகி யாகத்தானே இருக்கவேண்டும்.

தாதி

அதறகாகச சொல்லவில்லை—

பூதனை

அவ்வளவு கோபமா யிருநதால் இநதாருங்கள் உங்கள் குழநதை. க்ஷேமமா யிருக்கட்டும.

யசோதை

கோபித்துக கொள்ளாதே யமமா. தாதி தானிருக்கவேண்டிய ஜாககிரதையைப பறறி கூறினள. உனனைப பாரத்தால என மனம பரிதாபப படுகிறது. தாதி சொனனுள் உன கஷடததைப பறறியும உன விரததைதப் பறறியும் சுகமாய் பால கொடு குழநதைக்கு.

பூதனை

ரொமப சநதோஷமமமா. எனனவெனறுலும பெரியவாகள மனதும பெரியதாகததா னிருக்கும. எனக்கு இங்கே திறநதவிடத்தில லஜ்ஜையா யிருக்கிறது. அதோ, அஙகே மறைவிடததில கொடுககலாமா ?

யசோதை

அபபடியே செய்யமமா.

[பூதனை குழநதையைக கொஞ்சிக கொணடு பககததில மறைகிறுள.]

யசோதை.

ஐயோ. பாவம! எத்தனை குழநதை செத்து விட்டதாம் ?

தாதி.

எத்தனையோ சொன்னாளே !

[ரோகிணி வருகிறாள்.]

ரோகிணி.

யசோதா.—கண்ணனெங்கே? தொட்டிலில் காணோமே.

யசோதை.

பால் சாப்பிடுகிறான்.

ரோகிணி.

இதோ இருக்கிறாளே தாதி?

யசோதை.

இல்லை, யாரோ ஒரு அம்மா குலவதியும் குணவதியுமாகத் தென்படுகிறாள். குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று வேண்டி எடுத்துப்போயிருக்கிறாள்.

ரோகிணி.

ஐயய்யோ! வந்தது மோசம்! நாம் கண்ணனையிழந்தோம். மதுரையில் இப்படித்தான் ஒரு அசுர ஸ்திரீ பால் கொடுப்பதாக ஊர்க் குழந்தைகளைக் கொன்று விட்டாளாம். இன்றைய தினந்தான் கேள்விப் பட்டேன். எங்கே யவள்? எப்படிப் போனாள்?

யசோதை.

பதறாதே ரோகிணி. வந்தவள் அசுர ஸ்திரீ யல்ல. அதுவுமன்றி அவளைப் பார்த்தால் அவள் கொல்பவளாகத் தென்படவில்லை.

ரோகிணி.

ஐயோ! எங்கே யவள் சொல்லு? வந்து விட்டது விபத்து!

[அத்தருணத்தில் பூதனை தன்னுடைய நிஜமானதும் கோரமானதுமான அசுர சரீரத்திற்கு மாறி, ஓடி வந்து, மாளி பினில் குழந்தையுடன் கீழே விழுந்து, கூக்குரலிட்டு மரிக்கிருள். ரோகிணி ஒரே பாய்ச்சலாகக் குழந்தையை எடுத்து தப பிராணனுடன் இருப்பதை யறிந்து கொஞ்சம் சாந்தியை யடை கிருள். யசோதை திகபிரமை யடைந்து நிறகிருள்.]

யசோதை.

இதென்ன இது?

ரோகிணி.

நான் சொன்னேனே பார்த்தீர்களா? அது மட்டும் தப்பிப் பிழைத்தான் கண்ணன் தெய்வீகமாய்.

யசோதை.

[தாவிக் குழந்தையை யணைத்து உச்சிமோந்து]

இவள் யாரிவள்?—செத்து விட்டாள் போலிருக்கிறதே!

ரோகிணி.

இவளே தான் உங்கள் குலவதியும் குணவதியு மானவள். நான் கேள்விப்பட்டது இவளாய்த்தா னிருக்கவேண்டும்.

யசோதை.

வந்தவள் வேஷமா? இவளேயா ! என்ன ஆஸ்சரியம்! குழந்தை ரொம்பவும் பயந்திருக்கும். என்னடா கண்மணீ!

ரோகிணி.

பயந்தது அப்படியாகட்டும்; எப்படித் தப்பிப் பிழைத்தானென்று யோசித்தறிந்தீர்களா?

யசோதை.

ஆமாம், தெய்வந்தானே காப்பாற்றியிருக்க வேண்டும்.

ரோகிணி.

இவளெப்படி செத்தாள்? அது இன்னும் ஆஸ்சரியமா யிருக்கிறது!

யசோதை.

ஏனம்மா ரோகிணீ, காப்பாற்றின தெய்வத்திற்கு கொல்லத் தெரியாதோ?

[இதற்குள் பூதனையின் கூக்குரலையும் ஆரவாரத்தையும் கேட்டு நந்தகோபரும் சில கோபர்களும் வருகிறார்கள்.]

நந்தகோபர்.

யாரது கோரமாய் கூக்குரலிட்டது? [கீழே பூதனையின் ப்ரேதத்தைக் கண்டு] இது யாரது? அசுர ஸ்திரீ செத்துக் கிடக்கிறாப் போலிருக்கிறது, சொல்லுங்கள். ஏன் எல்லாரும் மௌனமாயிருப்பது?

யசோதை.

பிழைத்தான் இன்று தெய்வீகமாய் நம குழநதை.

நந்தகோபா.

அப்படியா ! யாரிவள ? நடநதெதன்ன ?

யசோதை.

சொல்லுகிறேன், சவிஸ்தாரமாய். ஆனால் இங்கே வேண்டாம—வாருஙகள போவோம.

[எலலாருமபோகிறாகள்.]

---

## ஆறாவது காட்சி.

---

# கோபால மனோபாவ யோகம்.

### நந்தகோபர் வீடு.

காலை.

(கோகுலத்திலுள்ள அநேக சிறுவர்களும் சிறுமிகளும் கும்பல் சேர்ந்திருக்கிறார்கள்.)

### ராமன்.

அடே! எங்கேயும் காணோமே. ராத்திரி சொன்னாங்களே ஏதோ ஒரு பூதம் வந்தது, அதை, கிருஷ்ணன் கொன்னுட்டானின்னு.

### குள்ளன்.

அடே ராமா! சாப்பாட்டு ராமா! இத்தனை நேரம் வசிண்டிருப்பாங்களோடா பூதத்தை. அதை ராத்திரியே கோடாலியெல்லாம் கொண்டாந்து, துண்டு துண்டாய் வெட்டி, வண்டிலே யேத்தி கொண்டு போய் கொளுத்திட்டாங்களேடா.

### லக்ஷ்மி.

ஹாம், பார்த்தா பயமா இருந்ததோ?

### குள்ளன்.

அம்மா! கோரைப்பல்லும் முண்டக் கண்ணும் தொம்பகூண்டாட்டமா யிருந்தது.

தாயி.

அதை யார் சொன்னுங்க.

இந்திரன்.

பலே—இப்பதான் சமாசசாரம் கேக்கராடா இவ. நமம கிருஷ்ணன கொன்னூட்டான் ஒரே யடியா !

கருப்பன்.

அ ஆண்டா ! தொடடில்லே இருநத ஆறு மாஸத்துக் குழநதை அநத பூதததை ஒரே அடியா அடிசசு கொனனூட்டாளும் !

ராமன்.

என்னடா, நமம கிருஷ்ணனே அப்படி பேசரே? சாதாரண குழநதை என்று நினேச்சு கொணடாயோ ?

கருப்பன்.

இல்லே, கொம்புகூட முளேசசிருக்குதே !

இந்திரன்.

அநத பூதத்தை கிருஷ்ணன கொல்லாமல உஙக தாதா வநது சொன்னுனே? இல்லே நீ கொன னூடடையோ ?

கருப்பன்.

அடே, சொன்னுலும பொருநதச சொல்லணும். அநத தொடடில் குழநதை தொமபக்கூண்டு பூதத்தை என்னமாடா கொன்னூடுதது ?

ராமன்.

பாலில் விஷமிட்டு பால் கொடுக்க வந்தாள். அவளை பாலோடே உயிரையும் ஒரேயடியா உறிஞ்சுட்டாண்டா.

இந்திரன்.

அது தானடா கெட்டிக்காரத்தனம்.

கருப்பன்.

அதெப்படிரா செய்யராது ?

இந்திரன்.

அதுதாண்டா ஆஸ்சரியம்.

[சில கோபாகளும் கோபிகைகளும் வருகிறாாகள்]

அவர்களில் ஒருவன் பசுபதி.

அடே பசங்களா, மாடு கன்னை யெல்லாம அவிழத்துவிட்டு மேயககக் கொண்டு போகாதே, எல லாரும சோம்பேரிகளாட்டமா கும்பல சேர்நது கொணடு என்னடா பண்ரேஙகோ.

ராமன்.

நம்ம ராஜா பிள்ளை கிருஷ்ணனைப் பார்க்க வந்தோம். யாரோ எஙகளை உள்ளே போகக்கூடாதுான்னுங்களாம்.

[பலராமன பிரவேசிதது]

பலராமன்.

போகக்கூடாதூனு சொன்னவன யாரடா? வாங்கடா நாம போகலாம.

வாசல் காப்பான்.

யசோதா தேவி சொன்னதின பேரில் ராஜாவே கட்டளை யிட்டார.

பலராமன்.

பெரியவர்களுககெல்லாம நநதகோபர் ராஜாவானு நமக்கெல்லாம் ராஜா கிருஷ்ணனடா. வாங்கடா போகலாம்.

[நநதகோபா பிரவேசிதது.]

நநதகோபர்.

என்ன அமளி யிஙகே, விசேஷ மென்ன?

பட்டணததான்.

மஹாராஜா, இநத பசஙகளெலலாம சோநது அந் தப் பூதனை நேறறு ராததிரி யாராலே எப்படிக கொல் லப பட்டாளென்று விவாதம செய்து கொண்டிருக் கிறாகள.

நந்தகோபர்.

சகஜநதானே அது! ஆஸ்சாியமான காரியம ஒனறு நடக்க, அதன காரணத்தை அறிய விரும்புவது, மனிதாக்கெலலாம, அதிலும சிறுவாகளுக்கு, இன்றி- யமையாத குணம. பிள்ளைகளே! நடநத ஆஸ்சரியத் திற்கு நம்மால் காரணம விவரிகக முடியாது. வந்த

விபத்தும அதினின்று தப்பினதும், கொல்வதற்கு கருதி கொண்ட உபாயத்தையே திருப்பி கேடு நினைத்தது கெட மாயத்த தத்துவமும, அழகும, அதிசயமும, அசிந்த்யமான தாம சூக்ஷ்மமும எல்லாம பகவான தானே செய்தது—நம்மாலறிய வொண்ணாது.

கருப்பன்.

என்ன மஹாராஜா, ஆனால உம்முடைய குமாரன கிருஷ்ணன தான பகவானோ? பகவதவதாரமேயோ?

நந்தகோபர்

அப்பா, பிள்ளாய! எனக்குத தெரியாது. அல்ல வென்று நிச்சயமாய் அறிவாயோ நீ? நாமெல்லாரும பகவதம்சமாயிருந்த போதிலும ஒரு குளத்தில குறைவாயும மற்றொரு குளத்தில அதிகமாகவும நீர தங்குவது போல், சில விடத்தில பகவதம்சம அதிகரித்திருக்கக் கூடுமல்லவா?

பலராமன்.

அதெல்லாமிருக்கட்டும் பாரப்பா, பசங்களெல்லாம தினம போல கிருஷ்ணனைப் பார்க்க உள்ளே போக வேண்டுமென்றால விடமாட்டேனென்கிறானே காவற்காரன்.

நந்தகோபர்.

அடே! காவற்காரா, அயலாரைத்தானே உள்ளே விடவேண்டாமென்று சொன்னது. நம்முடைய ஆயர் பாடிப் பிள்ளைகளைக்கூட உள்ளே விடவேண்டாமென்று யார் சொன்னது?

காவல்காரன்.

ராணியம்மாதான சொன்னாாகள். பிள்ளைகளை விட்டால் பிள்ளைகள வேஷம் போட்டுக்கொண்டு பிசாசுகள வருமு என்று.

நந்தகோபர்.

ஐயோ பாவம், ஸ்திரீ புததிதானே, பாசபந்தம், சபலம, பிரமை. ரக்ஷிககிறவனும ரக்ஷிக்காதவனும் ரக்ஷகனே என்பதை அறிநதிலாள். நமமுடைய பிரயத்தினஙகளை வியாஜமாகக் கருதககூட இடமிலலையே. சரி, காவற்காரா, எப்பொழுதும பிள்ளைகளைத் தடுக்காதே.

காவல்காரன்.

அப்படியே மஹாராஜா !

பிள்ளைகள் எல்லோரும்.

ஜயவிஜயீபவ! கிருஷ்ணனுக்கு ஜேய் !!

[சிறுவாகளும் சிறுமிகளும் உளளே போகப் பிரயதனப்படுகிறாாகள்.]

பசுபதி.

மஹாராஜா, மன்னிககவேண்டும. நமமூரிலிருக்கும் பிள்ளைகளெலலாம் ஆண் பெண்ணடஙகளும், கிருஷ்ணன் பிறநதது முதல் மாடு கன்றுகளை மேய்க்கிறதேயில்லை, வீட்டுவேலையையும் கவனிக்கிறதேயில்லை. அஹோராாத்ரம் தங்கள் வீட்டிலேயே கிருஷ்ணனையும் அவன் விளையாட்டுகளையும் பார்த்துக்கொண்டும்

அவனை வர்ணித்துக்கொண்டும, அவனைப்பற்றியே சம் பாஷித்துக்கொண்டும காலத்தைக் கழிக்கிறார்கள். கட்டுககடங்கிறதில்லை. தாங்கள மீண்டும உத்தரவு கொடுத்து இவர்களை இங்கே வராதபடி செய்து அவரவாகள செய்யவேண்டிய வேலைகளை அவரவர்கள் கவனிககவேண்டு மென்று கட்டளையிட வேண்டும் மஹாராஜா.

நந்தகோபர்.

பிள்ளைகளை உள்ளே விடாவிட்டால மாடுமேய்ப் பார்களென்று நிசசயமுண்டா? ஒருவேளை வீட்டிற்கு வெளியிலேயே கூடிய பொழுதை போககிறுலோ— அது யாருககு என்ன லாபம?

பசுபதி

வீணுகக கெட்டுபபோகிறதுகள : தாங்களே அப் படிச சொனனுல்!

இந்திரன்.

மஹாராஜா, அவரையே கேளுங்கோ, நாஙகளிப் போ மேய்க்காததனுல் பாலேதாவது குறைவாகக் கறக்கிறதாவென்று. பசுக்கள் முன்னைவிட நம்ம கிருஷ்ணன் பிறநதது முதல் நாலுபங்கு கறக்கினறன. இனனும என்ன ஆசை?

நந்தகோபர்.

அதற்கென்ன பதில் சொல்லுகிறுய், பசுபதி?

பசுபதி.

மேய்க்காத மாடு படி கறந்தால் மேய்கிற மாடு மூணு படி கறக்கும்.

இந்திரன்.

அதுவும் பிசகு மஹாராஜா. எங்கப்பா ஒருநாள் என்னைக் கட்டாயப்படுத்தி இங்கே கிருஷ்ணனிடம் வரக்கூடாதென்று மாடுமேய்க்கப் போகச்சொன்னார். நான் அழுதுகொண்டே போனேன். அன்னிக்கி பசுக்களெல்லாம் சாதாரணத்திலும் பாதிதான் கறந்தது. அன்னியே முதல் எங்கப்பா என்னை இஷ்டப்படி இனமே கிருஷ்ணனோடேயே இருக்கும்படி உத்திரவு பண்ணீட்டாங்கோ.

நந்தகோபர்.

பசுபதி, இதையெல்லாம் தீர்க்கமாய் நினைத்து யோசித்துப் பார்க்கலாம். நாமறியாத தத்வங்களுங் கூட பகவத் சிருஷ்டியி லிருக்கலாமென்று அறியலா மல்லவா ?

பலராமன்.

ஆமாண்டா, நாமெல்லாம் கிருஷ்ணனண்டை போகலாம் வாருங்கள்

[சிறுவர்கள் உள்ளே போகிறார்கள்.]

நந்தகோபர்.

புத்தியைவிட மனஸ்ஸையே நம்பினால் நலம் என்று தோன்றுகிறது !

[போகிறார். மற்றவரும் போகிறார்கள்.]

## ஏழாம் காட்சி

---

## நவநீத ரகஷிய யோகம்.

நநதகோபர் வீடு, உட்புறம்

காலை.

யசோதை

(மோர் குழப்பிககொணடிருககிறாள் பாடிககொண்டு)

கேசவனுக்காகவென்று நேசமுடன கன்று விட்டு,
நாராணனுக்காமிதென்று நயமுடனே காலணைத்து,
மாதவனுக்கேயிதென்று மகிழ்வுடனே மடியலம்பி,
கோவிநதாய நமவென்று குமபிட்டு கறந்துவைத்து,
விஷ்ணுவுக்கு வேண்டுமென்று மட்டான தீயிற
காய்ச்சி,
மது சூதனனுக்குதவு மென்று பதமாகப் பிரையிட்டு,
திரிவிக்கிரமனுக கேறகுமென்று உரியதினில்
ஏற்றிவைதது,
வாமனனுக்குகப்பென்று நாமம் பனிரண்டும் பாடி,
ஸ்ரீதரனும் ரக்ஷித்தருள க்ஷீராப்தியைப்போல்
கடைநது,
ருஷீகேசனுக் கிதயமென்று இஷ்டமுடன்
திரட்டிவைத்து,
பத்மநாபன பதநதனில் பக்தியென்னும் வெண்ணெய்
தனை,
தாமோதரனுக் காமோதமாய் சமர்ப்பணமிது
செய்வோமே.

[கிருஷ்ணன யசோதையின் பின்னே வநது கழுத்தைக கட்டி அவள் கண்ணை மூடுகிறான்.]

யசோதை

(சிரித்துக்கொண்டு)

*யாரடா அது ?*

கிருஷ்ணன்

*நான் யாரோ!*

யசோதை

*நீ யாரோவானால் இங்கெங்கு வந்தே ?*

கிருஷ்ணன்

*யாருக்கும் தெரியாதே வந்துட்டேன் !*

யசோதை

*எனக்குத் தெரிஞ்சு போச்சே !*

கிருஷ்ணன்

*ஐயய்யோ தெரியவே யில்லையே !*

யசோதை

*என்ன தெரியவில்லை ?*

கிருஷ்ணன்

*கிருஷ்ணன் !*

யசோதை

*ஏன் தெரியவே யில்லை ?*

கிருஷ்ணன்

*நான்தான் உன் கண்ணை மூடிவிட்டேனே.*

யசோதை

*மூடினா மூடரே—நீ என்னைக் கொஞ்சம் விடு.*

கிருஷ்ணன்

நான் விட மாட்டேன.

யசோதை

மாட்டேனு நான எப்படி மோர் குழப்புகிறது.

கிருஷ்ணன்

நீ என்ன பண்ணரே ?

யசோதை

குழபபுகிறேன !

கிருஷ்ணன்

எனனத்திற்குக குழபபுகிறது?

யசோதை

குழபபினல்தானே வெணணெய் வரும்.

கிருஷ்ணன்

குழப்பாப் போனு?

யசோதை

வெண்ணெய் வராது.

கிருஷ்ணன்

ஐயோ பாவம—இநத கயிறு என்னத்துக்கு ?

யசோதை

அநதக் கயிறை அப்படியும் இப்படியும் இழுத்தால்தானே நடுவிலே அகப்பட்டுக்கொண்டிருக்கிற மத்து விடாது சுழலும்.

கிருஷ்ணன்

மத்து பாவம்! அது என்னத்துக்கு?

யசோதை

அது விடாது சுழள சுழளததான் வெண்ணெய் வரும.

கிருஷ்ணன்

நீ ஆனல் வெண்ணெய் பண்ணரையோ? யாருக்கு?

யசோதை

எலலாம உனக்குததான!

கிருஷ்ணன்

எல்லாம் எனக்கா? வெணணெய் நன்றாயிருக்குமா?

யசோதை

பாவம வெண்ணெய் சாப்பிட்டதே யில்லை. ஒன்றும தெரியாது குழநதைககு.

கிருஷ்ணன்

ஆறு கொஞ்சங் கொடேன எனக்கு.

யசோதை

இன்னும வெணணெய் வரவில்லை கண்ணே, திரடடின பிறபாடு தருகிறேன்.

கிருஷ்ணன்

சீக்கிரம் திரட்டிவிடு. நான் இங்கேயே இருக்கேன்.

யசோதை

அவ்வளவு சீக்கிரத்தில் வெண்ணெய் வராது. நீ போய் விளையாடிவிட்டு வா.

கிருஷ்ணன்

இன்னும் என்ன விளையாட்டு?

யசோதை

நீ போய் ராமண்ணாவோடே விளையாடிவிட்டு வா.

கிருஷ்ணன்

ராமண்ணாக்கு விளையாட்டே ஒன்றும் தெரியல்லே அம்மா!

யசோதை

ஆனால் நீ போய் சொல்லிக்கொடு.

கிருஷ்ணன்

சொல்லிக் கொடுக்கிற விளையாட்டும் விளையாட்டா அம்மா? அப்புறம் வரட்டுமா!

யசோதை

அப்படியே செய். போய் வா.

கிருஷ்ணன்

(சிறிது தூரம் சென்று யோசித்து, சிரித்துத் திரும்பவும் வந்து)

அம்மா வெண்ணெய் வந்தூட்டதா?

யசோதை

வெண்ணெய் மேலேயே எண்ணமா? இரு பார்க்கிறேன்!

கிருஷ்ணன்

எனக்கு வேணுமே, வந்திருக்கும், பார்!

யசோதை

இன்னும் நன்றாய் வரவில்லை. இன்னும் கொஞ்சம் குழப்பி அப்புறம் தருகிறேன். நீ கொஞ்சம் கூத்தாடு பார்ப்போம்!

கிருஷ்ணன்

கூத்தாடினால் ரொம்ப வெண்ணெய் தருவாயா?

யசோதை

ஆகட்டும்.

கிருஷ்ணன்

என்ன கூத்து, வெண்ணெய்க் கூத்தா?

யசோதை

ஆமாடா, அதென்ன கூத்து அது?

கிருஷ்ணன்

அது என் கூத்துதான்.

யசோதை

ஆடு பார்ப்போம்.

*[யசோதை மோர் குழப்பக் கிருஷ்ணன் கூத்தாடுகிறான்.]*

இந்தக் கூத்துக்கு எவ்வளவுதான் வெண்ணெய் கொடுக்கக் கூடாது என் செல்லமே! என் கண்ணே. தேவதைகளும் ஆசைப்படுவார்கள் இந்தக் கூத்தைப் பார்க்க.

*[யசோதை கிருஷ்ணனை வாரி கட்டி யணைந்து முத்தமிடுகிறாள்.]*

கிருஷ்ணன்

வெண்ணெய் எஙகே அமமா ?

[யசோதை கிரமப எடுதது அதில வெகு பாகம திருமபவும பாததிரததி லேயே போட்டுவிட்டுக கொஞசம கொடுககிறாள.]

கிருஷ்ணன்

இவ்வளவுதானா என கூததுககெல்லாம் ?

யசோதை

அப்புறம தருகிறேன கணணே !

கிருஷ்ணன்

(வெணணெயை சாப்பிட்டுவிட்டு)

வெணணெய் சாபபிட்டால தூககம வருமோ அம்மா—?

யசோதை

தூககம வநதால தூஙகேன.

[கிருஷணன தூஙகுவது போல் பாசாஙகு செயகிறான். யசோதை வெணணெயைத திரட்டி பாததிரத தில வைதது உளளே போகிறாள். கிருஷணன எழுநதிருநது வெண்ணெ யை சாபபிட்டுககொணடே யிருகக, யசோதை குரல கேட்டு வாயைத துடைததுக கொணடு திருமபவும் தூஙகுவது போலிருககிறான்.]

யசோதை

(வெணணெய குறைநதிருப்பதைப் பார்த்து)

என்ன வெண்ணெய குறைநதிருக்கிறது ? கிருஷ்ணன் தூங்கிக்கொண்டிருக்கிறுன். யார் எடுத்திருக்கக் கூடும் ?

[வெண்ணெயை எடுத்து மூடி விட்டு வெளியே போகிறுள். திரும்பவும் முன போலவே கிருஷ்ணன் சாபபிடு-கிறுன். திரும்பவும் யசோதை வருவதைப் பாாதது் படுத்துக கொள்ளுகிறுன். திருமபவும் யசோதை வந்து வெணணெயை எடுததுக கொண்டு போகப் பாாககிறுள். இன்னும் குறைநதிருப்பதைககண்டு,]

யசோதை

ஒரு வேளை கிருஷ்ணனே செய்திருக்கலாமோ? கிருஷ்ணு! கிருஷ்ணு! அயர்நது தூங்குகிறுன் குழநதை.

[தாதி வருகிறுள்.]

லக்ஷ்மீ! இதோ நான் எடுத்த வெண்ணெய் இங்கேயிருக்கிறது. இன்னும் மற்றவரெல்லாரும் எடுத்த வெண்ணெயையும் இத்துடன் ஒரே பாத்திரத்தில் சேர்த்து ஒரு பெரிய உறியில் வை.

அப்படியே செய்கிறேனம்மா.

கிருஷ்ணன்

(கண்விழித்துக் கொண்டவனபோல நடித்து)

அம்மா ரொம்ப நாழி தூங்கி விட்டேனே? வெண்ணெ யெல்லாம் ஆய்விட்டதா?

யசோதை

இன்னும் கொஞ்சம மீதி யிருக்கிறது. கிருஷ்ணா, நீ தானே இநத வெண்ணெயை எடுத்துச் சாப்பிட்டது—?

கிருஷ்ணன்

அமமா, நான அப்படி யெல்லாம் செய்வே னென்று நீ நம்புகிறாயா?

யசோதை

இல்லை என் கண்ணே. நீ ஏன் விளையாடப் போகவில்லை?

கிருஷ்ணன்

இதோ போகப் போகிறேன்! அம்மா, அமமா, நம்ம வீட்டிலேதானே இவ்வளவு வெண்ணெய்? மற்ற வீடுகளிலும் இருக்கிறதா?

யசோதை

நாமெல்லாருமே இடையர்கள் தானே! எல்லார் வீட்டிலு மிருக்கும் இநத ஆயர்பாடியில்.

கிருஷ்ணன்

பக்கத்து வீட்டிலே?

யசோதை

இருக்கும்.

கிருஷ்ணன்

அதறகு அநதண்டை வீட்டிலே?

யசோதை

அங்கேயுமிருக்கும.

கிருஷ்ணன்

எல்லா வீட்டிலேயும ஆறு வெண்ணெய் இருக்குது?

யசோதை

இருக்கும, ஆனால் ஏன கேடகிறாய்?

கிருஷ்ணன்

எனககு கேட்காமலே தெரியும. ஆனாலும் சும்மா கேட்டேன்

யசோதை

உனக்கென்ன, வெணணெய் விசாரம் பெரிய விசாரமாய் விட்டது போலிருககிறதே?

கிருஷ்ணன்

வெண்ணெய், நலல வெணணெய் அம்மா. அது பாரு! திப்பி இலலாதே மழுமழுானு, வாசனையா, ருசியா, கடிக்காமலேயே சாப்பிடலாம. அதான் எனக்கு வெண்ணெய் மேலே ரொமப இஷ்டம.

யசோதை.

ஓஹோ! தெரிநதது. நீ ஓடிப்போய் விளையாடப்போ.

கிருஷ்ணன்.

என்ன விளையாட்டு போம்மா. எப்போதும் விளையாட்டு தானு.

யசோதை.

ஐயோ, பாவம், கிருஷ்ணனைப்போல் நல்ல பிள்ளை லோகத்திலேயே கிடையாது.

கிருஷ்ணன்.

இல்லவேயில்லை யம்மா, நேக்கு தெரியும்.

[கிருஷ்ணன் போவதுபோல் போய ஒளிந்துகொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறன.]

யசோதை.

நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும், லக்ஷ்மீ!

தாதி.

அப்படியே அம்மா!

[யசோதை போகிருள்.]

கிருஷ்ணன்.

(திரும்பி வந்து)

தாதீ, அம்மா யெங்கே?

தாதி

காரியமாய உள்ளே போனாகள். கண்ணே! என்ன வேணடும்?

கிருஷ்ணன்.

அதென்ன அது, வெண்ணெயா?

### தாதி.

ஏன், வேண்டுமா என்ன? (கொஞ்சம் கொடுக்கிறாள்.) இந்தா ஓடிப்போ இன்னமே வராதே.

### கிருஷ்ணன்.

இதென்ன துளியுண்டு? எனக்கு வேண்டாம்.

[தாதி இன்னும் கொஞ்சம் கொடுக்க, சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் ஒளிந்து கொள்ளுகிறான். தாதி வெண்ணெய்க் குடம் கொண்டு வந்து யசோதை கடைந்த வெண்ணெயையும் சேர்த்து வைக்கிறாள். அப்பொழுது யசோதை 'தாதி' என்று கூப்பிட, தாதி போகிறாள்.]

### கிருஷ்ணன்.

(வெளிவந்து)

இதுதான் சமயம். (வெண்ணெய்க் குடத்தில் ஆழமாய்க் கை முழுக்கக் கை விட்டு சாப்பிட்டு இன்னும் துழாவுகிறான்.)

(யசோதை வருகிறாள்.)

### யசோதை.

என்னடா கிருஷ்ணா? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

### கிருஷ்ணன்.

(பயந்ததுபோல் நடித்து வெண்ணெயையும் விட்டுப் போக இஷ்டமில்லாமல் விழிக்கிறான்.) அடி வெண்ணெய் எப்படி இருக்கும் என்று யோசனை தோன்றிற்று அம்மா. கோபிக்காதே. நல்ல அம்மா அன்னு?

யசோதை

உன்னை கோபித்துக் கொண்டு என்ன பிரயோஜனம்? நீ குழந்தை, உனக்கென்ன தெரியும்.

கிருஷ்ணன்.

ஆமாம் அம்மா, எனக்கு ஒன்றும் தெரியாது.

யசோதை.

தாதீ, லக்ஷ்மீ. (லக்ஷ்மி வருகிருள்.) இதோ பாரதையா உன் வேலையை.

கிருஷ்ணன்.

ஆமாமமா, அவள் வைக்கவேதானே—வெண்ணெய் கூபபிட்டது, நான் வநதேன!

யசோதை.

நான் உன்னிடம என்ன சொன்னேன்?

[கிருஷ்ணன தாதிககு ஜாடை செய்கிறுன்.]

தாதி.

குடத்தை நிரப்பி எடுத்துவைக்கலா மென்றிருந்தேன் அதற்குள் நீங்கள் கூப்பிடவே வநது விட்டேன்.

யசோதை.

நீ எப்பவும அஜாக்கிரதைக்காரி. உன்னை வேலையிலிருந்து நீக்குவதே சரி.

தாதி.

அம்மா, இந்தத் தடவை என்னை மன்னிக்க வேண்டும். கிருஷ்ணன விளையாடப் போய் விட்டா னென்று நினைத்தேன்.

கிருஷ்ணன்.

ஆம் அம்மா, நான்கூட அப்படித்தான் நினைத் தேன்!

[யசோதை சிரிககிறாள்.]

அமமா! தாதி, நலல தாதி, அவளைக் கோவிச்சுக் காதிங்கோ அமமா—எனக்காகவாவது.

யசோதை.

அப்படியே ஆகட்டும கணணே. (தாதியைப் பார்த்து) இனிமேல் அபபடிச செய்யாதே.

தாதி.

இல்லையம்மா.

[வெணணெயக குடத்தை எடுககப் போகிறாள்.]

கிருஷ்ணன்.

(கையில கடைசியில் ஒரு கை வெண்ணெய எடுத்துக் கொள்ளுகிறான்.)

யசோதை.

சாப்பிட்டது போராதா?

கிருஷ்ணன்.

அம்மா, எல்லாம் எனக்கு என்று சொன்னாயே இப்போ ஏன் கோவிச்சுக்கிறே அம்மா.

யசோதை.

வயிற்றுக்காகுமா அளவுக்கு மிஞ்சிச சாப்பிட்டால்?

கிருஷ்ணன்.

பயப்படாதே அம்மா. எனக்கு வெண்ணெய் ரொம்ப கூட்டாளி. எவ்வளவு சாப்பிட்டாலும் ஒன்னும் பண்ணாது.

யசோதை.

நானும் கூட்டாளி தானே

கிருஷ்ணன்.

அதுதான் நீயும் என்னை ஒன்னும் பண்ண மாட்டாய்.

[போகிறார்கள்.]

---

## எட்டாம் காட்சி.

---

# விபூதி யோகம்.

## ஆயபாடித் தெரு.

மாலை.

(கிருஷ்ணன், பலராமன், கருப்பன, இந்திரன், ராமன், குள்ளன், இவர்களும் இனனும அநேக சிறுவர்களும் விளையாடக கூடியிருககிறார்கள்.)

இந்திரன்

வீணு பொழுது போகிறதே! ஏதாவது விளையாடலாம கிருஷ்ணு. என்ன விளையாடலாம் நீதான் சொல்.

கிருஷ்ணன்.

கட்டுக் கண்ணுமூசசி ஆடலாம் வாருங்கோ.

கருப்பன்

எனனமா ஆடுகிறது.

கிருஷ்ணன்.

புது மாதிரியாக ஆடலாமா? கோட்டுக்கு வெளியில் ஒருவரும் ஓடக்கூடாது. ஒருவன் கண்ணைக் கட்டிக்கொண்டு பிடிபட்டவன் பேரைச் சொல்ல வேண்டும்.

குள்ளன்.

பநதயமெனன.

பலராமன்.

தோறறவனை எலலாருமஒவ்வொரு குட்டு குட்டுகிறது.

கிருஷ்ணன்.

இலலை! தோறறவன நான சொலலுகிறதைச செயயவேணும.

கருபபன

நீ அஸாததியமானதைச சொன்னால?

கிருஷ்ணன்

அஸாததியமென்று ஆகேஷபிததால நான செய்து காட்டினால் சரிதானே

இந்திரன்.

ஆனால சரி.

பலராமன்.

நான முனனே கண்ணை கட்டிககொள்ளுகிறேன.

இந்திரன்

ஆமாம நீதாண்டா பெரியவன.

[பலராமன கணணை கட்டிககொள்ள கிருஷணன தனனுடைய தோகை முதலானதுகளை இநதிரனுகடு வைக கிறான. ஒருவரும பலராமன கையி லகபபடாதபோது கிருஷ்ணன இந திரனை யகபபடுக கொளளுமபடி ஜாடை செயகிறான. இநதிரன அகப்பட்டுக கொணடதும பலராமன்

தடவிப் பார்த்து 'கிருஷ்ணன்' என்கிறான். எல்லாரும் கைதட்டி நகைக்கிறார்கள். 'பலராமன் தோற்றான்' என்றும் கூவுகிறார்கள். பலராமன் கட்டவிழ்த்துப் பார்த்து ஏமாந்த காரணத்தைத் தெரிந்து கோபத்துடன்]

பலராமன்.

இதென்ன மோசமிது! கண்ணை மூடிக்கொண்ட போது இருந்தது போல தானே இருக்கவேணும். மாறுவேஷம் தரிக்கலாமா?

கிருஷ்ணன்.

அப்படி ஏதாவது ஏற்பாடுண்டா? ஆளைத் தடவிப் பேர் சொல்லுகிறதா, தோகையைத் தடவிப் பேர் சொல்லுகிறதா? நீ தோற்றதாக ஒப்புக்கொள்.

பலராமன்

நான் ஒப்புக்கொள்ள மாட்டேன், இந்த ஆட்டம், தூ! தூ!

கிருஷ்ணன்.

ராமண்ணா தோற்றானா இல்லையா, நீங்களெல்லாம் சொல்லுங்கள்.

எல்லாரும்

ஆமாம், தோற்றான், தோற்றான்!

கருப்பன்.

ஆனால் என்ன செய்யவேண்டும்?

இந்திரன்.

என்ன பலராமா, என்ன சொல்லுகிறாய்?

பலராமன்

நான் தோற்றேனென்றுதான் உங்கள் தீர்மான மோ? ஆனால், கிருஷ்ணா! நான் என்ன செய்யவேண்டும் சொல்

கிருஷ்ணன்.

நான் கொடுக்கிறதைச் சாப்பிடவேண்டும். நீங்களெல்லாரும் சாக்ஷி (ஒரு பிடி மண்ணெடுத்து) இந்தா, இதைச் சாப்பிடு.

பலராமன்.

அப்பவே கருப்பன் கேட்டானே,—செய்ய முடியாத காரியத்தை செய்யச் சொன்னாலென்று!

கிருஷ்ணன்

முடியாத காரியமென்ன இதில்? வயிறு இருக்கிறது, வாயிருக்கிறது, கையிருக்கிறது, மண்ணிருக்கிறது!

கருப்பன்.

நீ மண்ணைச் சாப்பிடுவாயா சாப்பிடச் சொன்னால்?

கிருஷ்ணன்.

சொல்லாதே வேண்டுமானாலும் சாப்பிடுகிறேன். பார். (ஒருகை மண்ணெடுத்து வாயில் போட்டுக்கொள்வது போல் நடித்து, மென்று விழுங்குவது போல நடிக்க)

பலராமன்.

இதென்ன அநியாயம். என்னை மண் தின்னச் செய்வதற்காக கிருஷ்ணன் தான் மண்ணைத் தின்

கிறுனே. நான் போய்ப் பெரியம்மாவிடம் சொல்லு கிறேன பார் !

(போகிறுன.)

இந்திரன்.

நிஜமாகவா சாப்பிட்டு விட்டாய் பிடி மண்ணையும்?

கிருஷ்ணன்.

நீங்கள எல்லோருமதான கண் கொட்டாமல் பார்த்துககொண்டிருந்தீர்களே ?

[பலராமனும யசோதையும வருகிறார்கள.]

யசோதை.

என்னடா கிருஷ்ணு ! மண்ணைத் தின்னுயாமே ?

கிருஷ்ணன்.

பயிததியம பிடிசசுதா என்ன: மண்ணு கூட வெண்ணையா என்ன ?

பலராமன்.

இவாளை யெல்லாம கேளுஙகோ அமமா. நான் கண்ணுலே பாாததேன.

கிருஷ்ணன்

உங்க கண்ணுலேயே பாருஙகளேன.

யசோதை.

நீங்கள் பாாததீர்களா, மண்ணைத் தின்னுனு கிருஷ்ணன ?

இந்திரன்.

மண்ணைததான் கையிலெடுத்தான. அப்புறம் என்னமோ வாயிலே போட்டுககொண்டு மென்று முழுங்கினுன்.

கருப்பன்.

நானும் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன்.

யசோதை.

குள்ளா, நீ பார்த்தாயா?

குள்ளன்.

நான் நன்ருய் கவனிக்கவில்லை யம்மா.

யசோதை.

நீ குள்ளனன்ரு. ராமா, நீ பார்த்தாயா?

ராமன்.

எல்லோரும் பார்த்தோமம்மா.

யசோதை.

கிருஷ்ணு, இப்போ என்ன சொல்லுகிருய் நீ?

கிருஷ்ணன்.

எல்லார் சொல்லுகிறதும் பொய். நான் சொல்லுகிறது தான் மெய்.

யசோதை.

நீ சத்திய அரிச்சந்திரன் தான். மண்ணைச் சாப்பிட்டாயா இல்லையா?

கிருஷ்ணன்.

எப்போ அம்மா? எப்பவாரு சாப்பிட்டிருக்கலாம்.

யசோதை.

இப்போ சாப்பிட்டையா இல்லையா?

கிருஷ்ணன்.

என் வாயிலே நானே மணலைப் போட்டுக்கொள் வேணோ அம்மா ?

யசோதை.

பின யார் வாயில் போட்டாய் ?

பலராமன்.

என் வாயில் போடப்பார்த்தான்

கிருஷ்ணன்

போட்டேனு ?

பலராமன்

போடவில்லை.

கிருஷ்ணன்

அப்படியே தான என வாயிலேயும போடப் பார்த்தார்கள். ஆனால போடவில்லை.

யசோதை

என்ன கிருஷ்ணு, எனனமோ கதை பண்ணுகிறு யே ? வாயைததிற பாரப்போம.

கிருஷ்ணன்

ஆம. அதுதான சரி. வாயைபபார்ததால் எல்லாம தெரிநது போகிறது. (வாயைத திறநது காணபிககிறுன.)

யசோதை.

இது என்ன ஆஸ்சரியம. அங்கே ஒரு லோகம் தெரிகிறதே. (சுறறிப்பாாதது) இதெனன மாயம். வாயிலே என்ன வைத்துக்கொண்டிருக்கிறுய் கிருஷ்ணு! அங்கே வேறு பூலோகமாய் தெரிகிறதே ?

கிருஷ்ணன்.

இவா சொல்ராளே அதுவா? நான் எத்தனை தரம் மண் சாப்பிட்டிருப்பேன். அதெல்லாம் வயிற றிலே பூலோகமாய்ப் போச்சோ என்னமோ!

யசோதை.

(வாயில கையை விட்டுப் பார்த்து) ஒன்றையுங் காணுமே. மண்ணுமில்லை, கிண்ணுமில்லை. நீ என்ன வித்தை பண்றயோ?

கிருஷ்ணன்.

வித்தையோ, அவித்தையோ! இவாள் எல்லாம் சேர்ந்து கொண்டு மண்ணை யெல்லாம் நான் தின்னுட் டேன்னு பழி போட்டா, அம்மா, என் மேலே.

[அழுவதுபோல பாசாங்கு பண்ணுகிறான்.]

யசோதை.

அழாதேடா என் கண்ணே. மண்ணு தின்ன வாய்க்கு வெண்ணெய் தரேன் வா.

[கிருஷ்ணனை அழைத்து செல்லுகிறாள்.]

கிருஷ்ணன்.

மண்ணு சாப்பிடுகிறவாகளுக் கெல்லாம் வெண் ணெய் கிடைக்குமா அம்மா?

[போகிறார்கள்.]

## ஒன்பதாவது காட்சி.

---

## ஸ்வகர்ம யோகம்.

*நந்தகோபா வீட்டு வாசல்*

மாலை.

(கிருஷ்ணனும் சிறுவாகளும.)

இந்திரன்

*அடே! கிருஷ்ணா நான ஒனனு சொல்ரேன். அப்படி செய்யரையாடா?*

கிருஷ்ணன்.

*எனக்கு அதைவிட எனனடா வேலை இங்கே? சொலலேன பாாப்போம்.*

இந்திரன்.

*நாளையே பிடிசசு நீ எஙகளோடே கனறு மேய்க்கவாடா; எலலாருமம உனனோடேயே இருக்கலாமா நாளெலலாம. வேடிக்கையாயிருககும. விளையாடலாம் — இஷ்டபபடி யெலலாம இருககலாம் — இநதப் பெரியவங்கனனு இருககாஙகளே அவங்க அவுதியெல்லாம் இல்லாதே!*

ராமன்.

*ஆமாண்டா, அதுதாண்டா யுக்தி. உன்னை விட்டுப்போகவும் மனசிலலை. கனனு மேய்க்காவிட்டாலும் கடுமுடு எனகிறாஙகடா.*

குள்ளன்.

அடே! அவன ராஜா பிள்ளை சீமான் ஆச்சே, வரலாமா நம்மோடே கனு மேய்கக?

கருப்பன்

என்ன ராஜாடா? இடையா ராஜாதானே. ஜாதி வேலைததனம செய்தா ராஜாததனம போய்விடுமோடா?

கிருஷ்ணன்.

என்னடா! மனுஷனனேடா நான? நான என்ன செயயணும, என்ன செயயவேணுமெனறு நீஙகளே தீாததுாடாப போலே இருககிறீக?

இநதிரன்

நீ பெரியவனதான. ஆண பிளளைதான. கோவிச சுககாதே. நான சொனனதுககு எனன சொலரே.

கிருஷ்ணன்.

எனககு நீ சொலலணுமோடா அபபா அமமாவை நீஙக சரிப்படுததுாடுஙகோ. அப்புறம நாம இஷடப் படி யெலலாம் செயயலாம, தினமொரு வேடிககையா.

இநதிரன்.

நீ மனசுவைததா அது எபபடியானலும ஆய்ப் பூடுண்டா. உஙக அப்பா அமமாவை உனனுலே சரிப்படுத்த முடியாதே, எஙகளால ஆகபபோகிறதா.

[நநதகோபா வருகிறுர்].

கிருஷ்ணன்.

அதோ அப்பா வருகிறா. நீங்களெல்லாம சேர்நது கேளுங்கோ.

நந்தகோபர்.

பிள்ளைகாள, என்ன விளையாடாமல் ஏதோ யோசித்துக்கொண்டிருககிறீர்கள ?

கிருஷ்ணன்.

விளையாடடுககுததான யோசனை ரொமபவேணுமே அப்பா. அதறகுத்தான யோசனை பண்ணிக்கொண் டிருககிறோம.

நந்தகோபர்.

அதென்ன அவவளவு யோசனை ?

கிருஷ்ணன்.

அது ஒரு பெரிய ரகஸியம, சொல்லக்கூடாது.

நந்தகோபர்.

எனக்குத தெரியக்கூடாத ரகஸியம அதென்ன?

கிருஷ்ணன்.

அது எத்தனையோ இருககும.

நநதகோபர்.

இதை மாத்ரம் சொல் பாரப்போம.

கிருஷ்ணன்.

சொல்லிவிடடடுமா. இவாளெல்லாம என்னை நாளையே பிடிச்சு அவாளோடு கன்னு மேய்க்க வரச் சொல்ரா. நான் போகட்டுமா அப்பா?

நந்தகோபர்.

கிருஷ்ணு! நீ ஏன போகவேண்டும?

கிருஷ்ணன்.

நான ஏன் போககக்கூடாது, அபபா?

நந்தகோபர்.

நம்மை ராஜா வெனகிறுாகள், நமச்காக வேலைக் காராகள மாடுகளைறுகளை மேய்ககிறுர்களே?

கிருஷ்ணன்.

நான கூட வேலைககாரனு இருககேனே அப்பா?

நந்தகோபர்.

நீ பெரிய வேலைககாரனதான உனக்கார கூலி கொடுககிறது?

கிருஷ்ணன்

நான கூலிககா வேலை செய்கிறது? ஐயோ அப்பா! உனக்கொனனுமம தெரியலலையே.

நந்தகோபர்

ஆனுல் நீயே சொல பாாபபோம.

கிருஷ்ணன்.

சொல்லட்டுமா? எனக்கு வேலை இன்னு ரொமப இஷ்டம அபபா. அதுவும ஒரு விளையாடடுததானே. விளையாட்டாடடமா செய்துாடரேண.

நந்தகோபர்.

விளையாட்டு வேலை என்ன வேலை?

கிருஷ்ணன்.

ஆனால் கூலி வேலைதான நல்லவேலையோ? ஐயோ அபபா! நீ என்னை வேலைக்காரனா வைச்சுக்கோ. நான என்னென்ன வேலை செய்கிறேன் பார்.

நந்தகோபர்

என்னென்ன செய்வாய், கண்ணே.

கிருஷ்ணன்.

நான் செய்யர வேலை யார செய்வா அபபா? அதெல்லாம என்னாலேயே சொலல முடியாதே!

நந்தகோபர்.

ஆம! அப்படியா. ஆமாம நீ அப்புறம கூலி கேட்டால?

கிருஷ்ணன்.

கொடேo!

நந்தகோபா.

நான உனக்கு என்ன கூலி என்று கொடுப்பேன?

கிருஷ்ணன்.

நீதான.

நநதகோபர்.

சரி, என்னையே கூலியா வாஙகிக் கொள்ளுகிறாயா என்ன?

கிருஷ்ணன்.

எல்லாரையும!

நந்தகோபர்.

சரி, 'நீ எல்லாரையும் கூலியா வாஙகிக்கொண்டால் நீயே யஜமானாய்ப்பூடரே!

கிருஷ்ணன்.

ஆமாம்! நான் தானே யஜமானன்?

நந்தகோபர்.

அப்புறம வேலைககாரன யார்?

கிருஷ்ணன்.

நானதான அபபவே சொனனேனே.

நந்தகோபா.

ஆனால் யஜமானன வேலைககாரன இரணடும நீ தானே ஆனால் நீயேன எனனை கேட்ககிறாய்?

கிருஷ்ணன்

நீ அப்பாவனா?

நநதகோபர்.

உனனோடு வார்ததை சொலல யாரால முடியும. ஆமாம நீ கன்று மேய்ககிறேனெனகிறயே, நீ சினன வனாசசே?

கிருஷ்ணன்.

நானு சினனவன, நீ பாரு எனனை!

நநதகோபர்

அபபா! நீ எவவளவு பெரியவனடா! அதிருக் கட்டும. கனறு ஓடிபபோனால நீ என்ன பணணுவாய்.

கிருஷ்ணன்

அது எங்கே போனாலும பாரத்துககொண்டே யிருப்பேன்.

நந்தகோபர்.

ஓடியே போய்விட்டால ?

கிருஷ்ணன்

ஓடிபபோகட்டுமே !

நந்தகோபர்.

அபபுறம கனறு இராதே.

கிருஷ்ணன்

ஒரு கன்னு போனு இனனொரு கனனு வாது.

நநதகோபர்.

ஆமாம. காட்டிலே புலி கிலி வநதுதானு.

கிருஷ்ணன்

எனனு புலியோ ! எனனு கிலியோ ! நான் எல்லாத்தையும கொன்னூடரேன அபபா !

நநதகோபர்.

ராக்ஷஸாள் மாறுவேஷம போட்டுககொண்டு வந்தால் என்ன செய்வாய் ?

கிருஷ்ணன்

எல்லாம் எனக்கு தெரிஞ்சூடும். அப்போ எப்படியானு அவாள் வேஷமே அவாளுக்கு துவேஷமாப் பண்ணிவிட மாட்டேனு. உனக்கு தெரியாதோ ? நீ வேணுமானுல பாரு.

நநதகோபர்.

நீ பெரிய சூரன்தான் எனக்கு தெரியும். ஆனு—

ஆறு—ஆறு— ஆறு. என்ன ஆறு. எப்பவும் ஆறுதானு? ஆறு வோடேயே முடிந்து போரது எல்லாம்.'

நந்தகோபர்.

(ஸ்வகதம)

ஆஹா! கிருஷ்ணன பேசும பால ஜலபிதங்களும எவ்வளவு ஆழமானதும அழகானதுமான அர்த்த முடையவைகளாகத் தோன்றுகின்றன? ஆமாம, மனுஷ்ய புத்தி சஞ்சலந்தானே. துணிவதே கருமம. ஆனுல் — திருமபவும ஆனுல — ?

கிருஷ்ணன்

என்ன அப்பா என்னமோ நீயே உனக்கே பேசிக் கொண்டிருக்காயே?

நந்தகோபா.

ஒன்றுமில்லே, கண்ணே கிருஷ்ணு! சரி உன னிஷ்டப்படி செய். கன்று மேய்க்கத்தான வேண்டுமோ?

கிருஷ்ணன்

பசுக்கள் வேலேதானே, நம்மைப்போல இடைய ரெல்லாம் செய்யணும்.

நந்தகோபா.

ஆமாம. அதுதான நம்முடைய குலதர்மம், குலகர்மம்.

கிருஷ்ணன்

பின்னே அதை விட்டுட்டு,—ஆறு —நான் போ கட்டுமா நாளேயே பிடிச்சு கனறு மேயக்க?

இந்திரன்.

அடே பசங்களா, வாருங்கடா விளையாடப்போக லாம். நாளையே பிடிச்சு கிருஷ்ணனை வரப்போறான கன்னு மேய்க்க !

நந்தகோபர்.

நல்லது. ஆனாலும உஙகமமாவை ஒரு வார்த்தை கேட்டு விடுகிறேன.

கிருஷ்ணன்.

அது ஒனறு!—இனனும—அது— அதோ அம்மா வரா. அப்பா எபபடியாவது—

நந்தகோபா.

அபபடியே ஆகட்டும கணணே !

[யசோதை வருகிறாள.]

யசோதை.

எது எபபடியே யாகட்டும? என்னைக் கூப்பிட் டீாகளா ?

நந்தகோபா.

நான் கூப்பிட வில்லையே !

யசோதை.

தாதி சொனனாளே, தாஙகள் ஏதோ என்னைக் கூப்பிட்டது போலிருநததெனறு.

நந்தகோபா.

அக்கரையில்லை. உனனை கூப்பிடத்தானிருநதேன். சமயத்தில் வநதாய். நாளைமுதல் கிருஷ்ணன கன்னு மேய்க்கப போகவேண்டுமெனறு பிடிவாதஞ் செய் கிறான.

யசோதை.

என்ன! நன்றாயிருக்கிறது. கிருஷ்ணனாவது கன்று மேய்க்கப் போகிறதாவது? உங்களுக்குப் பயித்தியம் பிடிச்சுதா என்ன?

கிருஷ்ணன்

அப்பாவுக்கில்லே யம்மா எனக்குத்தான் கன்று மேய்க்கணுமின்னு ஒரு பயித்தியமா இருக்குதம்மா.

ரோஹிணி

அந்தப்பையன் இந்திரன்தான் இந்த கலகம் பண்ணியிருக்கவேணும். அவனெங்கே?

கிருஷ்ணன்.

ஐயோ! பாவம் ஒரண்டை, பழி ஒரண்டை. இந்திரன் என்ன செய்தான் அம்மா? எல்லாம் நான் தான்.

யசோதை.

எல்லாம் நீ தான் சரி: ஆனால் இந்த பயித்தியத்தை மாத்திரம் விட்டுவிடு.

கிருஷ்ணன்

பயித்தியம் பிடிச்சா விடுமா, அம்மா? அதுவும் எனக்கு—?

யசோதை.

விடாப்போனால் போகிறது. நாம் உள்ளே போகலாம் வா.

கிருஷ்ணன்.

இப்பவா உள்ளே போறது? ஐயோ பயித்தியமே!

யசோதை.

நானா பயித்தியம்? கிருஷ்ணா என் கண்மணி.

கிருஷ்ணன்.

இல்லையம்மா, நான் தான் பயித்தியம். இல்லா விட்டால்——

யசோதை.

இல்லாவிட்டால் என்ன?

கிருஷ்ணன்.

இல்லாவிட்டால் ஒன்றுமில்லை.

யசோதை

என்ன, வரவர கிருஷ்ணன் இப்படிப்பேசுகிறானே?

நந்தகோபர்

எப்படி பேசுகிறான்? குழந்தைகள் எப்படி பேசுமோ அப்படித்தான் பேசுகிறான்.

யசோதை.

எல்லாம் நீங்கள் கொடுக்கும் இடந்தான் அவனுக்கு!

கிருஷ்ணன்.

ஆமாமம்மா, அப்பா இடங்கொடுத்துத்தான் இப்படி ஆய்விட்டேன். இல்லாபபோனால் கன்று மேய்க்க எனக்கு இப்படி பயித்தியம் பிடிக்குமா என்ன!

யசோதை.

கேட்டைகளா கிருஷ்ணன், என் கண்ணு, சொன்னதை? அவனுக்கு எல்லாந் தெரியும்.

நந்தகோபர்.

எல்லாந் தெரிந்துதான் கன்று மேய்க்க போக வேண்டு மென்கிறான்.

யசோதை.

நல்லவேலை, திரும்பவும் ஞாபகப்படுத்தி விட்டீர்களா?

கிருஷ்ணன்

ஐயோ அம்மா. எனக்கு எப்பவும் ஒன்னும் மறக்கவே மறக்காது அம்மா!

யசோதை

மறக்காமபோனால் போகிறது, நீ உள்ளே வா. உனக்கு ரொம்ப வெண்ணெய் தருகிறேன்.

கிருஷ்ணன்.

வெண்ணெய் எங்கேயும் போகாது! அப்புறம் நான் ரொம்ப வாங்கிக்கொள்கிறேன். கன்னு மேய்க்கப போகட்டுமா அம்மா நான் நாளையே பிடிச்சு?

யசோதை

கண்ணே கிருஷ்ணா, நீ போகவே கூடாது. எங்கே பாத்தாலும் ராக்ஷஸர்கள் வந்து குழந்தைகளைக் கொன்று விடுகிறார்களாம். காலம் கெட்டுப் போயிருக்கிறது.

கிருஷ்ணன்

ஐயோ பாவம்: அதென்னம்மா? ஏன் அம்மா கெட்டுப்போச்சு?

யசோதை.

உன்னைப்போல துஷ்டனாயப போசசு.

கிருஷ்ணன்.

என்னைப்போலவா அமமா ? அப்படியானா என்னைப்போலே ரொம்ப ரொமப நல்லதா இருக்கணுமே! உங்களுக்கு ஒன்னுமே தெரியலலே யமமா !

யசோதை.

எனக்கு தெரியாமல போனால் போகிறது. உனக்கு ராக்ஷஸாள் ஸமாசாரம தெரியுமா ?

கிருஷ்ணன்

நீயே சொல்லிருக்கையே அமமா? நான குட்டிப் பாபாவா தொட்டிலிலே இருக்கசசேயே ஒரு பெரிய ராக்ஷஸியை கொண்ணூட்டேனென்னு.

யசோதை.

அதெனனமோ, அநத சமயம பகவானதான் இருநது காப்பாறறி ன்.

கிருஷ்ணன்.

யாரமமா ?—

யசோதை.

பகவான்தான்.

கிருஷ்ணன்

இப்போ எங்கே யமமா அவன் ? எங்கேயானு ஓடிப்பூட்டானு?

நந்தகோபா.

கேட்டாயா யசோதை? கிருஷ்ணன கேட்கிற தற்கு அர்த்தம மனதில் படவில்லையோ? பகவான் சாவ வியாபியான ஸ்ரீமந நாராயணன தவிர யார்தான் எதைத்தான ரக்ஷிகக வல்லார?

யசோதை.

சரி, குழந்தை சொலலுகிற தத்துவம உஙகளுக் குத் தலைக்கேறிப போனறு போலிருக்கிறது!

நந்தகோபா.

சொல்வது குழந்தையானுலும், தத்துவம வேறுகுமோ.

யசோதை.

இது நல்ல தததுவம. நாமிருககவேண்டிய ஜாக கிறதையில இருநதால் தானே நமககுத் தெயவம ஒத்தாசை பண்ணும.

கிருஷ்ணன்.

இதெலலாம என்னுமமா இது? நீ எனனேடு சொலலேன. நான அபபடியே செய்துடறேன

யசோதை.

என்னுன்னு சொலலணும கண்ணே?

கிருஷ்ணன்.

கிருஷ்ணு உன்னை நீ ஜாக்கிரதையாய்ப் பாாததுக் கோனு.

யசோதை

அப்படியே சொல்லரேன் கண்மணி. "கிருஷ்ணு உன்னை நீ ஜாக்கிரதையாய்ப் பாரத்துக்கோ."

கிருஷ்ணன்

ஆய்போச்சு.

யசோதை

இனிமேல் கன்று மேய்க்கப் போகமாட்டாயே?

கிருஷ்ணன்.

இதோ இன்னமேதான போகணுமே—

[தூரததிலிருநது பிளளைகள 'வணடி, வணடி' எனறு கூடும் கூககுரல கேட்கிறது. கிருஷணன் யசோதை கையை திமிறிககொணடு புனனகையுடன ஓடிப போயவிடுகிருன.]

யசோதை

ஆஹா, கிருஷ்ணன் எஙகே ஓடிபபோயவிட்டான்?

நந்தகோபா.

ஏதோ பசஙகள் விளையாட்டுப போலிருககிறது.

யசோதை

இதெறகென்ன செய்வது நாம? இநத கிருஷ்ணன ஒரு இடததிலே இருக்கமாட்டாதிருககானே ஒரு விஞடிகூட சேஷ்டையிலேயே திருஷ்டி எபபோதும.

நந்தகோபர்.

குழநதையின ஸ்வபாவம தெரியாமல் கிலேசப் படுகிருய். அவனைப்பற்றி விசாரப்படவேண்டாம்.

கண்டங்கள் நேரிடுமாயினும் ஆயுசுக்கு பயமில்லை யென்று ஜோஸ்யர் சொன்னதை மறந்தாயோ? அதுவு மல்லாமல் இவ்வளவு கிருபை செய்த பகவான் கைவிட மாட்டான்.

யசோதை.

அவனையே தான் நம்பி யிருக்கிறேன் நானும்.

[அந்த சமயத்தில் கிட்டி வருகிற ஓர் ஆரவாரம் கேட்கிறது 'ஜய விஜயீபவ' என்று பிள்ளைகள் கோஷிக்கிறார்கள்.]

யசோதை.

இதென்ன கோஷம்?

[அதற்குள் பிள்ளைகளும் கிருஷ்ண னும் சில கோபர்களும் வருகிறார்கள்.]

இந்திரன்

(ஓடிவந்து)

இந்த ஆஸ்சரியத்தைத் தாங்கள் நேரில் பார்க்க வில்லையே? நாங்களெல்லாம் விளையாடிக்கொண்டிருந் தோமா? அப்போ திடீரென்று ஒரு வண்டி, மாடு குதிரை ஒன்றுமில்லாமலே விரென்று இப்படியும் அப்படியும் ஓடிவந்தது. அதற்குப் பயந்து நாங்கள் 'வண்டி வண்டி' யென்று கூக்குரலிட கிருஷ்ணன் ஓடிவந்தான். அவன் வரவும் அவன்மேல் ஏறுவது போல் அந்த வண்டி எதிர்த்து வந்தது. கிருஷ்ணன் பயப்படாமலே, நாங்கள் கூப்பிடுவதையும் கவனி யாமலே, நின்று கொண்டிருக்க, அந்த வண்டி கிட்டே

வந்ததும் கிருஷ்ணன் சட்டென்று பக்கத்தில் குதித்து வண்டியை இடக்காலால உதைக்க அது மற்றோர் பக்கமிருந்த படுகுழியில விழுந்து சுக்கல சுக்கலாய் போய் விட்டது. உடனே அந்தப பள்ளத்திலிருந்து கோரமான சப்தம கேட்க நாஙகள் எட்டிப பார்த தோம. அஙகே ஒரு ராக்ஷஸன் கைகால்களை உதறிக கொண்டு செத்துக கொண்டிருந்தான். நீஙகளே வந்து பாருஙகோ, கிருஷ்ணன அந்த சமயத்திலே வராப்போனா நாஙகளளாம செத்துபபூட்டிருப்போம.

யசோதை.

அப்படியா என கணணே? (கிருஷ்ணனை எடுத்து முத்தமிட்டு) அதை எபபடி செயதாய கண்ணே?

கிருஷ்ணன்.

என்ன ராக்ஷஸனும ஒருஉதைககுத் தாஙகலேயே! அவன் தவிடு பொடியாப் பூட்டான.

யசோதை.

உன சக்தியும யுக்தியும யாருக்கு வரும்?

நந்தகோபா.

எல்லாம் பகவான செயல. போய்ப பார்பபோம் வாருங்கள.

[எல்லாரும் போகிறார்கள்.]

## பததாவது காட்சி

---

# நவநீத சௌாய ரகஸிய யோகம்.

நநதகோபா வீடு.

சாயஙகாலம.

(கிருஷணன ஒரு புறமாக நினறுகொணடு மிகவும கஷ்டபபடுகிறவன போலிருககிருன )

யசோதை.

கிருஷ்ணு என்ன இனனிககு ஆஸசரியமாயிருக்கிறது. வெளியிலேயே போகவிலலே. விளேயாடப் போகவுமிலலே. என்ன உடமபு உனககு ?

கிருஷ்ணன்.

என உடமபு என்னததைதேனு சொலவேன ?

யசோதை

அதெனன, அபபடி எததனே உடமபு. என கணணே சொலலு.

கிருஷ்ணன்.

கால் நோவு !

யசோதை.

சுமமா ஓடிஞல?

கிருஷ்ணன்.

இடுப்பு நோவு !

யசோதை.

வாய்வாயிருக்கும். எண்ணையே சாப்பிடமாட்டேனே என்றால்?

கிருஷ்ணன்.

வயிற்று நோவு!

யசோதை.

வெண்ணெயையே விழுங்குகொண்டிரு: வயிறு நோகாது.

கிருஷ்ணன்.

மார் நோவு!

யசோதை.

ஒருமரம் பாக்கியில்லாதே ஏறணுமென்றால்?

கிருஷ்ணன்.

கை நோவு!

யசோதை

ஓயாதே பெரிய பசங்களோடெல்லாம் குஸ்தி போடு, கை நோகாது.

கிருஷ்ணன்.

தலைகூட நோகிறதம்மா. அது ஏன்?

யசோதை.

இன்றைக்கு இன்னும் ஒரு சேஷ்டைகூட கணக்காக வில்லையாக்கும்.

கிருஷ்ணன்.

என்ன அம்மா, நீ கூட என் மேலே அப்படி எல்லாம் சொல்றே.

[அழுவதுபோல பாசாங்கு செய்கிறான்.]

யசோதை.

அழாதேடா, கண்ணே. (எடுத்தணைத்து) என்ன, உடம்பு கூட சுடுகிறாப்போலிருக்கிறது. வைத்திய னுக்கு சொல்லியனுப்பட்டுமா? தாதி!

கிருஷ்ணன்.

அம்மா, அம்மா! எனக்கு உடம்பு ஒன்றுமில்லையே! வைத்தியன் வேண்டாம் அம்மா உடம்பைத் திரும்ப வும் நன்று தொட்டுப்பார்.

யசோதை.

(தொட்டுப்பார்த்து)

இதென்ன மாயமிது? இப்போ ஜில்லென்றிருக் கிறதே. ஆனாலும் இத்தனை நோவானால், வைத்தியன் தான் வந்து மருந்து கொடுக்க வேண்டும் தாதி!

கிருஷ்ணன்.

மருந்து வேண்டாமம்மா அது ரொம்ப கசக்கும். அதுவுமல்லாமே அப்போ என்னமோ நொந்தா போலே இருந்தது. இப்போ எல்லாம் போய்த்தம்மா. நீ வேணுமானு தொட்டுப்பாரு.

யசோதை.

அடாடா என்ன விநோத வியாதி! மருந்து பேரைச் சொல்வதற்கு முன்னமேயே மாயமாய்ப் போகிற வியாதி.

கிருஷ்ணன்.

அம்மா, நான் மத்தியானம் ஒன்றுமே சாப்பிட வில்லையோ என்னமோ! அதனால தான் பசியினால் நோவாயிருக்கலாம்.

யசோதை.

*அப்படியா, ஏன மதயானம் ஒனறும சாபபிட வில்லை. நீ எங்கே போயிருநதாய் ?*

கிருஷ்ணன்.

*நான் தான எங்கேயும போகவில்லையே! இஙகேயே தான் இருககிறேன். நீ கூடப பாரத்தாயே!*

யசோதை

*ஆமாம், ஆனால நீயேன ஒனறும சாப்பிடவில்லை.*

கிருஷ்ணன்.

*அமமா, எனக்கு மனஸ ஒரு மாதிரியா இருநத தமமா.*

யசோதை.

*மனஸா! எனன ஸமாசாரம?*

கிருஷ்ணன்.

*அம்மா, எனனை ஊரிலே திருடன் எனறு சொல்ல ராளாம. நான் எங்கே திருடரேன, எனனு திருட ரேன அமமா? நான் எனபாட்டுககு தெய்வமென்னு இருநதா இபபடி யெலலாம சொல்ராளே!*

யசோதை.

*எனன! இல்லாமல் உன்மேலே சொல்லுவா னேன் அவாள்? நீயும ஏதானு எப்பவும் பண்ணிக் கொணடே யிருக்கயாம. இனறைக்குக் காலமே கூட சொன்னுளே.*

கிருஷ்ணன்.

ஒன்னுஞ் செய்யாமல் வெறுமே எப்படி யிருக்க முடியும் அம்மா ?

யசோதை.

ஆனால் சேஷ்டை பண்ணவேண்டுமா ? திருட வேண்டுமா ?

கிருஷ்ணன்.

நான் நிச்சயமாக சொல்லறேன் திருடுகிறதே இல்லையம்மா !

யசோதை.

நீ நேற்று நீளா வீட்டிலே உறியிலே வைத்திருந்த வெண்ணை யெல்லாம் சாப்பிட்டுவிட்டு ஓடிப் போய் விட்டாயாமே.

கிருஷ்ணன்.

அதுவா அது வேறே ஸமாசாரம் அம்மா. அது குள்ளன் வீடு தானே. அவனுக்கு அவா அம்மா கொஞ்சங்கூட வெண்ணெய் தருகிறதே யில்லையாம். என்னோடு சொன்னான். அழுதான் அம்மா ! என் மனஸு வெண்ணெயாட்டமா உருகிப்போச்சு. ஐயோ, வெண்ணெயாம் அகத்துணிவுண்டு இருந்தது. அதை யெடுத்து குள்ளனுக்கே கொடுத்து விட்டேன். அம்மா, நான் ஸத்தியமா சாப்பிடவே யில்லை.

யசோதை.

நீ அப்படிசெய்யலாமோ அவா வீட்டுக்குப்போய்.

கிருஷ்ணன்.

குள்ளன் என் கூட்டாளி. அவன் வீட்டு வெண்ணெயைத் தானே அவனுக்குக் கொடுத்தேன் ?

யசோதை.

என்னமோ, இப்படியெல்லாம் செய்து வீணுகப் பேரைக் கெடுத்துக கொள்ளுகிருய்.

கிருஷ்ணன்.

என்பேர் கெட்டுபபோகாதமமா அப்படி யெல் லாம. அபபடி வநதா ஏதாவது வேறே பேர வைசசூண் டுடடா போர்து.

யசோதை

சரி, தினம திருடி தினம வேறே பேர் வைததுக் கொணடால பகவான பேர ஆயிரமும போராதுனக்கு.

கிருஷ்ணன்.

'திருடன, திருடன,' என்று சொன்னு லெனககு கோபம வரும அமமா. நான திருடுகிறவனு அம்மா ?

யசோதை.

அதிருக்கட்டும. போன ஞாயிறறுககிழமை பக் கதது வீட்டில் திண்ணைமேல வைத்திருநத வெண் ணெயெலலாம நீ எடுத்து நீயும எல்லாப் பிளளைகளுமா சாப்பிட்டு விட வில்லையா ?

கிருஷ்ணன்.

அதுவா. அது—நான செய்ததுதான் ; ஆனு அது நம்ப வீடனனு ? நமம வீடுனு நினைசசேனமமா !

யசோதை.

ஐயோ பாவம், வெண்ணேன்னு நம்ம வீடு அசல் வீடுனு கூடத் தெரிகிறதில்லை.

கிருஷ்ணன்.

ஆமமமா, அது நிஜம. எலலா வீடும் நமம வீடடடமாததான இருக்குதம்மா.

யசோதை.

இனிமேல அப்படி யெலலாம செய்யககூடாது.

கிருஷ்ணன.

அப்படியே செய்யவே மாட்டேனமமா இனிமேல்.

யசோதை.

சரி, உனககு உடமபு சரியாயிலலே. நீ கொஞ் சம படுததுத தூஙகு.

கிருஷ்ணன்.

மத்தியானததிலா அமமா? எனககு பசிக் கிறதே!

யசோதை.

இதென்ன பசி, மாயப்பசி. வெணணெயப் பசியோ?

கிருஷ்ணன்.

நீ இபபடியெலலாம சுமமா வெணணெயை வை தால் எனக்கு அழுகைவாது அமமா: நான அழுவேன.

யசோதை.

அழாதேடா கணணே. நான உன வெண்ணெயை என்ன சொன்னேன்? ஒனறும சொலலவில்லேயே.

கிருஷ்ணன்.

அது என் வெண்ணெய் தான் அமமா, அநத வெண்ணெய் உங்களுக்கெல்லாம் என்ன தெரியும்.

யசோதை.

எங்களுக்கு எடுத்துவைக்கத் தெரியும்: உனக்கு சாப்பிடத் தெரியும்

கிருஷ்ணன்.

வெண்ணெய் சாப்பிட உனக்குத் தெரியுமா அம்மா? ஒத்தருக்கும் தெரியாது.

யசோதை

அதேனப்படி.

கிருஷ்ணன்

ஏன்? வெண்ணென்று 'இருக்குதே அது சாரத்திலே சாரம். அது எப்படி உள்ளுக்குள்ளேயிருந்து வரதோ, அப்படியே ரகஸியமா ஒத்தருக்கும் தெரியாமல் சாப்பிட்டு விடணும் அப்போதான் அதன் நிஜமான உள் ருசி தெரியும் அம்மா. இதைத்தான் 'திருட்டுத்தனம் திருட்டுத்தனம்' என்கிறார்கள்

யசோதை.

இதென்ன வெண்ணெய் திருடுகிற வேதாந்தமோ? நன்றாயிருக்குது. ஆனால் நீ அயலார் வெண்ணெயைக் கூட எடுத்து சாப்பிடலாமா என்ன?

கிருஷ்ணன்.

இதென்னம்மா இது? நீ தான் இப்போ தான் வெண்ணெய் என வெண்ணெயின்னேயே? அசலார் தானாலும் என்னிதுதானே?

(லக்ஷ்மி வருகிறாள்.)

லக்ஷ்மி

நல்ல வேளை. கிருஷ்ணனை இங்கேயே இருக்கான் கேட்டாயாம்மா யசோதை! உன் பிள்ளை செய்கிற சேஷ்டையெல்லாம்! கொஞ்சநேரம் முன்னே எங்க வீட்டுக்கு வந்து உறியிலேயிருந்த ஒரு பானை வெண்ணெயையும் எண்ணி வைத்தெடுத்து ஸ்வாஹா பண்ணிவிட்டான். இப்படிக்கூட செய்யலாமோ? உன் பிள்ளை யாசசே என்று பார்க்கறோம். இல்லாவிட்டால் தெரியும்!

யசோதை.

என்னடா கிருஷ்ணா, அது நிஜந்தானா?

கிருஷ்ணன்

அதுவா? அது பாதி நிஜம் அம்மா. மற்றப் பாதியைக் கேளுங்கோ. இன்னிக்கு காலமே அப்படி தெருவிலே போய்க்கொண்டிருந்தேனா, அப்போ, இந்தம்மா, பேரென்ன? லக்ஷ்மியா? என்னை யெடுத்துக் கட்டி முத்தங் கொடுத்து உள்ளே யழைத்துக்கொண்டு போய் 'உனக்கு ரொம்ப வெண்ணெய் தாரேன், கொஞ்சம் கூத்தாடு' இன்னுங்கோ. நான் கூத்தாடினேனா,— இன்னங்கூட கால் நோகிறதம்மா,— அப்புறம் வெண்ணெய் கேட்டா இக்குணூண்டு கொடுத்தாங்கோ, அம்மா. ஒரு சுண்டைக்கா கூட இல்லே.

யசோதை.

அதற்காக நீ பானையிலிருந்த வெண்ணெயெல்லாம் சாப்பிட்டுவிட்டாயோ?

கிருஷ்ணன்.

பின்னே என்னம்மா? நியாயமா சொல்லுங்களேன்! என்னை அப்படி ஏமாத்தலாமா? கேளுங்கோ நீங்களே.

யசோதை.

என்ன லக்ஷ்மீ, கிருஷ்ணனை நீ கூத்தாடச் சொன்னாயோ, வெண்ணெய் கொடுக்கிறேன் என்று சொல்லி?

லக்ஷ்மி.

அது வாஸ்தவந்தான். ரொம்ப வெண்ணெய் சாப்பிட்டால் அது வயிறுக்கு ஆகாமல் போகப் போகிறதே யென்று ஒரு விளாங்காயளவு கொடுத்தேன்.

கிருஷ்ணன்.

இந்த ஊர் விளாங்காயன்னு அம்மா அந்த அம்மா சொல்லலாது. சின்ன தேசத்ததாயிருக்கும். நம்மூரா சுண்டைக்காயைவிடச் சின்னது.

யசோதை.

உன்னை யார் இப்படி வீடு வீடாயக் கூத்தாடிக் கொண்டு வெண்ணெய்ப் பிச்சை எடுக்கப் போகச் சொன்னது?

கிருஷ்ணன்.

நானா பிச்சைக்குப் போனேன? இவங்கதான் கூப்பிட்டாங்கோ அம்மா.

யசோதை.

கூப்பிட்டால் உன்னை திருடச் சொன்னார்களா என்ன?

கிருஷ்ணன்.

அது திருடன்னு, அம்மா. அதிலே ஒரு நியாயம இருக்குது.

யசோதை.

அதென்ன நியாயமது ?

கிருஷ்ணன்

அது ஒரு அநதிரவாளி நியாயம. உஙகளுககெல்லாம தெரியாது அமமா.

யசோதை.

இநதக கல்வியெலலாம இருக்கடடும. திருடு திருடுதானே ?

கிருஷ்ணன்.

எல்லாத் திருடும திருடோ? யாரமமா திருடினது? எனக்குக கொடுககரேன்னு சொன்ன வெணணெயைக் கொடுககாமல போனல்?

லக்ஷ்மி.

நாறு வெண்ணெய் தாமாட்டேனென்று சொன னேன? என் பட்டு கிருஷ்ணனுக்கு வயிற் றுக்காகாதே என்று யோசித்தேன.

கிருஷ்ணன்.

யோசித்தையோ ? அப்படியெலலாம யோசிக காதே இனிமேல். என் வயிறு சமாசாரம் உனக் கென்ன தெரியும ? வெளியிலே பாாத்தால் சின்ன வயிருயிருக்குதேனு பார்த்தையாக்கும். அது உளளே எவ்வளவு பெரிசு தெரியுமா? வெண்ணெயை,

பானையை, உனனே, உங்க வீடடை, இநத கோகுலம், லோக மெலலாம சாப்பிட்டு விட்டு ஏப்பம விட்டு விடுவேனே ! ஐயோ, வேடிக்கையே!

லக்ஷ்மி

கண்ணே கண்ணு! அப்படியாஞ நீ நாளேயே முதல் தினம வா, நிரமப வெண்ணே தருகிறேன.

யசோதை.

நீ வெண்ணெய் கொடுககவும வேண்டாம, என குழநதை மேலே பழி போடவும வேணடாம.

கிருஷ்ணன்.

ஊம! பததிரம். நீ இபபோ ஓடிப்போ. நான அப்புறம வாரேன.

[லக்ஷ்மி போகிறள ]

யசோதை.

கிருஷ்ணு, உனககு மானம் அவமானம ஒனறு-மிலலேயா ?

கிருஷ்ணன்.

அதெல்லாம் என்னமோ, யாருச்கு வேணுமமமா?

யசோதை.

எல்லாரும உன்னே இபபடியெலலாம் தூஷிக்கிறர்கள். அப்படியிருநதும நீ அவாகள பின்னேயே போகிறேன் எனகிறய்.

கிருஷ்ணன்.

அவாளுக்கு ஒன்னும் தெரியாதம்மா : பாவம !

[நளினி வருகிறள்.]

நளினி.

யசோதா தேவி—ஆ—இதென்ன இது—ஆஸ்சரி யம—இதோ இருக்கிறானே கிருஷ்ணன !

கிருஷ்ணன்.

நான் இங்கே இராதே எங்கே போகணும ?

நளினி

அடே மாயக்காரா ! உன்னை இப்போதுதானே எங்கள் வீட்டில உள்ளே வைததுப பூட்டுப பூட்டி விட்டு வந்தேன, இதற்குள் இங்கே எப்படி வந்து விட்டாய் ?

கிருஷ்ணன்.

அம்மா— அம்மா— கேட்டையா கதையை ? இன்றைக்கெல்லாம இந்த இடத்தை விட்டு அசைந் தேனு ?

யசோதை.

என்ன கதை யிது ? நீயா கிருஷ்ணனைப் பூட்டி வைததாய் ? இன்றைக்கா ?

நளினி.

இப்போதான !

யசோதை.

எதற்காக ?

நளினி.

அந்தக் கதையைக் கேளம்மா ! நான இரண்டு நாளைக்கு முன்னே வெண்ணெயைத் திரட்டிப பானைக குள வைத்துக்கொண்டேயிருந்தேன. கிருஷ்ணன அப்போ என் பிள்ளை தாமோதரனை யழைத்துக்

கொண்டுவந்து, 'நீ ஏன் இவனுக்கு வெண்ணெயே கொடுக்கிறதில்லையாமே' என்று கேட்டான். அதற்கு நான 'என் பிள்ளைக்குக் கொடுத்தால் கொடுக்கிறேன, கொடுக்காவிட்டால் என்னிஷ்டம, நீ என்ன கேட்கிறது' என்றேன். இதற்கு இநத கிருஷ்ணன் ஒரு சிரிப்பு சிரித்தான் பார்! சிரித்துவிட்டு, 'நானு கேட்கக்கூடாது' பின யார் கேட்கிறது?' எனறு ஒரு மிரட்டு மிரட்டி-ஞன. அது குழநதை மிரட்டாயில்லை. எனக்கே பயமாய்ப போய்விட்டது. அப்படி மிரட்டிவிட்டு, சர்ரென்று தாமோதரனையும அழைத்துககொண்டு போய்விட்டான. சரி, ஏதோ பெரியதாய் சேஷ்டை நடககுமென்று வெண்ணெய்ப் பானையைத் தெரியாமல் ஒளிததுவிட்டு, வெறும் பானையை உறியில் வைத்து—

கிருஷ்ணன்.

நான் அப்போ அஙகே இருநதேனு பார்த்தையா சொல்லு.

நளினி.

யாராலே என்ன சொல்லமுடியும? நீ எப்பவும் எங்கேயும் ஒளிதது்க்கொண்டு தானிருக்கிறுய் போ-லிருக்கிறது.

யசோதை.

நல்லது நீ கதையை முடி.

கிருஷ்ணன்.

முடிவேதம்மா அநதக் கதைக்கு ?

நளினி.

உன் சேஷ்டைக்கு முடிவேது ?

கிருஷ்ணன்.

எல்லாம் மாயக் கதையம்மா !

நளினி

உன் மாயந்தானே ?

யசோதை.

அப்புறம் ?

நளினி.

நான் என்ன சொன்னேன் ? மறந்துபோய்விட்டதே.

கிருஷ்ணன்.

இஷ்டப்படி சொல்லுகிறதுதானே. மறதி என்றொரு மாயமா ?

நளினி

ஆனால் நான் சொல்லுகிறதெல்லாம் பொய். நீதான் மெய்.

கிருஷ்ணன்.

நான் பொய்யோ, நீதான் பொய்யோ, பகவானைக் கேட்டால் தெரியும்.

நளினி.

நீதான் சத்தியமூர்த்தி ஆயிற்றே ! கிருஷ்ண மூர்த்தி ! நீதான் சொல்லேன், நான் சொன்னதில் ஒரு எள்ளளவு பொய்யுண்டா என்று ?

கிருஷ்ணன்.

எள்ளளவு பொய் எங்கேயிருந்து வரும், அகண்டமும் பொய்யானால் ?

யசோதை

கிருஷ்ணு, வாயை மூடு. வரவர வாயும் கையும் வளாநது விட்டது.

கிருஷ்ணன்.

ஆமமமா, நீ சொல்லுகிறதுதான் நிஜம. உறி வெண்ணெயைத் திருடித திருடிக கை வளர்நது போயிற்று அநத வெண்ணெயை வாயாலே சாப்பிட்டு வாய் வளர்ந்து போயிறறு !

நளினி.

கேடடையாமமா. தானே ஒப்புககொளளு-கிறுன், கிருஷ்ணன, தான் திருடனெனறு.

யசோதை.

கிருஷ்ணு ! இநத அமமா வீட்டில போய் எனன செய்தாய் ? நிஜமாய்ச சொலலு ! நான கோபிததுக் கொள்ளவிலலே.

கிருஷ்ணன்.

நியாயம் நீயே சொல்லம்மா ! அவர்களை பிளளை தாமோதரனுக்கு அக்குணிவுணடு வெணணெய் கூட கொடுககிறதே யில்லையாமம்மா. அதறகு நான் கேடட தறகு, நீ யார கேடகிறது இன்னுங்கோ. அது சரியா அமமா ? நான கேட்காமல் யார்தான கேடகிறது ? நேற்று எனககெபபடியோ அநத அமமா பண்ணை திருட்டுததனம எல்லாம தெரிநதே போசசு. வெண்ணெயிருக்கிற இடத்தை அபபடியே கண்டு பிடித்து அதை யெல்லாம் தாமோதரனுககே கொடுத்துவிட்டு

நான துளிகூட சாபபிடவில்லை யமமா. அப்புறம கேளுஙகோ வேடிக்கையை! ஜாக்கிரதையாய் மூடி வைததாககளே அநத வெறும பானை யெல்லாம எடுத்துககொண்டுபோய மலைமேலிருநது உருட்டி விட்டோம. அட்டா அதெல்லாம உருண்ட வேகத்தை-யும, பொடிப பொடியாய உடைநத ஓசையையும கேட்டா—

நளினி.

நீஙகளே கேளுங்கோமமா. வீட்டிலே ஒரு பழமபானை யில்லை.

கிருஷ்ணன்.

அது பொய் அமமா. ஒரு பானை யிருக்கிறது, வெணணெ யிருநத பானை! வெணணெ யிருககிறப போல வெறும பானை யிருநததே அதை யெலலாந தான உருட்டி உடைததேனமமா. உடைக்கா-திருககலாமா அப்போககொதத திருட்டுப பானையை?

யசோதை.

என்ன செய்யலாம, இநத துஷ்ட கிஷ்டனை. வீடு வீடாய் ஓடி இபபடி சேஷ்டை பணணு? இஙகே வா இப்படி.

கிருஷ்ணன்

(பயநதவன்போல அழத தொடஙகுகிறன)

நளினி.

(பரபரப்புடனே)

இஙகே வா என கண்ணே, நீ அழாதே. உனக்கு எவ்வளவு வெணணெய் வேணடுமானாலும தருகிறேன.

கிருஷ்ணன்.

(புன்னகையுடன்)

இனிமேல் என் மேலே பழி சொல்ல மாட்டாயே?

நளினி.

மாட்டேன். அதிருக்கட்டும். உன்னை உள்ளே விட்டுவிட்டு பூட்டினேனே இப்பொழுதுதான—

கிருஷ்ணன்

அது ஒரு ரகசியம். நீ இப்போ ஓடிப்போ, போ.

நளினி.

நாளைக்கு வருகிறாயா?

கிருஷ்ணன்.

நான வராமல் போவேனா?

[நளினி போகிறாள் சிரித்துக்கொண்டே.]

யசோதை.

எல்லாம் நீங்கள் கொடுக்கும் இடந்தான் கிருஷ்ணனுக்கு.

கிருஷ்ணன்.

ஆமாம்மா, எனக்கு இடமே கொடுக்க வேண்டா-மென்று சொல்லிவிடேன பார்ப்போம்.

ரோகிணி.

(ப்ரவேசித்து)

ஏன் கிருஷ்ணா அழுதாற்போல்—(சிரிப்பதைக் கண்டு) என்ன மாய அழுகையோ, மாயச் சிரிப்போ!

கிருஷ்ணன்

நான் செய்கிறதெல்லாம் மாயமோ? மாயமாம் மாயம! இவங்க கண்டாங்க. நீங்கள் எல்லாந்தான மாயம், போ.

ரோகிணி.

ஆமாம் கிருஷ்ணு, நான் மறந்துவிட்டேன். நீதான் சத்தியமூர்த்தி. நாங்கௌெல்லாம பொய்தான. வா, நாம போகலாம.

கிருஷ்ணன்

ஊம பதறிம! (ரோகிணி சிரிததுககொணடே எடுககப போகிருள்.) இன்னும எங்கே போகவேண்டும்?

ரோகிணி.

உளளே போகலாம் வா.

கிருஷ்ணன்

நான் இப்பொழுதுதானே உள்ளே யிருந்து வந்தேன. இனனும எனககு ரொமப வேலையிருக் கிறது.

யசோதை.

ஆமாம், என்னென்ன வேலை? எங்கெங்கே வேலை? எவ்வளவு வேலை? இவனைப பிடிசசு எங்கே-யாவது கட்டிபபோட்டு வைத்தால் நலலது.

கிருஷ்ணன்.

என்னையா கட்டப்போரே? எதோ, என்னைப் பிடி பார்ப்போம்.

யசோதை.

தாதீ, கிருஷ்ணனைப பிடிதது இப்படிக்கொண்டு வா.

தாதி.

என் கையிலகப்படுவாரு அமமா, கிருஷ்ணன ?

யசோதை.

சொன்னதைச செய் !

தாதி.

அப்படியே அமமா

[கிருஷணனைப பிடிககப பிரயததனப படுகிருள. கிருஷணன் அகபபடா மலே தபபிததுககொணடு ஆட்டம காட்டுகிருன.]

தாதி

ஐயோ ! கிருஷ்ணனைப பிடிக்க என்னுலியல வில்லை யமமா. மனமபோல ஓடுகிருன். மாயம போல் மறைகிருன் நான எபபடிப பிடிபபது ?

கிருஷ்ணன்

என்னை ஓடிப பிடிகக முடியுமா யாராலாஞலும ?

யசோதை.

நான் பிடிக்கிறேன பார !

கிருஷ்ணன்.

பாரமமா—பார.

[யசோதை ஓடிப பிடிகக இயலாது நின்றுவிடுகிருள.]

யசோதை.

(திடீரென்று கால் சறுக்கினது போல் பாசாங்கு செய்து கீழே விழுந்து)

அப்பப்பா! ஆ!

கிருஷ்ணன்

(ஓடிவந்து யசோதையின் காலைப் பிடித்து)

அம்மம்மா, பட்டதா என்ன, நோகிறதா?

யசோதை.

உன்னால் என் கால் போய்விட்டது நான் நொண்டியாய்ப் போய்விட்டேன்

கிருஷ்ணன்

அதான் நான் உன்னிடம் வந்துவிட்டேன்.

யசோதை

(சடேரென்று கிருஷ்ணனைப் பிடித்துக்கொண்டு)

இப்போ, அகப்பட்டுக் கொண்டாயா? இப்போ என்ன செய்வாய்?

கிருஷ்ணன்

(திமிறித் தப்பித்துக்கொண்டு)

இப்போ நீ என்ன செய்வாய்?

யசோதை.

கிருஷ்ணா, என் கண்ணே, என்னை இப்படி அலையவைக்கலாமா?

கிருஷ்ணன்.

என்னை இப்படித் தூரத்தி ஓடவைக்கலாமா?

யசோதை.

நீ இப்படி வா கிருஷ்ணா.

கிருஷ்ணன்.

கூப்பிட்டால் வருகிறேன். துரத்தினால் ஓடு-கிறேன்.

யசோதை

ஆனால் இப்படி எனகிட்ட வா.

கிருஷ்ணன்.

நீ கண்ணை மூடிககொண்டு வாவென்று கூப்பிடு நான் வருகிறேன்.

யசோதை.

(கணணைக கையால மூடிககொளவது போல நடிதது)

கிருஷ்ணன வநதுவிட்டானா?

கிருஷ்ணன்.

(அசைநதாடிககொணடு)

இதோ கிட்டக் கிட்ட வநது விட்டான.

யசோதை.

(திடீரெனறு கணணை மூடியிருநத கைகளை எடுததுவிட்டு கிருஷ்ணனை பலமாயப பிடிததுககொளள முயல-கிறாள. கிருஷ்ணன் அகப்பட்டது-போல் அகப்பட்டு, அகப்படாமல தூரம் ஓடி நிற்க)

அட்டா, நான் திரும்பவும் ஏமாநதேனே!

கிருஷ்ணன்.

கண்ணைத் திறந்துவிட்டால் கிருஷ்ணன் ஓடிப் போய்விட்டான். என்னை ஏமாத்தப் பார்த்தையா?

யசோதை.

என்னாலே உன்னை ஏமாத்த முடியுமா, கிருஷ்ணா!

கிருஷ்ணன்.

அது எப்படி முடியும்?

யசோதை.

ஆனால் நீயே இங்கே வாயேன்.

கிருஷ்ணன்.

நானாகவே வரட்டுமா? நீ என்னை பிடிச்சுக் கொள்ள மாட்டயே?

யசோதை

(பாடிக்கொண்டு)

வாடா கிருஷ்ணா வாடா

ஓடி ஓடி அலைத்திடாமல் வாடா கிருஷ்ணா வாடா
ஆடி ஆடி ஒய்யாரமாய் வாடா கிருஷ்ணா வாடா
பாடிப்பாடி பாடமொழிக்க வாடா கிருஷ்ணா வாடா
நாடி நாடி என்னை நாடி வாடா கிருஷ்ணா வாடா.

கிருஷ்ணன்

வருவேன் அம்மா வந்திடுவேன்
இஷ்டமுடன் கிஷ்டனைத்தான் கூப்பிடவும்
வருவேன் அம்மா வந்திடுவேன்!
எங்கிருப்பினும் எது செய்யினும் நான்

*இஷ்டமுடன கிஷ்டனைததான கூபபிடவும்*
*வருவேன அமமா வநதிடுவேன*
*எவராயினுமம எதறகாயினுமே*
*இஷ்டமுடன கிஷ்டனைததான கூபபிடவும*
*வருவேன் அமமா வநதிடுவேன*
*வேணடுமபோதுவேணடுமிடதது வேணடிடாதே*
*இஷ்டமுடன கிஷ்டனைத்தான கூப்பிடவும்*
*வருவேன அமமா வநதிடுவேன்.*

யசோதை.

*என்ன கிருஷ்ணு இது என்ன இது? நீ கிட்ட வாராப்போலிருககுது. ஆனாலும அப்படியே தூரத்தி லேயே இருககிருயே.*

கிருஷ்ணன்.

*அது ஒரு ரகசியம.*

யசோதை.

*உன திருட்டுத்தனமெலலாம ரகசியநதான. ரகசிய-மில்லாதது எது — என கிட்ட வாடா கிருஷ்ணு!*

கிருஷ்ணன்.

(*ஓடிவநது யசோதையைக கட்டிககொணடு*)

*பாரதமையா, நான ஓடிவநது உனனை கட்டிக கொண்டுவிட்டேன.*

யசோதை.

(*முததமிட்டு*)

*நான் உன்னைக் கட்டிக்கொண்டு விட்டேனே.*

கிருஷ்ணன்.

நீ என்னைக் கட்டிக்கொண்டு விட்டாய்: நான் உன்னைக் கட்டிக்கொண்டு விட்டேன்.

யசோதை.

அதென்ன ஆஸ்சரியம்?

கிருஷ்ணன்

கட்டப்போனவளை கட்டிவிட்டால்?

யசோதை

ஓ—அப்படியா—அதிலென்ன விசேஷம்?

கிருஷ்ணன்

அதுவா? அது ஒன்னு இரண்டு விசேஷம்!

யசோதை.

அது என்ன புது விசேஷமா என்ன?

கிருஷ்ணன்

பழையதுதான! புதியதுதான!

யசோதை.

உன் புதிரெல்லாமிருக்கட்டும். நீ என் இன்றைக்கு எனக்கு ஒன்னு இரண்டு முத்தம் தரவில்லை?

கிருஷ்ணன்.

நீயும் நானும் ஒன்றாய்ப் போய்விட்டோமே.

யசோதை

ஒன்றாகப் போய்விட்டால்?

கிருஷ்ணன்.

ஆசை ஆகிப்போய் விட்டது.

யசோதை.

ஆனல் ஒன்ருய்ப்போய்விட்டால ஆசை போய் விடுமா என்ன ?

கிருஷ்ணன்.

ஐயோ. உனக்குத தெரியவேயில்லையமமா! பழைய ஆசை போய் புது ஆசை வரும்.

யசோதை.

அதென்ன புது ஆசை ?—ஆசையிலே கூட புதியது பழையது என்று உண்டா என்ன ?

கிருஷ்ணன்.

ஐயோ அம்மா, ஏன இல்லை? நேற்று ஒரு ஆசை, நாளைக்கு ஒரு ஆசை, தினம் தினம் ஒரு புது ஆசை!

யசோதை.

ஓ! அப்படியா? ஆனல இன்றைககு என் மேலே ஆசை யில்லை ?

கிருஷ்ணன்.

நீதான் என் மேலே கோவித்துக்கொண்டாயே! துஷ்ட கிஷ்டன என்ருயே!

யசோதை.

ஆமாம, துஷ்டத்தனம செய்தால் துஷ்டன்-தானே?

கிருஷ்ணன்.

கிருஷ்ணத்தனம் செய்தால் கிருஷ்ணன் துஷ்டனே?

யசோதை.

எனக்கு என் கிருஷ்ணன துஷ்டத்தனம் செய்கிறது இஷ்டமில்லே.

கிருஷ்ணன்.

ஆனால் நீ செய்யவேண்டாம அம்மா.

யசோதை.

எனக்கா சொன்னேன ?

கிருஷ்ணன்.

ஆறு எனக்கா நீ சொன்னுய் ?

யசோதை.

ஆமாம்.

கிருஷ்ணன.

இனிமேல் நீ சொலல வேணடாமமமா. எனககே தெரியுமே எல்லாம்.

யசோதை.

எல்லாந தெரிநதுதான் இப்படி யெல்லாம செய்கிருயோ ?

கிருஷ்ணன்.

பின்னே, என்னனு நினைத்தாய் ?--ஐயோ ! அமமா !

பத்மா.

(ப்ரவேசிதது)

ஐயோ அம்மா யசோதை ! (திடீரென்று கிருஷணனைப் பார்த்து) இவனெப்படி வநதான் இங்கே ? இப்பொழுதுதானே இவனை எங்க வீட்டுக் கம்பத்தில் கட்டி வைத்து வந்தேன் !

கிருஷ்ணன்.

(நகைத்து)

என்னையா? நீயா?

பத்மா.

ஆமாம். நான் தான். உன்னைத்தான். அடே மாயக்காரா!

கிருஷ்ணன்.

அடீ மாயக்காரீ!

பத்மா.

நீ எப்படி வந்தாய் கிருஷ்ணா இங்கே?

கிருஷ்ணன்.

நீ எப்படி வந்தாய்?

பத்மா.

உன்னைக் கம்பத்தில் நன்றாய்க் கட்டிவிட்டு—

கிருஷ்ணன்.

ஊம. அப்புறம். கிருஷ்ணனைக் கயிற்றாலே கம்பத்தில் இந்த பத்மா அம்மா கட்டி விட்டாளாம. என்ன கயிறு, எந்த கம்பம! பொய்யை மெய்யாட்டமா சாதிக்கிறயே! என்னைக் கட்ட, எப்படித்தான், யாராலேதான் முடியும்?

பத்மா.

நீ தான் சொல்லேன்!

கிருஷ்ணன்.

அது பெரிய ரகஸ்யமன்னா? அப்படியெல்லாம் சொல்லிவிடுவேனா?

பத்மா.

அதிருக்கட்டும்.

கிருஷ்ணன்.

எது இருக்கட்டும?

பத்மா.

எட்டா போட்டியாய்ப் பேசுகிறனே கிருஷ்ணன்.

கிருஷ்ணன்.

உங்களோடு அப்படி யெலலாம பேசாவிட்டால் நான் அகப்பட்டுக் கொண்டுவிடமாட்டேனு?

பத்மா.

ஆமாம், நல்லது, உன்னை எப்படிக் கட்டினுல் தபபித்துக்கொள்ள மாட்டாய், சொலலு, கிருஷ்ணு!

கிருஷ்ணன்.

அதுவா? அது சொலலட்டுமா? அது நடாத கம் பததை ஆடாதே நிறுததி, தொடாதே பிடிதது, அறவாத நூலாலே விடாதே கட்டினுல், ஓடாதே நிறபேன!

பத்மா.

அடாடாடா! இதென்ன புதிர் இது?

யசோதை.

இந்தக் கல்வியெல்லாம் இருக்கட்டும. நீ ஏன் கிருஷ்ணனைக் கம்பததில் கட்டப் பார்த்தாய்? என்ன செய்தான்?

பத்மா.

அவன் செய்யாத சேஷ்டை எது? கேளம்மா யசோதை. இன்றைக்கு மத்தியானம் எங்க வீட்டுப் புழக்கடையில் வந்து மாடு கன்று எல்லாவற்றையும் அவிழ்த்து விட்டுவிட்டு, பால் துளிகூட இல்லாமல், கன்றெல்லாம் மடிப் பாலெல்லாம் குடித்துவிடச் செய்து எல்லாவற்றையும் காட்டுக்கு ஓட்டிவிட்டான். ராத்திரி துளி பால்கூட இல்லையம்மா!

யசோதை.

என்னடா கிருஷ்ணு, அப்படிச் செய்தாயா? அது நிஜமா?

கிருஷ்ணன்.

நிஜம் பொய் யாருக்குத் தெரியும் அம்மா? ஒரு நியாயம் நீங்களே சொல்லுங்களம்மா. ஒரு பசு கன்று போட்டால் சுறக்கிற பால் கன்றுக்குட்டிக்குத்தானே?

யசோதை.

அப்படியே யிருக்கட்டும். அதனாலே என்ன?

கிருஷ்ணன்.

கன்னுக்குட்டி ஊட்டுகிற பாலை அதுக்குத் துளி கூட யில்லாமல் இந்தம்மா திருடிவிடுகிறாளம்மா.

யசோதை.

அது உனக்கென்ன?

கிருஷ்ணன்.

எனக்கென்னுன்னு? எனக்குத்தான் போ! நான் அப்படி போகச்சே அந்த கன்னுக்குட்டி, பாவம்,

தெய்வமேனு என்னை அப்படியே பார்த்தது அம்மா! என மனசு எப்படியாயிற்று தெரியுமா? 'இபபடிக்கூட செய்யலாமா'? என்று நான இநத அமமாவைக கேட்டால் அதற்கு இநத அமமா சொலகிருள்,—'பேரைப் பாா, பேர் பதமாவாம — எஙகள் கனனுககுட்டிக்கு நாஙகள பால விட்டால விடுகிரும, விடாமல போனுல் போகிரும. நீ என்ன கேடகிறது'' என்ருள். இநதமமா பதது மாஸம சுமநது அநதக் கனனுக குட்டியைப பெறருளாம பெறரு——

யசோதை.

அதிலும் ஒரு நியாயம இருககிறுபபோலிருக் கிறதே?

பத்மா.

நல்ல நியாயந்தான. இவாதான நியாய மூாததி கிருஷ்ணமூாத்தி.

கிருஷ்ணன்

நீ சொன்னதிலெல்லாம இது ஒனறுதான நிஜம்.

பத்மா.

நிஜம ஒனறு, நியாயம ஒன்று, உனக்கு! நீ என்ன செய்வாய்? காலம கெட்டுப்போயிறறு

கிருஷ்ணன்.

ஆமாம, ஆமாம், காலம கெடடாவிட்டால இப்படி யெல்லாம வருமா?

பத்மா.

கேட்பாரில்லாவிட்டால இப்படியும வரும், எப்படியும வரும.

கிருஷ்ணன்.

ஆமாம். என்னிஷ்டமதான போ—

பத்மா

கேட்டாயா அமமா, பார்த்தாயா அம்மா, உன் பிள்ளையின் அகம்பாவததை?

யசோதை.

கிருஷ்ணு, இங்கே வா, இப்படி வா.

கிருஷ்ணன்.

இதோதான வநதிருக்கிறேனே அமமா! சொலலேன்.

யசோதை.

என்னதைச் சொலகிறது. செயகிறதெல்லாம சேஷ்டை, சொல்லுகிறதெலலாம சடடக் கலவி. இப்படி யெலலாம் அவாகள மாடு கன்னுகளையும அவிழ்த்து விடலாமா நீ?

கிருஷ்ணன்.

கோவித்துக்கொள்ளாதே. அமமா, கட்டிவைக்கிறதை அவிழ்தது விடுகிறதுதானே நலலது, அம்மா?

யசோதை.

நல்லது பொல்லாது எல்லாம அறிநதவன்!

கிருஷ்ணன்.

அப்படியா அமமா. ஆனல் நீ பொய் சொல்ல மாட்டாய் அன்னு?

யசோதை

பொய் சொல்லமாட்டேன், உன்னைத் தண்டிப் பேன, கண்டிப்பேன்.

கிருஷ்ணன்

என்ன, என்ன? யார, யாரை, எனனத்துககு, எபபோ, எப்படி, தண்டிககிறது?

யசோதை.

நான் தான், உன்னைத்தான, தப்புக்குத்தான், தண்டிககிறது. (என்று சொலலிககொணடே கிருஷ்ண-னைப பிடிகக முயலகிருள. கிருஷ்ணன ஓடியோடித் தபபித்துக கொள்ளுகிருன.)

பத்மா.

குழந்தையை வீணுக அலையவைக்காதே. பார, அவனுககு வேர்ககிறது. விட்டுவிடு

கிருஷ்ணன்.

பிடித்த பிற்பாடல்லவா விடலாம?

யசோதை.

அப்படியா? இதோபார. உன்னைப பிடித்துக் கட்டிப்போட்டு விடுகிறேன்.

கிருஷ்ணன்.

ஓடி ஓடித் துரத்தித் துரத்தி பிடிக்கமுடியுமோ, எவராலும பிடிக்க முடியுமோ?

யசோதை.

(திருமபவும பிரயததினப்பட்டு முடியாமல)

பதமா, நீதான கிருஷணனைபபிடி. எனக்கு உடமபு பெருத்துப்போய்விட்டது. ஓட மூசசு வாங்குகிறது.

பத்மா.

உனனால் முடியாதது என்னால் முடியுமா?

யசோதை.

நீதான அவனைப் பிடித்துக கம்பததில் கட்டினேன என்றுயே?

பத்மா.

அகபபடுகிறதுபோல தப்பித்துக் கொள்ளும் மாதிரியாய், தப்பித்துக் கொள்வதுபோல அகப்பட்டுக கொணடான கிருஷ்ணன, தானே. இலலாவிட்டால அவனைப் பிடிக்க மனோவேகமாய் ஓடினாலும முடியாது.

யசோதை.

(கோபததுடன்)

தாதி—

தாதி.

ஏனமமா?

யசோதை.

இநதக் கிருஷ்ணனைப் பிடித்துக்கொண்டு வா இங்கே?

தாதி.

என்னால் முடியுமா தேவி? ஹனுமந்தனால் முடியாதது என்னாலோ முடியப்போகிறது? நீங்கள்தான் பார்த்தீர்களே அன்றையதினம.

யசோதை.

நான் என்ன செய்வேன. (யோசித்து) கிருஷ்ணு, நீ இப்படியும செய்யலாமா! நான் வாடி வேர்த்து வதங்கிபபோனேனே, நீ அகபபடாமல் அலையவைககலாமோ?

கிருஷ்ணன்.

'நீ அகப்பட்டுககோ கிருஷ்ணு' எனறால அகப் படடுக் கொளளுகிறேன. நீ அபபடிச சொனனுயா?

யசோதை.

நீயே வநது அகப்பட்டுக்கொள்ளுகிறுயா? எதோ, பாாககலாம!

கிருஷ்ணன்.

இதோ—(எனறு சொலலி யசோதை கைகளில போய விழுகிறுன்.)

யசோதை.

(கிருஷ்ணனைக கெட்டியாயப பிடிததுககொணடு)

இனிமேல் இநத துஷ்டக கிஷ்டனை வெளியில் விடக்கூடாது. எஙகேயாவது கட்டிப்போடடு வைக்கவேண்டும்.

கிருஷ்ணன்.

கட்டவா போகிறுய்! கடடமமா. கட்டு.

யசோதை.

(கிருஷ்ணனைப் பிடிததுககொணடே இஙகும அஙகும் கயிறு பாாததெடுககிறுள்.)

எங்கே கட்டி வைககலாம கிருஷ்ணனை?

கிருஷ்ணன்.

ஆடாத அசையாத இடமாகப்பாரம்மா, எங்கே யானு—

யசோதை.

ஏன்? எதில் கட்டினுலும் இழுத்துப்போட்டு விடலாமென்று பார்க்கிறயோ?

கிருஷ்ணன்.

எல்லாத்தையும் என்னத்துக்காக இழுக்கிற-தம்மா? என்னுலேயே முடியாதே!

யசோதை.

நீ மனசு வைத்தால் ஆகாத சேஷ்டையு முண்டோ?

கிருஷ்ணன்.

ஆகாத சேஷ்டையிலே என மனசு போகாது அம்மா.

யசோதை.

அப்படியா? ஆனல், உன மனசு போனுலும் நீ போகாதிருக்க உன்னை யெங்காவது பத்திரமாய்க் கட்டிவைத்தால் தான க்ஷேமம. நீ இப்படி வா.

கிருஷ்ணன்.

யாருக்கு க்ஷேமம?

யசோதை

உன்னுலேயே லோகத்திற்கெல்லாம்.

கிருஷ்ணன்.

அப்படியா? ஆனால உனனிஷ்டப்படி எங்கே வேணடுமானாலும கடடமமா. அதோ அநத கமபத திலே கட்டிவிடம்மா.

பத்மா.

ஐயோ, யசோதா! கமபததிலே கட்டாதே! அதில ஏதோ திருடடுததனம இருககாபபோலிருக கிறது. இலலாவிடடால கிருஷணனாவது தானே 'அஙகே கடடு' எனறு சொலவானா? நான கமபத் திலே கட்டி எனனவாயிறறு? ஒருவேளை யமமா கம பத்தையே இழுத்து விடடால, வீடு தலைமேலே விழுநது விடுமே!

கிருஷ்ணன்.

அமமா, இநதமமா ரொமப கெட்டிககாரி எனனை அநத அமமாளுக்கு கடடிவிடுஙகள, நான அநத அம மாவோடேயே இருபபேன. அநதமமாவும எனனை விடடுப போக மாட்டாரகள.

பத்மா.

போரும். போரும! இருககிற கால் கட்டு எனக குப் போதாதென்று?

கிருஷ்ணன்.

நான் கைகட்டு சொன்னால நீ கால்கட்டு என் கிறாயே.

பத்மா.

அப்படியா—ஆனால்—

யசோதை.

இந்த வம்பளப்பெல்லாம் என்ன? கிருஷ்ணனை எங்கே கட்டலாம் சொல்?

பத்மா.

வேண்டாம யசோதை, எதற்கு வீணுகக் குழந்தையை—

யசோதை.

போதும உனனுடைய சிபாரசு. நான் அவனை இன்றைய தினம எஙகேயாவது கட்டிவைக்கத்தான போகிறேன.

கிருஷ்ணன்.

எஙகேயாவது தானே அமமா. ஆனால் நம்மு டைய புழைக்கடையில் அநத ரெட்டை மரம் இருக் கிறதே அதிலே கடடிவை. பக்கததில் களாச்செடி யிருக்கிறதே, அதன பழததையாவது சாப்பிட்டுக் கொணடிருக்கிறேன.

யசோதை

அது கூடாது. அந்த மரங்களில் ஏதோ தெய்வ மிருக்கிறதெனகிறார்கள்.

கிருஷ்ணன்.

அப்பபடியா அமமா. ஆனால் அதிலேயே கட்டி விடம்மா! அந்த தெய்வம் எப்படி யிருக்கிறதென்று பார்க்கிறேனம்மா.

யசோதை.

நீ அவ்வளவு கேட்கிறதாலே அதிலே ஏதோ மோசமிருக்க வேண்டும். நான் மாட்டேன்

கிருஷ்ணன்.

கேட்டால், மாட்டேன! உனக்கு எங்கே இஷ்டமோ அங்கே என்னைக் கட்டிப்போட்டுவை அம்மா.

யசோதை.

அதற்குத்தான் இடம் தேடுகிறேன்.

கிருஷ்ணன்.

தேடு—தேடு—

யசோதை.

அதுதான் சரியான யோசனை. புழைக்கடை ரேழியிலிருக்கும் உரலில் கட்டி வைத்தால் அவ்விடம் ஒன்றுமிராது சேஷ்டை செய்ய. வாடா கிருஷ்ணா.

(யசோதை, கிருஷ்ணன், பத்மா, தாதி, எல்லாரும் போகிறார்கள்.)

---

## பதினொன்றாவது காட்சி

---

## பந்தன மோக்ஷ யோகம்.

(நந்தகோபர் வீட்டுப் புறக்கடை ரேழியிலிருக்கும் உரலில் கிருஷ்ணனைக் கட்டிக்கொண்டிருக்கிறாள் யசோதை. தாதியும் பத்மாவும் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.)

யசோதை.

என்னடா கிருஷ்ணா! கட்டவிடாமல் இப்படி யெல்லாம் என்னமோ வித்தை பண்ணுகிறாயே !

க்ருஷ்ணன்.

என்னைக் கட்ட உன்னால் முடியாவிட்டால் என்னைச் சொல்வானேன் ?

யசோதை.

கிருஷ்ணா, என் கண்மணி, இத்தனை நேரம் கஷ்டப்பட்டுப் பிரயத்தனப்பட்டுக் கட்டாதே விட்டு விட்டுப் போய்விட்டால் மட்டான அவமானமா உன் அம்மாவுக்கு ?

க்ருஷ்ணன்.

ஆனால் நீ என்ன சொல்லுகிறாய், 'என்ன கிருஷ்ணா, நீயே கட்டுப்பட்டுக்கோ' என்கிறாயா ?

யசோதை

ஆமாம், கண்ணே !

கிருஷ்ணன்.

அப்படியே செய் அம்மா.

[யசோதை கிருஷ்ணனை உரலில் இடுப்பு கால்களைக் கட்டிவிட்டு எதிரில் நின்றுகொண்டு,]

யசோதை.

ஊம், இனிமேல் எங்கேயும் ஓடமாட்டாயே, சேஷ்டையை செய்யமாட்டாயே!

கிருஷ்ணன்.

என்ன அம்மா கட்டியாய் விட்டதா?

யசோதை.

ஏன்? ஆய்விட்டது!

கிருஷ்ணன்.

சரி, போ, எனக்கு ரொம்ப வேலை யிருக்குது.

யசோதை

என்ன வேலையடா கிருஷ்ணா?

கிருஷ்ணன்.

கட்டு அவிழ்க்கிற வேலை. கைகளை நீ கட்டாமல் விட்டது கால் கட்டை அவிழ்த்துக் கொள்வதற்குத் தானே?

பத்மா.

பார்த்தையா யசோதா தேவி, எனக்கும் தோன்ற வில்லை. காலைக் கட்டிவிட்டுக் கையை கட்டாமல் விட்டால் கிருஷ்ணன் நம்மை ஏளனம் செய்கிறான.

யசோதை.

ஆமாண்டீ பத்மா. என்ன, இப்படி ஒரு அசடு இருக்குமோ? இதோ, கைகளையும் நன்றாய்க் கட்டிப் போடுகிறேன்.

பத்மா.

வேண்டாம் அம்மா, வீணாய் குழந்தையை ஏங்க விடாதே. கட்டவிழ்த்து விடு.

கிருஷ்ணன்

அம்மா, அம்மா, நீ நல்ல அம்மா அன்றோ? என்னைக் கயிற்றாலே கட்டாதே அம்மா. நான் இனி மேல் அப்படி சேஷ்டை செய்கிறதில்லை.

யசோதை.

அப்படியே செய்வாயா என்ன? வெவ்வேறு விதமாகத்தான் செய்வாய் இந்தத் தடவை உன் மாயத்திற்கும் மாயாளத்திற்கும் நான் ஏமாறவே மாட்டேன். உன்னை சாயுங்காலம் வரையில் இப்படித் தான் கட்டிப்போட்டு வைக்கப்போகிறேன்.

கிருஷ்ணன்

அப்படியே செய்யம்மா, செய, உனனிஷ்டப் படியே. சாயுங்காலம் சீக்கிரம் வந்து விடாதாம்மா?

யசோதை.

என்ன சாயுங்காலமோ? உன்னை எப்போதும் கட்டிப்போட்டு வைத்தாலும் எனக்கு சந்தோஷந் தான்.

கிருஷ்ணன்.

சாயுங்காலம் திரும்பவும் நன்றாய்க் கட்டினால் அது பொழுது திரும்பவும் விடிகிற வரையில் அப்படியே கெட்டியாய் இருக்கும்.

யசோதை.

கட்டவிழ்க்காமலே யிருந்தால?

கிருஷ்ணன்.

எப்பவும் இங்கேயே கட்டுண்டு அழுதுகொண்டிருப்பதுதான்!

பத்மா.

அப்படி வேண்டாமடா கிருஷ்ணு. நான உன கட்டை அவிழ்த்து விடுகிறேன.

யசோதை.

நீ போ பத்மா. நீ உன காரியத்தைப பார். உங்களால்தான் கிருஷ்ணன இவவளவு துஷ்டனாய்விட்டது.

கிருஷ்ணன்.

போங்க, போங்க! அவாளவாள காரியத்தை அவாளவாள் பாருங்கோ—

யசோதை.

இனிமேல் நீயும உன காரியத்தைப பாரக்கலாம.

கிருஷ்ணன்.

அப்படியே அம்மா.

யசோதை.

கிட அங்கே. யாராவது அவன கட்டை அவிழ்க்கப் போகிறீர்கள், பத்திரம!

கிருஷ்ணன்.

அமமா கட்டின கட்டை, அம்மா தான் அவிழ்க் கட்டுமே!

யசோதை.

கட்டை அவிழ்க்கிறதா? இநத ஜன்மத்திலே கிடையாது.

கிருஷ்ணன்.

ஆனலம்மா, என்னை, ஆயிரம ஜன்மம் கட்டிவைக் கப் போகிருயா?

யசோதை.

பதினுயிரம் ஜன்மமெடுததாலும உன குணம் மாருது எனறு நமபுகிறேன.

கிருஷ்ணன்.

நான கூட அப்படித்தான் நினைக்கிறேன் அம்மா.

யசோதை.

உன் சேஷ்டைகளும மாறப் போகிறதில்லை.

கிருஷ்ணன்.

நான் மாறினல் தானே அம்மா, அது மாறும்!

யசோதை.

மாறறுகிறேனு இல்லையா பார். இனிமேல் உனக் கொரு நல்ல வாத்தியாரைப் பார்த்து சிக்ஷிக்கச் சொல்லுகிறேன் பார்!

கிருஷ்ணன்

யாரம்மா அந்த வாத்தியார்?

யசோதை.

சீக்கிரத்தில் தெரியும், வாயை மூடிக்கொண்டு கிட.

[யசோதை போகிறாள்.]

பத்மா

ஏனடா கிருஷ்ணா. சேஷ்டை செய்வானேன், இப்படிக் கட்டுப்படுவானேன? இபபோக்கொத்த குழந்தையை உரலில கட்டிவைக்க அநத யசோதைக்குத்தான் எப்படி மனம் வநததோ?

கிருஷ்ணன்

கூப்பிட்டுதான் வநதிருககும.

பத்மா.

யார் கூப்பிட? நீயே வா?

கிருஷ்ணன்.

எல்லாம் நானேயோ?

பத்மா.

அப்படித்தான் பேசுகிறாய்.

கிருஷ்ணன்

சரி அப்படித்தான் இருககட்டுமே.

பத்மா.

சரி, அப்படியேதான் இரு.

[போகிறாள்.]

(கிருஷ்ணன் புன்சிரித்து உரலின்மேல உட்காாநது கொணடு யோசனை செய்கிறான்.)

சேஷன்.

(பிரவேசித்து)

கிருஷ்ணு, உன்னை யெங்கே யெல்லாம தேடுகிறது? இங்கே என்ன பண்ணுகிருய் ?

கிருஷ்ணன்.

எல்லாம் காரியமாகத்தான் இருக்கிறேன்.

சேஷன்

உரல்மேலே என்ன காரியம ?

கிருஷ்ணன்.

அதுவா ? எங்கமமா உரலில் என்னைக் கட்டி விட்ட காரியம்.

சேஷன்.

ஆமாமடா ! நான் பாரக்கவேயில்லை. கை காலை யெல்லாம கட்டிவிட்டிருககிறதே. இதென்ன அநி-யாயம். யார கட்டினது ? இதோ காட்டு, நான் அவிழ்த்து விடுகிறேன.

கிருஷ்ணன்.

வேண்டாம. எங்கமமா பார்த்தால் உனக்கும் வரும் எனக்கும வநதது.

சேஷன்.

வரட்டுமே, அதறகெலலாம நாஞ பயப்படு கிறவன் ?

கிருஷ்ணன்.

அம்மா தான் அவிழ்க்கவேண்டுமாம் அம்மா கட்டினதை !

சேஷன்

ஆனால் நான் உங்களப்பாவிடம் போய் சொல்லு கிறேன்.

க்ருஷ்ணன்.

வேண்டாம், வாயைமூடிக்கொண்டிரு. இதி லென்ன கஷ்டம்? இதுவும் விளையாட்டு போலே தானே யென்று நினைத்துக்கொண்டால் சரியாய்ப் போகிறது. அதோ லக்ஷ்மணன் வருகிறான், ஒரு வேடிக்கை பார். நான் கட்டுப்பட்டதற்கு அழுகிற மாதிரி அழுகிறேன்.

[கிருஷ்ணன் விம்மி விம்மி அழுகிறான்]

சேஷன்.

கிருஷ்ணு, அழாதே! அழாதே!

லக்ஷ்மணன்.

(பிரவேசித்து)

என்னடா சேஷா, கிருஷ்ணன் ஏன் இப்படி அழுகிறான்? யாரென்ன செய்தார்கள்? கிருஷ்ணு! பாவம்—அழாதே, சொல்லு

[கிருஷ்ணன் இன்னும் அதிகமாக விம்மி அழுகிறான்]

லக்ஷ்மணன்

இதென்ன அநியாயம், என்னடா சேஷா, நீதான் ஏதாவது செய்தாயா?

சேஷன்.

நானு—என் பாவமா?

லக்ஷ்மணன்.

ஆனால் ஏன் இப்படி அழவேணும்? கிருஷ்ணன் அழுது நான எப்பவும் பார்த்ததே யில்லையே !

சேஷன்.

அதனாலதான் அழுகிருனோ என்னவோ !

லக்ஷ்மணன்.

கிருஷ்ணா, அழாதே ! நீ அழுவதைப் பார்த்தால் எனக்கும அழுகை வருகிறது. உன்னை யார் என்ன செய்தார்கள் ? உனக்கு என்ன வேண்டுமோ சொல், நான் அப்படியே எல்லாம செய்கிறேன்.

[கிருஷ்ணன இன்னும அதிகமாக அழுகிருன.]

லக்ஷ்மணன்.

(சேஷனைப்பார்த்து)

என்னடா சேஷா ! நீ தான் சொலலேனடா; ஏன் கிருஷ்ணன் அழுகிருன இப்படி ?

சேஷன்.

அழுகிறதற்குக் காரணம் அழுகிறவனைக் கேட்டால் தானே தெரியும்.

லக்ஷ்மணன்.

ஆஹா, அப்படியா ? நீதான் ஏதோ செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிருஷ்ணன் இப்படி அழுவானா ? நான் இதோ போய் நந்தகோப ராஜா

விடம் சொல்லி அவரை இங்கே அழைத்துக்கொண்டு வருகிறேன்.

[லக்ஷ்மணன விரைவாயப் போகிறான்]

### சேஷன்.

என்னடா கிருஷ்ணு! இநத லக்ஷமணன போய ராஜாவை அழைததுககொண்டு வநதால அவர் என பேரில் கோபிததுக் கொணடால நான என்ன செய் வது?

### கிருஷ்ணன்.

(அழுகையை நிறுததி சிரிததுககொணடு) வரட்டும் வரட்டும. வருவது வரட்டும. வேடிக்கை பார்க்கலாம்.

[அசசமயததில் சிறிது தூரததில நாரத ரும வியாஸரும் பிரவேசிதது.]

### வியாஸர்.

நாரத மஹாரிஷே! கண்டீரா காட்சியை? வைகுண்ட மான பரமபதத்திலிருக்கும ஸ்ரீயःபதியும் ஜகதபதியு மான ஸ்ரீமந நாராயணன், இவவிதம இநதபூலோகத்தில் ஒரு ஸ்திரீயின உதரத்தில் காபபவாசம செய்ததுமல் லாமல், இநத ஆயர் சேரிக்கும வநது தாயார் என அதி கரிக்கும ஓர் இடைசசி கையால உரலில கட்டுண்டு, ஏங்கி ஏங்கி அழுவதை, இநத ஸௌலபயமான காட்சி- யை நாம் எனனென்று சொலவது. என்ன இநத பகவல் லீலை! இதைவிட பரமாஸ்சரியம் என்ன இருக்கக்கூடும்?

நாரதர்.

(சிறிது யோசித்து)

பாராஸாயரே! தித்திப்பையே அதிகமாகச் சாப்பிட்டவர்கள் காரத்தையும், கசப்பையும் மாறுதாகக் கருதுவதுபோல், எல்லா பத்தர்களுக்குமே சங்கல்ப மாத்திரத்தில் மோக்ஷஸ்வாய ஸர்வஸ்வத்தையும் ஒரு க்ஷணத்தில் அநுக்கிரஹிக்கும் இந்த வைகுண்ட நாதனுக்கு பந்தத்தையும் ருசிபார்க்க ஆவலுண்டாகி வேறு வகையில்லாமல் இப்படி கட்டுண்டார் போலும்!

வியாஸர்

அது மாத்திரமோ! மோக்ஷமூர்த்தியான தன்னை இந்த பந்த தசையில் கண்டவர்களுக்கெல்லாம் மோக்ஷம் அளிக்கவன்றோ?

கிருஷ்ணன்.

சேஷா, எனக்கு தூக்கம்வரும்போல் இருக்கிறது. நான் இங்கேயே தூங்கிவிடுகிறேன், நீ இங்கேயே இரு போய்விடாதே! என்னதான் நடக்கிறதோ பார்க்கலாம்.

[கிருஷ்ணன் ஓய்ந்து உறங்குவது போல படுத்து நடிக்கிறான்.]

நாரதர்.

ஆஹா! பாராஸாயரே! பார்த்தீரா! நிஜமாகவே அழுது களைத்து மெய்ம்மறந்து தூங்கி விட்டாப் போல் இருக்கிறது குழந்தை. நாம போய் கட்டை அவிழ்த்து விட்டாலோ?

வியாஸர்.

தெய்வீகமாயையானது நம்மையுந்தான் பிரமிக்கச்செய்யும்! பகவல்லீலைகளைக் கண்டு தூரத்திலிருந்து ஆநந்திக்க நமக்கதிகாரமே ஒழிய, அதில் கூடக்கலந்து ஒழுகும் பாக்கியம் நமக்கில்லை. அதிருக்கட்டும். இந்த லீலைக்குக் காரணம் உமக்குத் தோன்றவில்லையோ?

நாரதர்.

நான் யோசிக்கவில்லை என்னவாயிருக்கக்கூடும்?

வியாஸர்.

அந்த யமளார்ஜுன விருக்ஷம் தெரியுமா? ஞாபகம் இருக்கிறதா?

நாரதர்.

(சிறிது யோசித்து)

ஓ! என்னால் சபிக்கப்பட்ட குபேர குமாரர்களான நளகூபரன், மணிக்ரீவன் இவர்கள் சாப விமோசனகாலம் வந்துவிட்டது போலும்!

வியாஸர்.

ஆமாம். அதுதான் தத்வம். மானம்விட்டு பரம பாகவதபசாரம் செய்ததற்கு சிக்ஷை அனுபவித்தாய் விட்டது. அடுத்த க்ஷணத்தில் பகவத்பாத ஸ்பர்சத்தால் பாபவிமோசனமும், அத்துடன் காம விமோசனமும் பெற்று மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையப்போகிறார்கள். சற்றிரும். அந்தக் காக்ஷியைக் கண்டு களிக்கலாம் நாமும்.

[இதற்குள் லக்ஷ்மணன் அழைத்துக் கொண்டுவர நந்தகோபர் வருகிறார்.]

லக்ஷ்மணன்.

இதோ, மஹாராஜா, தாங்களே பாருங்கள். கிருஷ்ணனை எப்படி ——. இப்பொழுதுதான் அழுது கொண்டிருந்தானே கிருஷ்ணன் விம்மி விம்மி? பாவம் அழுது அழுது அப்படியே தூங்கிவிட்டான் போலிருக்கிறது.

நந்தகோபா.

கிருஷ்ணு அழுதானா? என்ன காரணம்? ஏன் இங்கே தூங்குகிறுன குழந்தை? (கட்டியிருப்பதைப் பார்த்து,) ஆஹா! யார் இப்படி காலையும் கையையும் கூடக் கட்டிவிட்டார்கள்? யாருக்குத்தான் மனசு வந்தது?

சேஷன்.

மஹாராஜா, அம்மா யசோதாராணி இப்படிக் கட்டினார்களாம்.

நந்தகோபர்.

அப்பேர்க்கொத்த அபராதம கிருஷ்ணன இன்றையதினம் என்ன செய்தான்?

சேஷன்.

அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது.

நந்தகோபர்.

(தூங்குகிற கிருஷ்ணனை எழுப்புவதற்காக) கிருஷ்ணு! கிருஷ்ணு!! பாவம் அயர்ந்து தூங்கிவிட்டான் போலிருக்கிறது.

[நந்தகோபர் கிருஷ்ணனுடைய கை கால்கள் கட்டுகளை அவிழ்க்க ஆரம்பிக்கிறார். அதற்குள் யசோதை பிரவேசிக்கிறது.]

யசோதை.

எதற்காக என்னைக் கூப்பிட்டீர்களாம்?

நந்தகோபர்.

நான் கூப்பிடவில்லை. ஆனாலும் இதென்ன இது? கிருஷ்ணனை யார் இப்படிக்கட்டினது?

யசோதை.

ஏன், நான்தான். அவன் செய்கிற சேஷ்டை உங்களுக்கென்ன தெரியும். ஊரார் எல்லாரும் முறையிடுகிறார்கள். ஒரு க்ஷணங்கூட வெறுமே இருக்கிறதில்லை. அவமானமாய் இருக்கிறது.

நந்தகோபர்.

அதற்காக இப்படிக் கட்டலாமோ? சிறுபிள்ளைகள் சேஷ்டை செய்வது சகஜம். அதிலும் தேகத்திலும் புத்தியிலும் சுறுசுறுப்புள்ள பிள்ளைகள் செய்வதை யெல்லாம் வயதானவர்களான நாம் சேஷ்டை யென்கிறோம்.

யசோதை.

இது நல்ல மத்தியஸ்தந்தான், அதுமட்டுக்கும். கிருஷ்ணன் தூங்கிக்கொண்டிருக்கிறான். நீங்கள் சொல்லும் வார்த்தைகளையும் கேட்டு விட்டால் அத்துடன் சரிதான்.

நந்தகோபர்.

(புன்சிரிப்புக்கொண்டு)

அதுவும் உன் தப்புதானே. நீ ஏன் மத்தாக பிள்ளையைப் பெற்றுக் கொள்ளவில்லை? அப்படியிருந்தால் இருந்தவிடத்தை விட்டு நகராமலிருப்பன் பிள்ளை.

யசோதை.

போரும, போரும! நீஙகள் போங்கள்.

நந்தகோபர்.

நான காலகை கட்டுகளை அு விழ்த்து விடுகிறேன்: கோபித்துக் கொளளாதே:

யசோதை.

தொடவேணடாம! கிருஷ்ணன ஆணை. எனக்கு மிகவும் கோபம வரும்.

நந்தகோபா.

சரி அப்படியானால உனனிஷ்டப்படி செய். இநத வீட்டில் பிறநத அநத பிள்ளை என்னெனன அனுபவிக்க வேண்டுமோ அதெல்லாம அனுபவிததுத் தானே ஆகவேணடும!

[நநதகோபா போகிறா.]

யசோதை.

யாராவது இநதககட்டை அவிழததால் என்ன நேரிடும தெரியுமா?

கிருஷ்ணன்.

(கண விழிததுககொணடு)

எனககுத தெரியுமமமா?

யசோதை.

தெரியுமா? ஆனால இஙகேயே கிட.

கிருஷ்ணன்.

எது வரையிலம்மா?

யசோதை.

புத்தி வரும் வரையில்.

கிருஷ்ணன்.

யாருக்கு அம்மா ?

யசோதை.

யார் கட்டுப்பட்டு இருக்காளோ அவாளுக்கு.

கிருஷ்ணன்.

அவாளுக்கா ? எப்போவரும் அம்மா ?

யசோதை.

அதி சிக்கிரத்திலேயே!

கிருஷ்ணன்.

புத்தி வருமா? ஆனலப்படியே வரட்டுமம்மா ! நான் இனெருரு தூக்கம் போடுகிறேன். நீ போம்மா.

[யசோதை போகிருள். கிருஷ்ணன் தூங்குவது போல இருக்கிருன்.]

சேஷன்.

வாடா லக்ஷ்மணு! கிருஷ்ணன் தூங்கிவிட்டான். நாம போய் விளையாடலாம்.

லக்ஷ்மணன்.

கிருஷ்ணன் இப்படி யிருக்க நமக்கென்னடா விளையாட்டு ?

சேஷன்.

நாம என்ன செய்யலாம. நம்மால் அவனை விடுவிக்க முடியாது. அவனே ஆசைபபடடுக் கட்டிக கொண்டான் போலே தானே இருக்கிறது. போக லாம வா!

[சேஷனும் லக்ஷமணனுய போகிறாகள்.]

நாரதர்.

(தூரத்தில.)

இதென்ன தூக்கம பாராஸர்யரே.

வியாஸர்.

ஏதோ பிரளயம வரப்போகிறது போலும்!

நாரதர்.

(கொஞசம உன்னிததுப் பார்தது)

நிஜமாகத்தான் தூஙகிவிட்டாரோ?

வியாஸர்.

பகவான் நிஜமாக நித்திரை செய்து விடடால் மஹாப்பிரளயம் அல்லவோ வரவேண்டும? நாமும எப்படி மீநது இருபபோம்?

நாரதர்.

அப்படியன்று. பாஞ்சபௌதிகமான இந்த தேகத்தில் வநத பிறகு பிரகிருதி மண்டலததின் இருட்டு, வெளிச்சம், தூக்கம, விழிப்பு, முதலானது மாறி மாறி வரும் இயறகையான தர்மத்தையல்லவோ அனுஷ்டிக்க வேண்டும?

வியாஸர்.

(புன் சிரிப்புடன்)

ஆனால், இது நிஸ்சயமாக தேவரீருக்குத் தெரியுமோ, கிருஷ்ணனுடைய திருமேனி சாதாரண-மான பிராகிருதமான தேகந்தான், என்று? "யதா ஆத்மா ததா சரீரம" அல்லவோ? சாரீரக சாஸ்திரத்தால அவிநா பாவமே யன்றி அன்யதா பாவமும ஏறபடககூடாதோ?

நாரதர்.

ஹோ! ஹோ!! என்ன, இதுவும தேவரீருடைய பிரமம சூத்திரத்தில ஒன்றோ?

வியாஸா.

அநத பிரமமமே இங்கே சூத்திரபததமாயிருக்க, என்னுடைய சூததிரங்களைபபற்றி விசாரமேன?

நாரதா.

அதேன் விசாரமில்லை? வேறு விசாரமே இல்லாத நமககு தத்துவ ஹித புருஷாத்தங்களான இநத மூாததியை யசோதாதேவி இநத சூததிரததினால் இப்போது கட்டினால, தேவரீருடைய பிரமம சூத்திரத்திரத்தில் அதே பிரமமததை ஏததபூாவமே ஆஸசாயமாய் கடடி விடடீரே!

வியாஸர்.

ஸஹருதய ரஸிக சிகாமணியான நாரதப பிரம்ம ரிஷியோடு சமானமாய் அடியேனால் சமபாஷிக்க முடியுமோ?

கிருஷ்ணன்.

*(கண் விழிப்பதுபோல விழித்து, யாராவது வருகிறா-களோ என்று இங்கு மங்கும் பார்த்து)*

*சரி, அப்புறம் கட்டையோ அம்மா அவிழ்க்கக் கூடாதென்று சொல்லிவிட்டாள்! போகவோ போக-ணும். என்ன செய்யலாம்? (சிறிது யோசித்து, உரலைப் பார்த்து அதைத் தட்டிக் கொடுத்து) உரலே! நீ நல்ல உரல். எல்லாரும் என்னை விட்டுட்டு பூட்டா, என்னை உன்னோடு கட்டிட்டாளே; என்னோடு வரையா? நீயும் நானும் ஒன்றாய்விட்டோம். உனக்கும் வேறு இல்லை; வா பார்ப்போம். (சொல்லிக்கொண்டே உரலைக் கையால் பெயர்த்து இழுக்கிறான். உரலை இழுத்துக்கொண்டு புறப் படும் பொழுது இந்திரன் பிரவேசித்து,)*

இந்திரன்

*என்னடா கிருஷ்ணா! கட்டோடே உரலை இழுத்துக்கொண்டு போறாயே, எங்கே போறே?*

கிருஷ்ணன்.

*கட்டோடே போகமுடியாதா என்ன, எனக்குக் கூட?*

இந்திரன்.

*உன்னாலே முடியாதது என்னடா இருக்கிறது, லோகத்திலே?*

கிருஷ்ணன்.

*ஆமாம், அதெல்லாம் சரிதான், அம்மாவிடம் மாத்திரம் எனக்கு பயந்தாண்டா.*

இந்திரன்.

என்ன பயமடா? பலே பயம்! உனக்கா பயம்?

கிருஷ்ணன்.

என்னென்றாலும் அம்மானுக்கு பயப்படவேணு மோல்லியோடா? அதுவும் எங்கம்மா இருக்காளோ அவளுக்குக் கோவம் அதிகண்டா.

இந்திரன்

ஆமாண்டா, கிருஷ்ணனு பார்க்கிறதில்லே!

கிருஷ்ணன

அதனாலேடா. என்மேலே ஆசை அதிகமா, அதனாலே கோவம் அதிகம்.

இந்திரன்

அதெல்லாம் சரி. நீ வாயேண்டா விளையாடப் போகலாம். ஆமாம், இந்தக் கட்டோடே எங்கே போகப்போறே இந்த உரலையும் இழுத்துண்டு?

கிருஷ்ணன்

உரலே இழுத்திண்டு போனாலே, தானே கட்டை அவிழ்த்துடாரா.

இந்திரன்.

சரி, ஆனா போகலாம விளையாட வா, இதையும் இழுத்துண்டு. இது ஒரு பாவமா?

கிருஷ்ணன்.

ஆனா வா. இந்த அர்ஜுன மரத்தினகிட்ட அதோ பக்கத்திலே தொங்கர நாகப்பழத்தை

யெல்லாம பாரு. வா, வா, சாப்பிடு என்று கூப்பிடு கிறதடா! ஏறிப் பறிததுச சாப்பிடலாம வா.

இந்திரன்.

ஐயோ அப்பா, நான அர்ஜுன மாத்தண்டே வரமாட்டேன், அநத இரட்டை மாத்திலேயும் பிசாசு இருக்குதாம. எஙக பாட்டி சொன்னுளே! ராத்திரி வேளையிலே பிசாசுகள் ஒன்றுக்கொனறு பேசிக்கிறதாம!

கிருஷ்ணன்.

அடேடே, பயங்கொள்ளி. அப்படியானுத்தான அவசியமாகப போகணும: நமமைப் பார்த்தா பிசாசு கூட ஓடிப் போகாதாடா?

இந்திரன்

அடே கிருஷ்ணு, நான சொல்றதைக் கேள். அதுங்கிட்ட போகாதே. அதிலே தெய்வம இருக்குது என்று எல்லாரும் சொல்ராடா.

கிருஷ்ணன்.

தெய்வமும் ஆச்சு, மண்ணுங்கட்டியும் ஆச்சு. ஐயோ, இவா பேச்செலலாம் கேட்டா, எல்லாததி லேயுமதான் தெய்வம இருக்கு எனறு சொல்ராங்க.

இந்திரன்.

ஏன இருக்கக் கூடாது?

கிருஷ்ணன்.

எங்கேயும் இருக்கிறது, அங்கேயும் இருந்தால் அங்கே இருககிறது இங்கேயும் இருக்கலாமே!

இந்திரன்.

போடா கிருஷ்ணு, உன புதிரும நீயும!

கிருஷ்ணன்

இதுவா புதிர்? சரி, வா, போகலாம.

இந்திரன்.

எனக்கு இனனும ஏதோ பயமாயிருக்குதடா.

கிருஷ்ணன்.

நான இருக்கச்சே உனக்கென்னடா பயம.

[இப்படிச் சொல்லிக்கொண்டே இந்திரன பயந்தவனாய் கொஞசம தூரத்திலேயே வர, கிருஷ்ணன உரலையும இழுத்துக்கொண்டு அந்த ஆராஜுன மரங்களின நடுவில ஏற முயல, அதன நடுவில உரல அகப்பட்டுக்கொண்டு அதே வியாஜமாய அவ்விரண்டு மரங்களும அதிக சப்தத்துடன கீழே விழுகின்றன. விழுந்த இரட்டை மரத்தின் நடுவில கிருஷ்ணன சிரித்துக் கொண்டு நிற்கிறான. அதற்குள் இந்திரன்.. ]

இந்திரன்.

அகப்பட்டுக்கொண்டு விட்டான் கிருஷ்ணன!
அகப்பட்டுக்கொண்டு விட்டான் கிருஷ்ணன் !

[என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடுகிறான.]

(உடனே ஆகாசத்திலிருந்து அடியிற்கண்டவாறு ஒரு ஸ்துதி கேட்கிறது.)

" ஜய விஜயீபவ, ஸ்ரீகிருஷ்ண பகவானே,
வைகுண்ட நிவாஸனே,
அவதார லீலா விநோதனே,
துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனே,
பக்த ஹ்ருதய நவநீத சோரனே,
நாரத சாப விமோசனனே,
மோக்ஷானந்த மளிப்பவனே!
அநந்த பிரணாமங்கள் செய்கிறோம்."

ஜயவிஜயீபவ! நாங்கள் விடைபெற்றுச் செல்கிறோம்.

வியாஸர்.

நாரத பிரம்மர்ஷே! நாம் வந்த காரியம் ஆய்விட்டது. இந்த ஸ்ரீகிருஷ்ண லீலையாகிற அமிருதப் பிரவாகத்தில் முழுகிப் பரமானந்தம் அனுபவித்தோம்! இனி இங்கே தாமதிப்பது உசிதமல்ல. போவோம் வாரும்!

[இருவரும் போகிறார்கள். இந்திரன் நந்தகோபருடன் ஓடி வருகிறான். யசோதையும் தாதிகளும் மற்றொரு பக்கத்திலிருந்து ஓடி வருகிறார்கள். பலராமனும் மற்றப் பிள்ளைகளுங்கூட ஓடி வருகிறார்கள்]

நந்தகோபர்.

[கிருஷ்ணன் சிரித்துக்கொண்டு நின்றிருப்பதைக் கண்டு]

**இதோ இருக்கிறானே கிருஷ்ணன்! அகப்பட்டுக் கொண்டான் என்றாயே இந்திரா?**

இந்திரன்.

நானே பார்த்தேன்.

கிருஷ்ணன்

என்ன பார்த்தாய்?

இந்திரன்.

மரத்தடியில பிசாசுகள வாயில——

கிருஷ்ணன்

மரத்துக்கு அடியெங்கிருந்தது? அது தான் அடியோட விழுந்து விட்டதே, என கால பட்டதோ இல்லையோ தொபகடேல என்று அது சொதனை மாம அப்பா!

நந்தகோபா

ஆமாம, பிசாசு என்றுனே அதென்ன?

கிருஷ்ணன்.

அதுவா பயந்தவனைத்தானே பிசாசு பிடிக்கும்! இந்திரன பயந்து விட்டான அவனைப் பிடிக்கப் போச்சு. அதற்குள்ளே அவன ஓடிப்போய்விட்டான்.

யசோதை.

என் கண்ணே, நீ பிசாசைப பார்த்து பயந்தாயோ?

கிருஷ்ணன்.

நானா அம்மா? ஐயோ, ஒரு வேளை பிசாசு என்னை பார்த்துப் பயந்திருக்கும் அம்மா. விசாரித்துப் பார்த்தால் தெரியும்.

யசோதை.

உன் விசாரமே எனக்கு ஒழியா விசாரமாய் விட்டதே?

கிருஷ்ணன்.

அதிலே என்ன தப்பு அம்மா, நீ எப்பவும் என் மேலே ஆசையா யிருக்கிறதிலே?

யசோதை.

அதிருக்கட்டும். நான் உன்னை உரலில கட்டி வைதது ஒருவரும கட்டவிழக்கக கூடாதெனறு சொல்லி யிருநதேனே, நீ இஙகே எப்படி வநதாய்?

கிருஷ்ணன்.

நீ கட்டின கட்டு அப்படியே இருக்குது பாரம்மா, இன்னும.

யசோதை.

இதென்ன உரலையே இழுததுக்கொண்டு வநது விட்டாயா என்ன?

கிருஷ்ணன்.

ஆமாம்மா! நீ என்னை உரலை இழுக்ககூடாதென்று சொன்னையா என்ன?

யசோதை.

நீ செய்யப்போகிற சேஷ்டைகளை யெல்லாம் முன்னே சொன்னால், நான செய்யக்கூடாத காரியங்களை யெல்லாம் கணக்கிட்டுச சொலலலாம. அதெப்படி சாத்யம்?

கிருஷ்ணன்.

ஆமாம்மா, அசாததியமான காரியத்தை நான் மாத்திரம் எப்படிச் செய்கிறது அம்மா?

யசோதை.

என்னடா கிருஷ்ணு, உனக்குக்கூட அசாத்திய-மானதென்று ஒன்று உண்டோ?

நந்தகோபர்.

இத்தனை தாக்கம் இது கிருஷ்ணன் கட்டுப் பட்டே நிற்க? (யசோதையைப் பார்த்து) இனிமேலாவது குழந்தையின் கட்டை அவிழ்க்கலாமோ?

கிருஷ்ணன்.

அம்மா தானேதான் அவிழ்க்க வேணும் என்று சொன்னு, அப்பா.

யசோதை.

(கிருஷ்ணன் கட்டை அவிழ்க்கிறுள்) இத்தனை மணி முடிச்சாய் இருக்கிறதே?

கிருஷ்ணன்.

அவாளவாள் போடுகிற முடிச்சைத்தான் அவாளவாளுக்கே அவிழ்க்கத் தெரிகிறதில்லே. அவிழ்த்து விட்டாயா அம்மா?

யசோதை.

என்னுல் முடியவில்லையே!

கிருஷ்ணன்.

அந்த நுனியைப் பிடிச்சு இழு அம்மா, வந்துவிடும்.

[யசோதை கட்டை அவிழ்த்து கிருஷ்ணனை விடுவிக்கிறுள்.]

நந்தகோபர்

கட்டும் அவிழ்ந்தது, காரியமும் முடிந்தது. போகலாம் வா!

கிருஷ்ணன்.

இன்னுமொரு முக்கியமான காரியம் இருக்கிறதே!

நந்தகோபர்.

அதென்ன அவ்வளவு முக்கியமான காரியம்?

கிருஷ்ணன்.

எதற்காக மரத்திலே ஏறினேனோ அதை மறக்கலாமோ?

நந்தகோபர்.

எதற்காக?

கிருஷ்ணன்.

நாகப் பழம் பறித்துச் சாப்பிட! பார்த்தீரா அப்பா? கீழே விழுந்த மரத்தாலே நாகமரக்கிளை தழைந்து போய் பழம் எட்டிப் பறிக்கும்படியாய் விட்டது. நல்லவேலை பண்ணித்து ஒடிஞ்சாலும் முறிந்த மரம்!

நந்தகோபர்.

அதென்ன நாகப்பழத்தின்மேலே உனக்கென்ன அவ்வளவு ஆசை?

கிருஷ்ணன்.

ஆமாம் அப்பா!

நந்தகோபர்.

அது ஏன்?

கிருஷ்ணன்.

அதுவா? சொல்லட்டுமா? அது கருப்பாய், நீலமாய், மழமழவென்று உள்ளே சிவப்பாய், ருசியாய் எவ்வளவு சாப்பிட்டாலும் திகட்டுகிறதேயில்லை அப்பா! அது உடம்புக்குக்கூட ரொம்ப நல்லதாம் அப்பா. இந்திரன் சொன்னான்! கேட்டுப் பார் வேண்டுமானால்.

நந்தகோபர்.

இந்திரன் பிரகஸ்பதிதான்! போகலாம் வா

கிருஷ்ணன்.

நான் ஒரே பழம் பறித்துக் கொள்ளட்டுமா அப்பா?

நந்தகோபர்

வேண்டுமானால் நான் பறித்துக்கொடுக்கிறேனே!

கிருஷ்ணன்.

நானே பறித்துக்கொள்கிறேன் அப்பா. அதுதான் ருசி.

நந்தகோபர்

சரி, செய் அப்படியே!

[கிருஷ்ணன் பழுத்தபழம் ஒன்றைப் பறித்து சாப்பிடுகிறான். எல்லாரும் போகிறார்கள்]

## பன்னிரண்டாவது காட்சி.

---

## ஆஸ்ரித சம்ரக்ஷண யோகம்.

---

[பிருந்தாவனத்தில் யமுனைக்கரை ஓரத்தில் மரத்தடி. நிழலான ஓர் பிரதேசம். மத்தியான்ன காலம். ஆயச்சேரிச் சிறுபிள்ளைகள் அநேகர் கூடியிருக்கிறார்கள்.]

சேஷன்.

என்னடா இந்திரா, நம்மோடு வந்தானே கிருஷ்ணன், அப்போ பிடிச்சுக் காணோமே, எங்கே பூட்டான்.

இந்திரன்

அவன் வரதும் போரதும் யாருக்கடா தெரியாது.

குள்ளன்.

ஆமாண்டா, உனக்குக்கூடத் தெரியாதா, கிருஷ்ணனும் நீயும் தானேடா ரொம்ப ஸ்நேஹம்? உன்னோடேதானே ரொம்ப ரகஸியம் பண்றான்.

கருப்பன்.

அவன் எல்லாரோடேயும் தானே ரகஸியம் பண்ணுகிறான். அப்பப்போ யாரார் இருக்கிறாளோ அவங்களோடே யெல்லாம்.

சேஷன்.

அதெல்லாம் இருக்கட்டுண்டா. கிருஷ்ணன் எங்கேடா? யாராவது பார்த்தீர்களா?

இந்திரன்.

அவன் போராப்போலே போவான்; வராப் போலே வருவான் வராப்போலே போவான்: போராப்போலே வருவான் அவன் திருட்டுத்தனத்தை யெல்லாம் கண்டுபிடிக்க ஒருத்தராலேயும் முடியாதுடா!

சேஷன்.

டே, யாரானாலும் சரி கிருஷ்ணனைத் திருட்டுத்தனம் கிருட்டுத்தனம் இன்னு பல்லே உடைச்சுடு வேண்டா!

இந்திரன்.

அடேடே, அதுகுள்ளே கோவம் வந்து விடுகிறதுடா இந்த ஐயாவுக்கு! நான் கிருஷ்ணனைப்பற்றிச் சொன்னால் திருட்டுத்தனம் இன்னு திருடுகிறான் என்ற அர்த்தத்திலேயா சொன்னேன்? அவன் அவ்வளவு கெட்டிக்காரன் என்று சொன்னேன்.

சேஷன்.

ஊம், பத்திரம்.

குள்ளன்.

அதெல்லாம் இருக்கட்டுமேடா, போன கிழமை நம்ம பெரியவங்க எல்லாம் பழம் இடம் அந்த கோகுலத்தை விட்டுட்டு பிருந்தாவனம் வந்தூட்டாங்களே இங்கே புதிசா வீடெல்லாம் கட்டிக்கொண்டு குடியிருக்க: அதென்னடா நிஜமான காரணம் என்னு தெரியுமா யாருக்கானு?

இந்திரன்.

அதெல்லாம யாருக்குடா தெரியும்? அப்பப்பா, எத்தனை வண்டி, எத்தனை மாடு, பசு, கன்று, என்ன வேடிக்கையாயிருந்தது டா? ஊரெல்லாம் புறப்பட்டு வந்தது பலே வேடிக்கையாயிருந்ததுடா. ஆனா, என்ன காரணமோ தெரியலேடா.

குள்ளன்.

நான பார்த்தேணடா : கோகுலத்திலிருந்து புறப்பட்டு பிருந்தாவனம வரததுககு முந்நாள ஸாயங்காலம நந்தகோப ராஜாவோடே உபநந்தா இன்னும் சில கிழவர்களெல்லாம ரகசியமாய்ப பேசிககொண்டிருந்தாாகள. இதைபபற்றிததான இருக்கும.

கருப்பன்.

டே! நீஙகளெல்லாம சொல்லுஙகடா. உங்களுக்கெல்லாம கோகுலமா, பிருந்தாவனமா ரொமப இஷ்டமாயிருக்கிறது?

இந்திரன்.

அதைப்பற்றிக் கேழ்ப்பானேடா. கோகுலத்திலே யமுனையிருக்கிறதா, கோவர்த்தனம இருக்கிறதா, காடு, மரம, பழம், இருக்கிறதா, ஒன்றுமே இல்லேயேடா? மாடு மனுஷ்யாள எல்லாருககும் இஙகே நன்றாயிருக்குது என்னுதான இங்கே வந்து விட்டிருககவேணும்.

குள்ளன்.

இல்லேயடா. நான் அவஙக ரெணடுபேரும் ரகசியமாயப பேசிக்கொணடிருக்ககசசே ஒட்டுககேட்டேன்.

என்னமோ கிருஷ்ணன் பிறந்த பிறபாடு கோகுலத்திலே ராக்ஷசாள், பிசாசு, இந்த பயமே அதிகமாய் போச்சாம். ஆகையால்தான் பிருந்தாவனம் வந்துவிட்டாளாண்டா.

இந்திரன்.

நமக்கு இந்த பிருந்தாவனமேதான் நன்னாயிருக்கிறதுடா.

குள்ளன்.

என்னென்னாலும் பழவிட்டத்தைவிட்டு வர நானு கொஞ்சம் கஷ்டந்தாண்டா.

சேஷன்.

நமக்கென்னடா, நமக்கெல்லாம் கிருஷ்ணன் எங்கேயே இருக்கானோ அதுதான் நம்ம இடம்.

கருப்பன்.

கிருஷ்ணன் எங்கேடா? காணாமே காணோம். இன்னும் வரல்லே!

இந்திரன.

அடே! அதோ புல்லாங்குழல் ஓசை கேட்கறதுடா. அதோ, அதோ பாருடா கிருஷ்ணன் வரதை. அந்த மயில தோகையென்ன, அந்த கண்ணழகென்ன! ஆடி-ஆடி அசைந்துகொண்டு, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டே வருகிற அழகு! அப்படியே பார்த்துக்கொண்டிருக்கலாம் போலிருக்குதடா!

கருப்பன்.

அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டுமடா. இந்த கிருஷ்ணன் எப்பவும் ஒரே சந்தோஷமாயிருக்கானே

அது எபபடிடா? நமக்குள் இனனும யாராவது அப்படி யிருக்காளா. அதுதான எனக்கு ரொம்ப ஆசசரியமா-யிருககிறது.

குள்ளன்.

ஆமாணடா, நாமும ராஜா பிள்ளையாயிருநதால் ஏண்டா சநதோஷமாயிருக்கலாம்.

இநதிரன்.

ஆனல் ராஜாககள்தான ரொமப சநதோஷமாய யிருக்காளோ? போடா முணடம, அவாளுக்குததான கவலையும விசனமும அதிகம. நமம கிருஷ்ணன தெய்வாம்ஸமென்று எனசகுத் தோனறுகிறது.

சேஷன்.

ஆமாண்டா, இலலாவிட்டால் இவ்வளவு ராக்ஷசாளையும கொன்னுடர்து எப்படி ?

குள்ளன்.

என்னடா, தெய்வாம்சமானல் அவன் தெய்வமேயோ? அப்படியானு அவனை விழுநது சேவியுங்கள்!

இந்திரன்.

சேவிசசா தப்பா என்ன? சேவித்தாலென்ன-மோ நல்லதுதான் வரும்!

குள்ளன்.

ஆனல் நீ போய் சேவிடா.

இந்திரன்

ஆகட்டும் அப்படியே செய்கிறேன். அடே வெய்யிலா இருக்குதே ரொம்ப! நான் மடுவிலே ஸ்நானம் பண்ணப்போகிறேன் நீங்கள் யாராவது என்னோடு வருகிறீர்களா?

க்ருப்பன்.

இந்திரா, அது வேணடாண்டா. அந்த மடுவிலே ஒரு விஷப் பாம்பு இருக்குதாம். ஒரு பெரிய விஷப் பாம்பு. காளீயன் என்று பேராம்.

இந்திரன்.

பாம்புமாச்சு, கீம்புமாச்சுடா! தண்ணிப் பாம்பு என்னடா செய்யும்? நம்மைப் பார்த்தால் ஓடிப்போகிறது?

சேஷன்.

ஏண்டா, வாணடாமென்கிற காரியத்தைச் செய்யணும் என்கிறாய்? ஏதாவது அபாயம் நேரிட்டால்?

இந்திரன்

நமக்கென்னடா பயம் கிருஷ்ணன் இருக்க?

சேஷன்

சரி, உன்னிஷ்டம் எனக்கு வாரதுக்கு இஷ்டமில்லை. நீ கோபித்துக் கொள்ளுகிறதானால் நான் வரேனப்பா.

இந்திரன்.

ஆனு வா போகலாம.

[சேஷனும இந்திரனும் சிறிது தூரததிலிருக்கும காளீய மடுவில் ஸநானம செய்யப் போகிருாகள். கருபபனும கொஞ்ச தூரத்தில் பின தொடருகிருன். மற்ருெரு பககததில் கிருஷ்ணன பிரவேசிககிருன்]

குள்ளன்.

என்னடா கிருஷ்ணு, இத்தனை நேரம் எங்கே போய்விட்டாய்? நீ இராவிட்டால் வெரிச்சுனு இருக்குது.

கிருஷ்ணன்.

நல்லது. இநதிரன இஙகே இருநதாபபோலிருந தநே, அவனெங்கே?

குள்ளன்.

அதோ பார். அவனும சேஷனும் மடுவில ஸ்நானம் பண்ணபபோகிருர்கள். வேண்டாமென்று தடுத்துப் பாாத்தோம். ஆனல கேட்கவில்லை.

கிருஷ்ணன்.

ஏன தடுத்தீாகள்?

ராமன்.

அநத மடுவில பெரிய விஷ ஸர்ப்பம் ஒன்று இருக்கிறதாம். அதில் இறங்குகிறவர்கள் எல்லாரும் செததுப்போய்விடுகிருர்கள் என்று சொன்ஞர்கள்.

கிருஷ்ணன்.

ஓ! ஆமாம். நானும் கேழ்விப்பட்டேன அப்படி-யானுல் அவர்களேன போகிறுர்கள்? ஏதாவது அபாயம் நேரிட்டால்?—

குள்ளன்.

அதுவா? கிருஷ்ணன் நமக்கு இருக்க, என்ன பயமென்கிறுன் இநதிரன!

கிருஷ்ணன்.

(புன் சிரிப்புடன)

ஓ அப்படியா! இவாகள் இஷ்டமானபடி யெல்லாம் செய்யணுமு, நான் அதையெல்லாம தீர்க்கணுமோ?

[அதறகுள கருபபன ஓடிவநது]

கருப்பன்.

கிருஷ்ணு! கிருஷ்ணு!! இநதிரனும சேஷனும் மடுவிலிறஙகி ஒரு முழுககுப் போடடாாகளோ இல்லையோ அதறகுள் ஏதோ ஒரு பாமபு வநது அவர்களைக் கடித்து அப்படியே அவாகளை வாலால் கட்டி உள்ளே இழுததுககொண்டு போய்விடடது. அவாகள இத்தனை நோம செத்தே போயிருக்கவேணடும. நீ தான காப்பாற்றவேணடும!

கிருஷ்ணன்.

ஆ, அப்படியா இதோ வருகிறேன!

[என்று சொலலி மடுவைப பாாதது விரைவாய ஓடுகிறுன கிருஷ்ணன்]

ராமன்.

கிருஷ்ணா! வேண்டாம், வேண்டாம், சொல்வதைக் கேள்! நீயும் அகப்பட்டுக் கொள்ளப்போகிறாய். அதில் என்ன லாபம்?

கிருஷ்ணன்.

என்ன சொன்னாய் ராமா? இந்திரனுக்கும் சேஷனுக்கும் இவ்வித ஆபத்து நேர என்னை சும்மாவா பார்த்துக்கொண்டிருக்க சொல்கிறாய்? சீ, என்ன ஜன்மம்? நான் என்ன பயங்காளியா?

[இப்படி சொல்லிக்கொண்டே கிருஷ்ணன் மடுக் கரையில் இருந்த ஓர் மரத்தின்மேலேறி மடுவில் குதிக்கிறான். உடனே அந்தக் காளீய ஸர்ப்பமானது அவனைப் படத்தால் அடிக்கிறது. இதற்குள் இதைப் பார்த்த கருப்பன், ராமன், முதலிய பாலர்களெல்லாரும், "ஐயோ வந்து விட்டதே ஆபத்து கிருஷ்ணனுக்கு! இதென்ன விபரீதம்!" என்று சொல்லிக்கொண்டே, ஊரில் நந்தகோபர் முதலியவர்களுக்குத் தெரிவிக்க ஓடுகிறார்கள்.]

# பதின்மூன்றாவது காட்சி.

---

## விஷபோக மர்த்தன யோகம்.

*(நந்தகோபர், பலராமர், யசோதை, ரோகிணி, இன்னும் அநேக கோபர்களும் கோபஸ்திரீகளும் கருப்பன் குளா-றோடு யமுனா நதியைப் பார்க்க ஓடிவருகிறார்கள். அப்பொழுது சிறிது தூரத்தில் கிருஷ்ணன் காளீயனுடைய படத்தின் மேல்பாகத்தில் நர்த்தனம் செய்து கொண்டிருப்பதைக் காண்கிறார்கள்.)*

### யசோதை.

இதென்ன மஹத்தான விபத்து! அதோ பாருங்கள், கிருஷ்ணன் பாம்பினிடம் அகப்பட்டுக்கொண்டிருப்பதை!

### நந்தகோபர்.

*(உற்றுப் பார்த்து)*

கிருஷ்ணன் மேலும், பாம்பு கீழுமாக இருக்கிறாப்போல தெரிகிறதே. கிருஷ்ணன் பாம்பினிடம் அகப்பட்டுக் கொண்டானா, பாம்புதான் கிருஷ்ணனிடம் அகப்பட்டுக்கொண்டதா?

### யசோதை.

ரொம்ப அழகாயிருக்கிறது! நம்முடைய செல்லக் குழந்தை அந்த மஹா ஸர்ப்பத்தினிடம் அகப்பட்டுக் கொண்டிருக்க, இதென்ன தர்க்கம் இது?

நந்தகோபர்.

நாம் அவ்விடம் போய்தானென்ன செய்யக்கூடும்? கல்லால் எறியலாமா, தடியால் அடிக்கலாமா? நாம் என்ன செய்யலாம்? பகவான் தானே காப்பாற்ற வேண்டும்!

யசோதை.

இது நல்ல வேதாந்தம்! எப்போ பார்த்தாலும் பகவான் பகவானென்று சொல்லிக்கொண்டிருந்தால் கிருஷ்ணன் காரியம் முடிந்துவிடும்.

நந்தகோபர்.

பகவத் சங்கல்பமில்லாமல் நீதான் இப்போ்க் கொத்த அஸாத்தியமான காரியத்தைச் செய்து முடிக்கப்போகிறாயா? உம்! உம்! பெண் புத்தி சபலம். என்ன செய்யலாம்?

யசோதை.

வா, ரோகிணீ, நாம் போகலாம்

[எல்லாரும் அவசரமாயப் போகிறார்கள் ].

## பதினைன்காவது காட்சி.

# துஷ்ட நிக்கிரஹ யோகம்.

(நந்தகோபா, யசோதை, முதலானவாகள காளீய மடுவின் கரையைச் சேருகிறாாகள. அதறகுள கிருஷ்ணன கரை சேர்ந்து சிரிததுககொணடு நிறகிறான.)

யசோதை.

(கிருஷணனைப பாாதது தாவிவநது கட்டிககொணடு)

ஆஹா, என கணணே, என செலவமே, உனனை உயிரோடு காணபபோகிறோமா எனறு இருநதேன! அநத மஹா ஸர்பபத்தினிடமிருநது எபபடி தப்பிப பிழைததாய?

கிருஷ்ணன்

தபபிப் பிழைத்தது நானு அமமா? அநதப பாம்பல்லவோ தப்பிப் பிழைதது ஓடிவிடடது! போனுப் போகிறதெனறு விட்டுவிட்டேன இநத மடுவை விட்டுத் துரததி விடடேன குஞசு குடடியோடே! நீஙகளெலலாருமு தூரத்தில் ஒருவதைப் பார்த்து பயப்படபபோகிறீாகளோ யெனறு கடைசி-யாய் ஒரு உதை உதைத்துத துரததிவிட்டேன!

நந்தகோபா.

எல்லாம் பகவத கிருபை!

யசோதை.

ஆமாம், உனனை எங்கே கடித்தது பாம்பு?

கிருஷ்ணன்.

அததாலே கடிககவே முடியல்லேயமமா! அது வெகு நாளாக இருக்குது எனகிறாகளே : அதுககு பல்லெல்லாம் விழுநது போசசோ எனனமோ! அதுவுமல்லாமல முதலில கடிகக வநதது வலக கையை. அதை நான உடனே கலலாட்டமா கெட்டியாய் பண்ணிக்கொணடு விட்டேன. அதறகுக் கடிக்கவே முடியவிலலே. ஒண்ணு இரணடு பல் இருநததுகூட அப்போ விழுநது போயிருககுமமமா. அதன வாயில ரததங்கூட வநதது.

ரோஹிணி.

எதோ காணபி கையை! (கையைப பாாதது) ஒரு அடையாளஙகூட இல்லேயே! அபபுறம?

கிருஷ்ணன்.

அது கடிக்க முடியாத போகவே அதன வாலேப் பிடிததுச சுத்தலாம என்று நான கிட்டே போனேன். அதறகுள் அது சீறிககொண்டு வாலாலேயும உடம்பாலேயும என்னேக கால் முதல் தலே வரையில் கெட்டியாய்க் கட்டிவிட்டது. 'சரி, கட்டட்டும்' என்று நான் ஒடுங்கியிருநதேன். அது இன்னும பிகிய ஆரம்பித்தது. அபபடிப பிகிஞ்சானதும உடமபைக் கொஞ்சம் அசைக்கிக் கொஞ்சம உபபினேன். உபபினவுடனே பிகிஞ்சு கட்டியிருநத பாமபின் உடல் பட் பட் என்று வெடித்தது. அதைப் பொறுககமாட்டாமல் அது கட்டை அவிழ்த்துவிட, நானும் விசாலமாயிருநத அதன் படத்தின் மேலே ஏறிக்கொண்டேன். இடக்

கையிலுல அதன வாலைக கெட்டியாய் பிடித்துக கொளளவே அது ஒனறும செயவதறகிலலாமலபோய்-விடடது. அநத நாததனத்தை நீ பாரத்திருககறுயும அமமா. எனன நனருக கூததாடினேன தெரியுமா! முதலில் ஆயிரம தலையாடடமாயிருநதது அபபுறம நூறுபோல தோனறறது. கடைசியில எணணிப பாரததேன ஐநதுதான இருநதது. நான செயத நாததனததிலே ஐநது முகததாலும ஐநது விதமான விஷம ககககிவிடடது. அபபோதான அநேக பாமபு-களெலலாம், அதின சமசாரம போலத தோணிதது, பயநதுகொணடு தூரததிலிருநது பாரததுககொணடு அநதப பெரிய பாமபை விடடுவிடுமபடி எனனை வேண்டுவதுபோல இருநதது. உடனே நீஙகள வருவது பாரததேன்! ஒரே உதறுய உதறிவிடடு, அதுகளையெலலாம தூரததி விடடு, ஒரே குதியாய கரையில் குதிதது விடடேன

ரோஹிணி

எனனடா கிருஷ்ணு. இதென்ன மாயம! நீ மடுவிலே குதிசசேனெனகிருய், கொஞசமகூட ஈர-மிலலையே இபபோ?

கிருஷ்ணன்

பெரியம்மா! அதுவா? நான மடுவிலிருநததெல்லாம இரணடு மூனறு விநாடிதான இருககும. பாம்பு படத்தில நாததனநதான ரொமப நாழி நடநதது. அதறகுள் நலல காறறடிதது எல்லாம உலாநது போயிறறு.

யசோதை.

ஏதோ, இந்த மஹத்தான ஆபத்திலிருந்தும் தப்பிப் பிழைத்தாய். தெய்வந்தான் உன்னைக் காப்பாற்றிற்று.

கிருஷ்ணன்.

மற்று யாரம்மா?

யசோதை.

இப்படி நித்திய கண்டமாக ஒரு பிள்ளை இருக்குமா!

கிருஷ்ணன்.

நித்யமாவது என்ன, அநித்தியமாவது என்னம்மா? முன்னேதான் ஜோஸ்யர் சொல்லியிருக்காரே, யதேஷ்டமா ஆயுசு இருக்குமென்று.

யசோதை.

என்ன ஆயுஸ்ஸோ? இப்படியெல்லாம் சங்கடப் பட யாராலே ஆகிறது?

கிருஷ்ணன்.

சங்கடப்பட்டாதானே பிறகு சுகம்!

கருப்பன்.

கிருஷ்ணா! இதெல்லாம் சரி, இந்திரனும் சேஷனும் எங்கே?

நந்தகோபர்.

அதோ கிடக்கிறார்களே மடுக் கரையில்! என்ன? செத்துப்போய் விட்டார்களா என்ன?

கிருஷ்ணன்.

நான் இருந்தும் அவாளை சாகவிடுவேனா என்ன? எல்லாத்துக்கும் கிருஷ்ணன் இருக்கான்னுதானே மடுவிலே இறங்கினாகளாம்!

நந்தகோபர்.

என்ன! பிரக்ஞை தப்பியிருக்கிறார்களா? அப்படியானால், ஏதாவது தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

கிருஷ்ணன்.

வேண்டாமப்பா! அவாகள பயத்தினாலும் இளைப்பினாலும் அப்படிப் படுத்துக்கொண்டிருக்கிறாகள இதோ பார், நான் கூப்பிட்டால எழுந்து வந்துவிடுவாரகள். இந்திரா! சேஷா!

[கிருஷ்ணன கூப்பிட்டவுடன இந்திரனும சேஷனும கணவிழிதது எழுந்திருந்து ஏதோ திகபிரமை பிடிதத வாகள போல, உடனே கிருஷ்ணனைப் பாரததும் 'ஹா, கிருஷ்ணா" என்று இருவரும கூபபிட்டுக கொணடே அவனைக கட்டிககொளகிறாகள.]

நந்தகோபர்.

இனிமேல் நாம் இங்கே இருக்க வேண்டாம். வெய்யில் அதிகமாகிறது. வீடுபோய்ச் சேரலாம் வாருங்கள். பகவத் கிருபையால் எல்லாம் மங்களமாகவே முடிந்தது.

கிருஷ்ணன்

அது மாத்திரமல்ல. பாம்புகள் எல்லாம் மடுவை விட்டு ஓடிப்போய் விட்டன.

குள்ளன்.

ஆஹா, கிருஷ்ணா! இனிமேல் பயம் இல்லாமல் ஸ்நானம் பண்ணலாமா?

கிருஷ்ணன்

இனிமேல் குள்ளன்கூட ஸ்நானம் செய்யலாம்!

[எல்லாரும் போகிறார்கள்.]

## பதினைந்தாவது காட்சி.

## தத்வ நிர்ணய யோகம்.

(பிருந்தாவனத்தில் ஆயர்பாடிக்கு அருகில் ஓர் ஸ்தலம்)

சாயங்காலம்

(நந்தகோபர், உபநந்தர், பட்டணத்தான் முதலான அநேக வயதான கோபாலர்கள் மறுநாள் செய்வதாக உத்தேசித்திருந்த இந்திரோத்ஸவத்திற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கிறார்கள். கிருஷ்ணன், பலராமன் இருவர்களும் வருகிறார்கள்.)

கிருஷ்ணன்.

என்னப்பா விசேஷம் நாளைக்கு? என்னமோ உத்ஸவமாமே, நாளைக்கு? யாருக்கு?

நந்தகோபர்.

என் கண்ணே, கிருஷ்ணா! நாளைக்கு இந்திரோத்ஸவம். கோகுலத்தில் இருக்கும்வரையில் வருஷா வருஷம் வைபவமாகச் செய்து வந்தோம். பிருந்தாவனத்திற்கு வந்த பிறகு இதுவரையில் செய்ய சௌகர்யமில்லை. இந்த வருஷமாவது செய்ய வேண்டும் என்று ஆரம்பித்திருக்கிறோம்.

கிருஷ்ணன்.

இந்திரோத்ஸவம் என்றால் என்ன அப்பா?

பலராமன்.

என்னடா, கிருஷ்ணா? இந்திரோத்ஸவம் என்றால் இந்திரனுக்கு உத்ஸவம்.

கிருஷ்ணன்.

இதெல்லாம் எனக்கென்ன தெரியும் அண்ணா? நான் சின்னவன் தானே. இந்திரோத்ஸவம் நான் எப்பவும் பண்ணதும் இல்லே, பார்த்ததும் இல்லே. இந்திரோத்ஸவம் என்றால் என்ன பண்ணரது?

உபநந்தர்.

மஹேந்திரனைக் குறித்து ஓர் பிரதிமை செய்து, அதில் மஹேந்திர தேவதையை ஆவாஹனம் செய்து, அதற்குப் பூஜை, நைவேத்தியம் எல்லாம் கொடுத்து, எல்லாரும் சந்தோஷமாக உத்ஸவம் கொண்டாடுவது.

கிருஷ்ணன்.

ஆமா, தாதா! அந்த மஹேந்திரன் என்கிறது யார்?

உபநந்தர்

பிள்ளாய் கிருஷ்ணா! மஹேந்திரன் என்பவன் திரிலோகாதிபதி, தேவராஜா: ஸ்வர்க்கத்தில் ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டிருப்பவன்.

கிருஷ்ணன்.

ஆமா, தாதா, இந்திரனுக்கு மேலே ஒருத்தரும் இல்லேயா?

உபநந்தர்.

இருக்கிறார்கள். திருமூர்த்திகள் இருக்கிறார்கள்.

கிருஷ்ணன்.

அவர்களுக்குள்ளே ?

உபநந்தா.

ஸ்ரீமந்நாராயணன் தான்.

கிருஷ்ணன்.

அவருக்கு மேலே ?

உபநந்தர்

ஒருவரும் இல்லை.

கிருஷ்ணன்.

அப்படியானால் அவருக்கு உத்ஸவம் பண்ணாமல் இந்திரனுக்குப் பண்ணுவாளோ ? மகாராஜாவுக்கு மரியாதை பண்ணாமல் அவன் சேவகனுக்குப் பண்ணுவது போல இருக்கிறது நீங்கள் செய்கிற காரியம் !

நந்தகோபர்.

கேட்டீரோ உபநந்தரே, கிருஷ்ணன் சொன்ன வார்த்தையின் ஆஸ்சரியமான தத்துவத்தை ? நான் அவனுடைய குழந்தைப் பருவமுதல் கவனித்திருக்கிறேன். அவனுடைய பால ஜலபிதங்களும், அர்த்த காப்பமாகவே தவனிக்கின்றன. நாம எல்லோரும் வைஷ்ணவர்கள் அல்லவா ? அப்படியிருக்க பரதேவதையான அந்த ஸ்ரீமந் நாராயணனைத் தவிர, தேவதாந்தரத்தை நாம வணங்ககூடுமோ ? இது விஷயத்தில எனக்கும வெகு நாளாய் மனதில ஓர குருகுருப்பு இருந்தபோதிலும ஏதோ பிராசீன சம்பிரதாயத்தை ஒட்டி நடக்கட்டுமென்று இருந்துவிட்டேன்.

கிருஷ்ணன இவவிதம சொன்னபிறகும நாம அதை கவனியாது விடுவது தோஷமாகும. அதுவுமன்றி கிருஷ்ணனிடததில அவனுடைய குழநதைப பருவம முதல ஏதோ தெயவாமஸம இருககிறதாகவே நான நமபி யிருககிறேன அவனுடைய அறபுதமான சரிதைகளைப பாரததாலே தெரியவிலலையோ?

உபநநதா.

அதெலலாம இருககட்டும, நநதகோபரே! நாம வைஷ்ணவாகள எனபது நிஜநதான. ஆனால இநதிரனை உபாஸிததாலும அவனுக்கும அநதாயாமியாயும நியநதாவாயும இருககிற ஸ்ரீமந நாராயணனைத்தானே உபாஸிககிறோம.

கிருஷ்ணன்.

அய்யய்யோ! இது நலல வேடிககை! இதுக்குத் தான துமபை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறது எனகிறது! ஆனால தாதா அநத ஸ்ரீமந நாராயணன அணுமுதல அணடம வரையில எலலாவறறிறகும அநதாயாமியென்று காரியர் சொல்லி யிருககிறாரே எனக்கு. எல்லாததுக்குமதானே அநதாயாமி?

உபநநதர்.

ஆமாம, அதற்கெனன?

கிருஷ்ணன்.

அதறகெனனவா? அபபடியானால இதோ நிறகிற கோவாத்தனத்திற்கு யாா அநதாயாமி?

உபநந்தர்

அந்த ஸ்ரீமந் நாராயணன்தான்.

கிருஷ்ணன்.

ஆனால் இந்த கோவர்த்தனத்திற்கு ஏன் உத்ஸவம் பண்ணக்கூடாது? அதை ஏன் உபாஸிக்கக் கூடாது?

உபநந்தர்.

அப்படியல்ல, கிருஷ்ணா! நீ கெட்டிக்காரன்தான்! ஆனாலும் இந்திரனால் நமக்கு எவ்வளவு சௌகர்யங்கள் நேரிடுகின்றன?

கிருஷ்ணன்

சௌகர்யமா! இந்த கோவர்த்தனத்தால் நமக்குக் கிடைக்கிற லாபங்கள் கணக்கெண்ணி முடியுமா? அதிலிருந்து நல்ல காற்று, நல்ல ஜலம், பழம், புஷ்பங்கள், காய் கனிகள் · வீடுகள் கட்டிக்கொள்ள சகல வஸ்துக்கள்: மாடுகள் ஒதுங்கி நிற்க வேண்டிய நிழல்: அபாரமான நல்ல மேய்ச்சல் · இன்னும் எத்தனையோ நமக்கு உபகாரமாக ஏற்பட்டு இருக்கிறதே!—அதுவும் இடையர்களான நமக்கு. இது எங்கே, இந்திரன் எங்கே? இதை யெல்லாம் யோசித்தீரா? (நந்தகோபரைப் பார்த்து,) எனக்கென்னவோ அப்பா, இந்த கோவர்த்தன மலைமேலே ரொம்ப இஷ்டம். பேரைப் பாரு எவ்வளவு நன்றாயிருக்குது, **கோவர்த்தனம்!** நாமெல்லாம் கோபாலர்கள். அது கோவர்த்தனம். நாமெல்லாம் அதைத்தானே உபாஸிக்கவேணும்?

நந்தகோபர்.

என்ன உபநந்தரே, இதற்கென்ன பதில் சொல்லுகிறீர் ?

உபநந்தர்.

இந்த கோவர்த்தனம் ஒரு ஜட வஸ்து. ஆனாலும் கிருஷ்ணன் சொல்லுவதால் அது திரிலோகேஸ்வர னுக்கும் மேலாய்விடுமோ ?

கிருஷ்ணன்.

ஸ்ரீமந் நாராயணன் அந்தர்யாமியாம் ! இத்தனை பரம உபகாரங்கள் செய்கிறதாம் ! ஆனால் ஜடமாம் ! ரொம்ப நன்னாயிருக்குது. ஜடம் எதுவோ அதுதான் எனக்குத் தெரியவில்லை !

உபநந்தர்.

ஆனால் நந்தகோபரே, புத்திர வாக்கிய பரிபாலனம் செய்துவிடும் ! இந்திரோத்ஸவத்தை நிறுத்திவிட்டால் இந்திரனுக்குக் கோபம் வந்து நமக்கெல்லாம் ஓர் மஹத்தான விபத்து நேரிடச் செய்தால் அப்பொழுது தெரியும்.

நந்தகோபர்.

ஆனால் இந்திரனுடைய கோபத்திற்கு பயந்து தான் இந்திரோத்ஸவம் செய்யவேண்டுமோ ? அது நம்முடைய மதத்திற்கு விரோதமாயிற்றே ?

உபநந்தர்.

அதெல்லாம் எனக்கு சம்மதமில்லை.

நந்தகோபர்.

வெறுமே சம்மதமில்லை யென்றால் நியாயத்தை-யும், தர்மத்தையும் அனுசரித்ததல்லவோ சொல்ல வேண்டும்?

உபநந்தர்.

நாளைக்கே மஹேந்திரன் கோபாகாரந்தனாய் ஏதாவது நமக்கொரு கெடுதலை ஏவிவிட்டால்? அப்பொழுது இந்த கோவர்த்தனம் ரக்ஷிக்கும்!

கிருஷ்ணன்.

ஆனால் அது ரக்ஷிக்காதென்று உமக்கு நிஸ்சயமோ?

உபநந்தர்.

ஹாஹா! அது ஆடி ஆடி, ஓடி ஓடி, தேடித் தேடி ரக்ஷிக்கும்!

கிருஷ்ணன்.

ஆனால், அப்பா, அப்படியே செய்வோம்: கோவர்த்தனத்திற்கே உத்ஸவம் செய்யலாம் அப்பொழுது அது ரக்ஷிக்கிறதா இல்லையா பார்ப்போம்! நம்பிச் செய்தால் ரக்ஷிக்காமல் விடுமோ அப்பா?

உபநந்தர்.

சரி, பார்த்தால் எல்லாம் தெரிகிறது!

கிருஷ்ணன்.

பார்த்தால் கூடத் தெரியாமல் போய்விடுமா? ஆனால் அப்பா, நாளைக்கு இந்திரோத்ஸவமில்லை கோவர்த்தனோத்ஸவம், என்று எல்லாருக்கும் தெரிவிக்கக் கட்டளையிட்டுவிடுங்கள்!

நந்தகோபா.

அப்படியே ஆகட்டும், பட்டணத்தாரே, அவ்விதமே விளம்பரம் செய்துவிடும்!

கிருஷ்ணன்.

வாருங்கடா, பையன்களா, நாளைக்கு நம்ம கோவர்த்தனத்திற்கு உத்ஸவம்!

"ஜய, ஜய கோவர்த்தன!"

[பிள்ளைகள் எல்லாரும் "ஜய ஜய கோவர்த்தன" என்று கூவிக்கொண்டு போகிறார்கள். எல்லாரும் போகிறார்கள்.]

## பதினாறாவது காட்சி.

---

## சிஷ்ட பரிபாலன யோகம்.

(கோவர்த்தன பர்வதத்தின் அடிவாரம், சாயங்காலம்.)

(தோரணங்களும், பொங்கல் சட்டிகளும், பழம் புஷ்பம் முதலானதுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. பர்வதபூஜை ஆய்விட்டது. கோபர்களும், கோப ஸ்திரீகளும் கோவர்த்தனத்தின் பெருமையைப் பற்றிப் பாடுகிறார்கள்.)

"ஜய ஜய ஜய ஜய கிரி கோவர்த்தன,
ஜய ஜய விஜயீ பவநீ,
க்ஷிதிதர பசுபதி கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ,
ஜலநிதி தருமய கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ,
நமதுரி சுரபசு கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ,
சுரபதி பதமுள கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ,
அமரவர துதிபெறு கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ,
சுகமிடு வரமலி கிரி கோவர்த்தன
ஜய ஜய விஜயீ பவநீ.

கிருஷ்ணன்.

தாதா உபநந்தரே, அதோ கோவர்த்தனத்தின் சிகரத்தில் ஓர் தேவதா ஸ்வரூபம் தெரிகிறதா?

உபநந்தர்.

(கையால் கண்களை மறைத்துக்கொண்டு உற்றுப் பார்த்து.)

எனக்கு வயசு ஆயிறதோ இல்லையோ, கண்கள் நன்றாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு தேவதையாகத் தான் தெரிகிறது. இதென்ன ஆஸ்சரியம்!

கிருஷ்ணன்.

அதுவா? ஜடம் என்று சொன்னீரே இந்த கோவர்த்தன பர்வதம், அதின் தேவதை!

நந்தகோபர்.

இதென்ன பரமாஸசரியமாக இருக்கிறது! நம்மை யெல்லாம அநுக்கிரஹிப்பது போல தோன்றுகிறது

உபநந்தர்.

அப்படியும ஒரு தேவதை உண்டா என்ன?

கிருஷ்ணன்.

என்ன தாதா. ஸ்ரீமந நாராயணன எல்லாவற்றிலும அந்தர்யாமி என்று சொன்னீரே: அப்படியானல் ஜட பதார்த்தம் என்று ஒன்று இருக்குமோ? எல்லா வஸ்துக்களுமே அவனுடைய விபூதிகள என்றும், இந்த விஸவமே அவனுடைய ரூபமென்றும், கார்கியர் எனக்குச் சொலலிக்கொடுத்தாரே! உங்களுக் கெல்லாம் அந்தப் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லையா?

உபநந்தர்.

என்னமோ கிருஷ்ணா, உன்னுடைய காரியங்களும் வார்த்தைகளும் மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த இந்திரோத்ஸவத்தை நிறுத்தினதைப்பற்றி எனக்கு மனதில் பயம் மாத்திரம் தீரவில்லை.

கிருஷ்ணன்.

எல்லாத்துக்கும் கோவர்த்தனேஸ்வரன் இருக்கிறான். பயப்படாதேயும்!

[அதற்குள் மகா பயங்கரமான இடிகள் இடிக்க, மின்னல்கள் மின்ன, பிரளய காலம் போல இடித்துக்கொண்டு மழைபெய்ய ஆரம்பித்தது.]

உபநந்தர்.

பார்த்தாயா கிருஷ்ணா! இது யாருடைய வேலை என்று நினைக்கிறாய்? இது மஹேந்திரோத்ஸவத்தை நிறுத்தினதற்காக கோபங்கொண்டு அவன் ஸப்த மேகங்களையும் கூப்பிட்டு நம்மை யெல்லாம் சிக்ஷிப்பதற்காக இப்படிச் செய்கிறான் போலும்

கிருஷ்ணன்.

(சிறிது யோசித்து)

ஹோ, ஹோ, அப்படியா? அதற்கு இப்போ என்ன செய்யலாம்?

உபநந்தர்.

என்ன செய்வதா? இன்னும் இந்த் பிருந்தாவனத்தில் அநேகம் குடும்பங்களுக்கு வீடே சரியாக

ஏற்படவில்லை. ஏற்பட்ட வீடுகளும் இப்பேர்ப்பட்ட மழைக்குத்தாங்காது. இத்துடன் யமுனை வெள்ளமும் வந்து விட்டால் மாடு கன்றுகளுடனும், பெண்டு பிள்ளைகளுடனும் ஒரே காலத்தில் எல்லாரும் மோக்ஷம் அடைந்துவிடலாம். ஏன், இப்போ உன் கோவர்த்தனத்தை ரக்ஷிக்கச் சொல்லேன்'

கிருஷ்ணன்.

ஆமாம், தாதா, அதுதான் நல்ல யுக்தி, நன்றாய் ஞாபகப்படுத்தினீர். அதுவே நல்ல யோசனை. நான் இந்த கோவர்த்தனத்தையே வேண்டிக்கொண்டு அதனடியில் இடங்கொடுக்கச் செய்கிறேன். இதோ பாரும் தாதா!

[என்று சொல்லி அடிவாரத்தில் இருக்கும் ஓர் கல்லருகில் போய்]

கோவர்த்தனமே! இந்தப் பிரளய கால மழையினின்றும், இப்பொழுதுதான் உன்னுடைய மஹோத்ஸவத்தை செய்து முடித்த கோபர்களையும் கோபஸ்திரீகளையும், அவர்களுடைய மாடு கன்றுகளையும் நீ தான் இடங்கொடுத்துக் காப்பாற்றவேண்டும்!

[என்று சொல்லி முன்னிருந்த கல்லை கிருஷ்ணன் தூக்கவும், மலையே அசைவது போல இருக்கிறது. அப்படியே அந்த கல்லை உயரத் தூக்கி கிருஷ்ணன் நிற்க உள்ளே பெரிய தோர் குகையைப் போல ஓர் பிரதேசம் தென்படுகிறது.]

கிருஷ்ணன்.

தாதா, பார்த்திரா. இதோ இங்கே எல்லாரையும் மாடு கன்றுகளோடு வந்துவிடச் சொல்லுங்கள். வேண்டிய இடம் இருக்கிறது. எத்தனை காலம் வேண்டுமானாலும் வசிக்கலாம். சீக்கிரம் வரச் சொல்லுங்கள்!

உபநந்தா

ஆமாம், கிருஷ்ணா, அது நல்ல யோசனைதான். ஆனால் ஒரு வேளை மலை தலைமேல் விழுந்துவிட்டால்?

கிருஷ்ணன்.

எல்லாருக்கும் அதே விதமாய் ஒரே தலை விதி இருந்தால்தானே மலை அப்படி விழும், அப்படி சாவது நிச்சயமானால், அலையில் அகப்படுவதை விட மலையில் அகப்படுவது கூடாதோ? அதுவுமல்லாமல் பாரும், தாதா, இதோ நான் இப்படித் தூக்கிக்கொண்டிருக்க, மலை எப்படி கீழே விழும்?

உபநந்தா.

ஆமாம், கிருஷ்ணா, நீதான் ரக்ஷகன்!

[என்று சொல்லி கோபர்களையும் கோப ஸ்திரீகளையும் கோவர்த்தனத்தின் அடிவாரத்தில் வந்து தங்கும்படி கூப்பிடுகிறார்.]

இந்த கோவர்த்தனேஸ்வரனுடைய திருவடி-வாரத்தில் ஒதுங்கிடம் விசாலமாக இருக்கிறது. அது தவிர, வேறொரு ரக்ஷண ஸ்தானம் இல்லை. வாருங்கள், வாருங்கள், எல்லாரும் வந்து சேருங்கள்!

[என்று சொல்லி கூவியழைக்க, எல்லாரும் சிலர் சிலராய் உள்ளே போகிறார்கள்.]

## பதினேழாவது காட்சி.

### ஸமாராதன யோகம்.

(பிருந்தாவனத்தில் யமுனா நதிக்கரையில் ஓர் பிரதேசம்:- மத்யான்னம்.)

(கிருஷ்ணன், பலராமன், இன்னும் அநேக இடைப் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்திருக்கிறார்கள்.)

கருப்பன்

டேய், என்னடா இப்படி சோம்பேறிகளாய் உட்கார்ந்துகொண்டிருந்தால்? மாடு கன்னெல்லாம் எங்கேயோ, காணோம், கண்ணுக்கெட்டின தூரம் வரையில்! எங்கேயோ போய்விட்டது! நாம் இங்கே சோம்பேறிகளாக உட்கார்ந்துகொண்டிருந்தால் மாடுகள் காணாமல் போகும். சாயங்காலம் வீட்டுக்குப் போனால் நமக்கெல்லாம் நல்ல பூசைதான்.

சேஷன்.

கொஞ்ச நாழிகைக்கு முன்னே அதோ அந்த மூலையிலே கிருஷ்ணன் புல்லாங்குழல் கேட்டுதடா. மாடு கன்னெல்லாம் எங்கே போயிருக்கும்? அங்கே தான் போயிருக்கும்!

இந்திரன்.

அடே போடா, கிருஷ்ணன் இருக்க நமக்கென்ன பயம்?

கருப்பன்

ராமனும் கிருஷ்ணனும் என்று சொல்லடா! பலராமன் கூட அந்த ராக்ஷசர்களைக் கொல்லவில்லையாடா?

சேஷன்.

மாடு கன்றையெல்லாம் நாம் தேடுவானேனடா? கிருஷ்ணனைக் கொஞ்சம் புல்லாங்குழல் வாசிக்கச் சொன்னால் எல்லாம் இங்கே ஓடி வந்து விடுகிறது, எங்கே இருந்தாலும்.

கிருஷ்ணன்.

என்னடா கிருஷ்ணன் உங்களுக்கெல்லாம் வேலைக்காரனடா?

சேஷன்.

நீதான் ராஜா, நீதான் வேலைக்காரன், நீதான் எல்லாமடா.

பலராமன்.

என்னடா, நாழி பதினைந்து ஆச்சே! உங்களுக்கெல்லாம் பசிக்கவில்லையா? என்னென்னடா கொண்டு வந்திருக்கிறீர்கள் சாப்பிட?

[ஒருவரும் பதில் சொல்லாமல் இருக்கிறார்கள்]

கிருஷ்ணன்.

என்னடா, ராமண்ணா கேட்கிறார், ஒருவரும் பதில் சொல்லவில்லை! இந்திரா, நீ என்னடா கட்டிக் கொண்டு வந்திருக்கிறாய்?

இந்திரன்.

எங்கள் வீட்டில என்ன இருக்கும்? தயிருஞ் சாதமதான கொண்டு வநதிருக்கேன.

கிருஷ்ணன்.

அதறகுமேல ருசியானதும ஆரோக்கியமுமான சாபபாடு என்னதான இருக்கிறதடா? இபபடிக கொணடுவா உன மூட்டையை. அடே கருப்பா, உன மூட்டையில் என்ன இருக்குது!

கருப்பன்

என் மூட்டையிலா? நேறறு எங்க வீட்டிலெ முறுக்குச சுத்தினுங்கோ, அதுதான கட்டி அனுபபி-யிருக்கிறாகள். வேறு ஒன்றும இல்லே

கிருஷ்ணன்.

எங்கே உன் மூட்டையைக கொண்டுவா. முறுக்குக்கு மேல் முடுக்கான பக்ஷணம் என்ன இருக்குது? குள்ளா, உங்கள் வீட்டில் என்ன கொடுததனுப்பி ஞாகள?

குள்ளன்.

எங்கள் வீட்டில் இன்றைக்கு ஒரு விரதம். அதறகு அபபம சுட்டார்கள். அதுதான கொடுத தனுப்பியிருப்பார்கள.

கிருஷ்ணன்.

ஓ, அபபமா? அது அதிரசமாசசே, கொண்டு வநது வை இப்படி! சேஷா, உன் மூட்டையிலே என்ன இருக்குது? அவிழ் பாாபபோம்.

சேஷன்

அன்றைய தினம் உங்கள் வீட்டில் சீடை என்று உருண்டை உருண்டையாகப் பண்ணினீர்களே, அது சாப்பிட்டது முதல் ஆசையாக இருந்தது, இன்றைய தினம் பண்ணச் சொல்லிக் கொண்டு வந்தேன்.

கிருஷ்ணன்.

சீடையா, பலே! சிற்றுண்டிக்கு சீடைக்குறை ஒன்றுமில்லை. எல்லாருமே உங்கள் உங்கள் மூட்டை யெல்லாம் ஒன்றாய்க் கொண்டுவாருங்கள். அதை யெல்லாம் நாம் எல்லாரும் எல்லாவற்றையும் ஸரி ஸமானமாகச் சாப்பிட்டு விடலாமடா. அடே ராமா! நீயும் குள்ளனும் போய் அந்தத் தோப்பிலிருந்து களாப் பழம், பிரப்பம் பழம், நாகப் பழம், புளியம் பிஞ்சு, இன்னும் என்னென்ன இருக்குதோ அதை யெல்லாம் பறித்துக் கொண்டு வாருங்கள் சீக்கிரம்!

[ராமனும் குள்ளனும் போகிறார்கள்.]

கிருஷ்ணன்.

ராமனும் குள்ளனும் திரும்பி வந்ததும் சாப்பிட லாம். அது வரையில் என்ன செய்யலாம் சொல்லுங் கள் பார்ப்போம்.

கருப்பன்

வம்பு பேசலாம்.

பலராமன்

இருக்கிற வம்பு போதாதோ ?

(அந்தருணத்தில் சிறிது தூரத்தில் நிரம்ப வயது முதிர்ந்த தாடி நரைத்த கிழவர் ஒருவர் கண் தெரியாமல் தட மாடிக்கொண்டு, தான் வைத்துக் கொண்டிருக்கும் தடியினால் தடவித் தடவி கிருஷ்ணன் முதலானவர் இருக்குமிடம் நோக்கி வந்துகொண் டிருக்கிறார்.)

கருப்பன்.

இதென்னடா, இது, மிருகமா, மனுஷ்யனா ?

இந்திரன்.

இது பிசாசா, ராக்ஷசனா ?

சேஷன்.

கிழமும் குருடுமாய்த்தான் இருக்கிறது.

கருப்பன்.

ஒன்றையும் நம்பக்கூடாதடா ! ஏய் பையன்களா, ஜாக்கிரதையா யிருங்கள்! கிருஷ்ணா, இது யாரென்று உனக்குத் தோன்றுகிறது ?

கிருஷ்ணன்.

யாரோ பாவம், பழைய நாளைய மனுஷன் போல இருக்கிறது. நடு மத்தியானத்திலே கண் தெரிய வில்லை போல இருக்கிறது. ஆனால் இந்தக் காட்டில்

நாம் இருக்கும இடம தெரிநதுதான வருகிறுப் போலும தான இருக்கிறது. வரட்டும, நன்றுய் விசாரிக்கலாம்.

(அதறகுள கிழவா கிட்டேவர)

பலராமன்

யாரையா, தாதா, எநத ஊா நீங்கள் ?

கிழவா.

என பேரையா கேட்கிறீாகளா ?

இந்திரன்.

அடேடே, காது கூட கேட்கவில்லை போல இருக்கிறதடா.

குள்ளன்

இதிலே என்னமோ சூது இருக்குமடா. காது கேட்கல்லை. கண தெரியலலை. நம்மிடம இநதக் காட்டிலே இநதக கிழம வருவதேனடா ?

கிழவா.

ஐயா, இது என்ன ஸதலம ?

கிருஷ்ணன்.

(உரதத குரலுடன.)

தாதா, இதுதான பூலோகம.

கிழவா

இன்னும அப்படியே தானு இருக்கிறது ?

கிருஷ்ணன்.

காது கேட்காவிட்டால கண் தெரியாவிட்டால பூலோகம ஸ்வாகலோகமாயப் போய்விடுமா என்ன?

கிழவர்.

என்னோடு பேசுகிறவர் இன்னுரென்று தெரிய வில்லையே, சொலலலாமோ?

கிருஷ்ணன்.

சொன்னுல் தெரியுமானுல் சொல்லாமலே தெரிநது கொள்ளலாம! அதிருக்கட்டும. நான கேட்டதறகு பதில சொலலும தாதா.

கிழவர்

ஆமாம் அப்படியும ஒரு அர்த்தம ஏறபடக்கூடும. இநத பூலோகததில் நடககிற அநியாயஙகளைப் பாரா மலும் கேட்காமலுமே இருநதால் அதுவும ஒரு மோக்ஷம் தானே ஆனுல் அநத அர்த்தத்தில நான சொலல வில்லை! இஙகே ஒரு ஊர் இருககிறதாம், அதை கோகுல மெனறோ பிருநதாவனமெனறோ சொல்லுகிறுாகளாம். அஙகே போகிற அசுரர்கள் எல்லாம் நாசமடைகிறுர்கள் எனறு மதுரையில வதநதி பெரியதாயிருநதது. அபபோர்கொத்த ஸ்தலம ரொமப புணய பூமியாக இருக்கவேண்டும, எனக்கு வயசு ஆசசே, அஙகே போய்ச சேரலாம, என்று வநதேன்.

பலராமன்.

ஆனுல, நீா அசுரா ஆனுல், உடனே சொல்லும். நறபகலித்து—நநதிலமித்து—உடனே மோக்ஷம் கொடுத்து விடுகிறோம!

3345



கிழவர்.

நான் சுரனுமன்று, அசுரனுமன்று, அப்பா.

கிருஷ்ணன்.

ஆனால் மனுஷ்யனா?

கிழவர்.

மனுஷ்யனென்று சொல்லிக்கொள்ளக்கூட வெட்கமாய்த்தானிருக்கிறது. என்ன மனுஷ்யன்? காதுதவாத செவிடு. கண் பாராத குருடு. கிட்டினாலும் எட்டாத சக்தி. என்னத்தைச் சொல்வேன்?

கிருஷ்ணன்.

உங்கள் ஊர் எது தாதா?

கிழவர்.

எனக்கு ஊரென்று ஒன்றில்லை. என்னைத் திரிலோக சஞ்சாரி என்பர்.

கிருஷ்ணன்.

தாதா, உங்கள் பேரையாவது சொல்லலாமோ என்னமோ?

கிழவர்.

இந்த லோகத்திலே சிலர் தாதாவைப் பேரனென்றும், மற்றும் சிலர் பேரனை தாதாவென்றும் சொல்லுகிறார்கள்.

கிருஷ்ணன்.

பெண்டாட்டி பிள்ளைகள் உண்டா?

கிழவர்.

நான் நைஷ்டிகப் பிரமமசாரியாயிற்றே!

கிருஷ்ணன்.

பிரம்மசாரிக்கு இஙகென்ன வேலை?

கிழவர்.

இங்கேதான் வேலையாய் வநதேன்.

கிருஷ்ணன்.

அப்படியா—அதென்ன வேலை?

கிழவர்.

அதுவா! இஙகே ஒருவர் இருக்கிறாராம், அவருககு மாயம், மநதிரம, வைத்தியம் எல்லாம் தெரியுமாம். அவரைக்கண்டு என் வியாதிகளைத் தீர்தது ரக்ஷிப்பாரா என்று ஆசையுடன் வநதேன்.

கிருஷ்ணன்.

அப்படியும் ஒரு வைத்தியர் இருக்கிறாரா? அவர் பெயர் தெரியுமா உமக்கு?

கிழவா.

பெயரா? எத்தனையோ சொன்னார்களே. கடைசியான பெயா கோவிந்தனும். ஸ்வர்க்கலோகத்தில் கேள்விப்பட்டதாக சமாசாரம.

கிருஷ்ணன்.

ஸ்வர்க்கலோகத்திலா? அதெப்படி?

கிழவா.

அதுவா ?—அது ஒரு பெரிய கதை. ஆனால் சுருக்கிச் சொல்லுகிறேன் இந்திரனுக்கு எதோ உத்ஸவம் செய்யாமல் விட்டுவிட, அவனுக்குக் கோபம் வர, சப்த மேகங்களையும் கொண்டு வாஷித்தானும் ஒரே வெள்ளமாக! அப்பொழுது இந்த மாயாவி கோவர்த்தன பர்வதத்தையே எடுத்து குடையாய்ப் பிடித்து மாடு மனிதர்களை யெல்லாம் காப்பாற்றி-னானும். அதற்கு இந்திரன் லஜ்ஜைப்பட்டு அபராத க்ஷாபணம் செய்துகொண்டு அவருக்கு கோவிந்தன் என்றும் பட்டாபிஷேகம் செய்தானும்.

சேஷன்.

அவரா ? — அவர்தான்——

கிருஷ்ணன்.

சேஷா, நடுவில் பேசாதே. (வாயை மூடியிருக்க சைகை செய்கிறான்.)

கிழவர்.

என்ன அப்பா அந்த மஹா வைத்தியர் இங்கே இருக்கிறாரா ? எனக்கு சொல்லக்கூடாதா தயவு செய்து ?

கிருஷ்ணன்.

அவரிங்கே இருந்தால் உமக்கென்ன வேணும் ?

கிழவா.

நீதானே அப்பா—நான் அப்பொழுதே நினைத்

கிருஷ்ணன்.

ஆனால நான் வைத்தியனல்லவே.

கிழவர்.

ஏனப்பா பொய் சொல்லுகிறாய் இந்த கிழவனுக் காக ?

கிருஷ்ணன்.

என வாயில் வருவது ஒன்றும் பொய்யாகாது.

கிழவர்.

ஓகோ, எனக்குத் தெரிந்துவிட்டது. பொய்யை-யும் மெய்யென சாதிககும மாயாவி நீதான், நான் தேடி வநத வைத்தியன் தெரிநது விடடது. நான் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இனிமேலும என்னை மோசம் செய்யாதே. ஒபபுக்கொள்ளு !

கிருஷ்ணன்.

என்னவென்று ஒப்புக்கொள்ள வேண்டும ?

கிழவர்.

நீ வைத்தியன்தான் என்று.

கிருஷ்ணன்.

எனககு வைததியம்கூடத் தெரியுநதான. அது-வும் சில பொய் வியாதிகளை நிவர்த்திக்கிற விஷயத்தில் நிஜமான சக்தியுண்டு.

கிழவர்.

இந்தக் காயமே பொய்யானல் வியாதி வேறா-யிருக்குமோ ?

கிருஷ்ணன்.

அதிருக்கட்டும். உமக்கென்ன வியாதி இப் பொழுது?

கிழவர்.

எத்தனை யென்று சொல்வேன்: முக்கியமாய் எனக்கு மூன்று பெரிய வியாதி ஏற்பட்டிருக்கிறது. அந்த மூன்றையும் தீர்த்துவிட்டால் பரமோபகாரமா யிருக்கும்.

கிருஷ்ணன்.

அந்த மூன்றும் என்னவென்று சொல்லும் தாதா.

கிழவர்.

எனக்கு தீராப் பசி ஒன்று. எப்பொழுதும் எவ் வளவு சாப்பிட்டாலும் தீராத, திருப்தி யடையாத, பசி.

கிருஷ்ணன்.

ஊம்—இரண்டாவது?

கிழவர்.

கண் சரியாய்த் தெரிகிறதில்லை. பிரமை யுண்டா-கிறது அடிக்கடி. பிரத்தியக்ஷமெல்லாம் அப்பிரத்தி யக்ஷம் போலவும் அப்பிரத்தியக்ஷமெல்லாம் பிரத்தி யக்ஷமாயும் இருக்கிறது. காலம் அப்படியிருக்கிறது.

கிருஷ்ணன்.

ஊம் — மூன்றாவது?

கிழவர்.

சுருதி தாறுமாறாய்விட்டது. விபரீதமாயிருக்கிறது. கேள்வி இல்லாததெல்லாம் கேள்விபடுகிறது. கேழ்க்க வேண்டியது காதில படுகிறதில்லை. என்ன செய்யலாம? அதுவும் காலம!

கிருஷ்ணன்.

மூன்றும் முடிநததா? முதலாவது தீராப பசியைப்பற்றிச் சொன்னீரே அது ஒரு காம வியாதியாக இருக்கவேண்டும. நீர நைஷ்டிக பிரம்மசாரி என்று சொனனீரோ இல்லையோ? அதனால் வநத விபரீதம்! வர்ணாச்ரம தர்மததை நேராக அனுசரிக்காமல் க்ருஹஸ்தாசரமததை விட்டு விடடீரோ இல்லையோ? க்ருஹத்திலிருநது நாலுபருக்கை சாதம் போட்டிருந்தால் இநத வியாதி வந்திருக்குமா? எல்லாம் நீராகவே சாப்பிட்டுக்கொண்டிருநதால்?

கிழவர்.

அதற்கு இப்போ என்ன செய்யலாம?

கிருஷ்ணன்.

தாதா, நான் சொன்னால் கோபிக்க வேண்டாம். இப்போ கலியாணம் பண்ணிக்கொண்டீரானால் இந்த வியாதி தீர்நது விடும்.

கிழவர்.

என்னை யாரப்பா இப்போ கலியாணம் பண்ணிக்கொள்வா?

கிருஷ்ணன்.

நீர்தான யாரையாவது கலியாணம் பண்ணிக் கொள்ளுமே?

கிழவர்.

இநதக் கிழத்தை எநத ஸதிரீ மதிதது ஒபபுக் கொள்வாள்?

கிருஷ்ணன்.

ஆனா தாதா நீா என்னைக கலியாணம பணணிக கொளளுகிறீரா?

கிழவர்.

ஹாம! நீ புருஷனாசசேயப்பா!

கிருஷ்ணன்.

சரி, புருஷனென்று நான வேணடாமானால் இன்னும எஙகேயாவது பார்ததுககொளளும

கிழவா.

எல்லாததுக்கும கொடுததுவைககணும

கிருஷ்ணன்.

அது கிடக்கிறது தாதா, நாஙகளெல்லாம இப்போது சாப்பிடததானிருநதோம. அதறகுள் நீர் வநதீர். எஙகள அன்னததை சாப்பிடுவதா-யிருந்தால் எங்களோடு சாபபிட்டு பசிதீர்ததுக கொள்ளலாம.

கிழவர்.

அன்ன தாதா சுகிபவ! அது மட்டுக்கும் அவ்வளவாவது கிடைக்கிறதே.

கிருஷ்ணன்.

ஆமாம் தாதா, இரண்டாவது வியாதி சொன்னீரே, கண் சரியாகத் தெரியவில்லை யென்று. இதோ பாரும், நான் தெரிகிறதா உமக்கு ?

கிழவர்.

[கையால கணகளுககு மேல மறைத துககொள்வதுபோல உறறுப்பாாதது.]

நீரா !

கிருஷ்ணன்.

நான் சிறுவனதானே நீ யென்று கூப்பிடலாம்.

கிழவர்.

ஆமாம், அதுதான சரி. நீ! நீ!! எதோ, நன்றாகத் தெரியவில்லை, மப்பாகத்தானிருககிறது. சூர்யனை ஒரு கருடபு மேகம மறைததால எப்படி இருக்குமோ அப்படித தெரிகிறது.

கிருஷ்ணன்.

கண்ணில் தோஷம ஒனறும இருபபதாகத் தெரியவில்லையே. ஒவ்வொரு கண்ணுக்கு ஒவ்வொரு விதமாய்த்தான் தெரியும எல்லாம. வெளியே இருப்பது உள்ளே தெரிந்தாலதானே எலலாம தெரிநததாகும்? ஆகையால் தாதா எண்ணத்தின மேலே கண்ணு யிருநதால் கண்ணைப்பற்றி எண்ண வேண்டும்.

கிழவர்.

இது, என்ன? புது வைத்தியமோ, புதிர் வைத்தியமோ ?

கிருஷ்ணன்.

இது புதிசுமன்று, புதிருமனறு தாதா ! புராண வைததியமும புறககடை வைத்தியமும இதுவேதான.

கிழவர்

சரி, மகா வைததியரே ! காதுககு எனன வழி ?

கிருஷ்ணன்

நான தானிருககேனே, சொலலுகிறேன கேளும். காதைத திமிருகத் தனியே இஷ்டபபடி விடடு விடடாலதான நீர சொனன தாறுமாறெல்லாம நேரிடும ஆதலால, தாதா, காதை ஆட்டி ஆட்டி மனஸவிலே வைத்துவிட்டால காதுககு வேணடியதை வேணடிக்கொள்ளலாம. வேணடாததை வேணடாது வெறுக்கலாம.

கிழவா.

அதுவும ஒரு நலல வழிதான.

கிருஷ்ணன்

இநத வழிவிடடால வேறு வழியும கிடையாதே.

கிழவர்.

சரி, நான வநத காரியமாசசு, நான போகலாமா ?

கிருஷ்ணன்.

என்ன தாதா, எலலாத்துக்கும் வைத்தியங் கேட்டீரே, உமம கிழத்தனம போகிறதற்கு வைத்தியம் வேண்டாமோ ?

கிழவர்.

வீடு வா எனகிறதே. இப்போ என்ன யௌவ னத்தாலாக வேண்டியது ?

கிருஷ்ணன்.

வீடு போவென்றால கிழததனம போகலாமோ இல்லையோ ?

கிழவர்.

எனக்கு அதெல்லாம என்னத்துக்கு ? நான வந்த வழி போய்ச சேருகிறேன.

கிருஷ்ணன்.

என்னண்டை வந்து விட்டு வந்த வழி போவார் களோ ?

[என்று சொலலிககொண்டே கிருஷ ணன் கிழவருடைய நரைதத தாடியை யும, ஜடையையும பிடுஙகிவிட்டு போாததிருநத போாவையையும தளளி விடுகிறான. உடனே கிழவா வேஷம் பூணடிருநத நாரதா சிரிததுககொணடு கிருஷணனைப் பார்தது 'கோவிநத நாம சஙகீாததனம' என்று சொலல, இடைப்பிள்ளைகளெலலாம், 'கோவிந தா, கோவிநதா' என்று அனுவதிக கிறார்கள. உடனே நாரதர், "ஜய ஜய கோகுலபால" என்ற கீர்ததனத தைப் பாடி யாடிக கொண்டே கிருஷ் ணனைப் பிரதக்ஷிணஞ்செய்து போகப் பிரயததனப்பட, அப்பொழுது.]

கிருஷ்ணன்

என்ன நாரத மஹாரிஷே! தீராப் பசி தீர்ந்து விட்டதோ, அல்லது எங்களுடன் கலந்து எங்கள் உணவை சிறிது புசிக்க அந்த புனித வயிற்றில் ஏதாவது இடம் இருக்குமோ?

நாரதர்.

வேண்டுதலும் வேண்டுமோ அவா வேண்டுவதற்கு. இதுதான் தத்துவமாக ஸமாராதனம் எனப்படுவதாகும். வாருங்கள் போவோம் யமுனா நதிக் கரைக்கு. இந்த யமுனை பண்ணின பாக்கியமே பாக்கியம்.

[திரும்பவும் நாரதர் "ஜய ஜய கோகுல பால" பாடிக்கொண்டே போகிறார். கோகுல பாலர்கள் தங்கள் தங்கள் ஆகார மூட்டைகளை எடுத்துக் கொண்டு போகிறார்கள்.]

## பதினெட்டாவது காட்சி.

## ஆநந்த ஐக்கிய யோகம்.

(பிருந்தாவனத்தில் யமுனாநதிக் கரையில் பூஞ்சோலை- யில் ஓர் ரமணீயமான பிரதேசம்)

இரவு: பூர்ண சந்திரிகை.

அநேக கோபஸ்திரீகள் தங்கள் தங்களை நன்ருய் அலங் காரஞ் செய்துகொண்டு அங்கே வந்து சேர்ந்திருக்கிருர்கள்.

ராதை.

மாயக்கார கிருஷ்ணன் எங்கேயோ மாயமாய்ப் போய்விட்டானேடி! நீ பார்த்தனையோ நீளா?

நீளா.

நீயா என்னைக் கேட்கிருய்? நான் உன்னைக் கேட் கலாமென்றல்லவா வந்தேன்? திருடன்ஞ திருட்டு மணி அவன். என்னுடன் என்ன சொன்ஞன் தெரி யுமா உனக்கு? நான் உன்னை விட்டு எப்பவும் பிரிய மாட்டேனென்ருன். அடுத்த க்ஷணத்திலே எங்கே- யோ காணேம், மறைந்து விட்டான்.

ராதை.

உனக்கு வெறுமே சொன்ஞன். எனக்கு சத்தி யம் பண்ணிக் கொடுத்தானே, என்னை விட்டு எங்கே யும் போகவே மாட்டேனென்று. நல்ல சத்திய மூர்த்தி இந்தக் கிருஷ்ண மூர்த்தி!